# ஈஸ்வர சிந்தனைச் சுடர்

(10 கட்டுரைகளின் தொகுப்பு)

வெளியீடு
நியந்த்ரீ
சிவன் கோவில், நல்லூர்,
யாழ்ப்பாணம்.
26.01.2003

# ஈஸ்வர சிந்தனைச்சுடர்

(10 கட்டுரைகளின் தொகுப்பு)

16.12.2002 அன்று அமரத்துவமடைந்த

**பாரத்வாஜகோத்திரம்**

**பிரம்மஸ்ரீ பத்மநாப ஐயர் சர்வேஸ்வர ஐயர்**

**அவர்களது**

**கட்டுரைகளின் தொகுப்பு**

**வெளியீடு**

**நியந்த்ரீ**

**சிவன் கோவில், நல்லூர்,**

**யாழ்ப்பாணம்.**

**26.01.2003**

# முன்னுரை

அறிவு எனும் கல்விப்பயனால் பெறும்தேட்டம் என்றும் எல்லோரையும் நல்வழிப்படுத்தும் பெருஞ்செல்வமாகத் திகழ்கின்றது. இச்செல்வம் என்றும் தேய்வடையாத சிறப்புடையதும், என்றும் வளர்ந்துவரும் தனித்துவமுடையதுமாகும். அத்தகைய செல்வமாக 16.12.2002 அன்று அமரத்துவமடைந்த பாரத்வாஜ கோத்திரம் பிரம்மஸ்ரீ வத்றோப ஐயர் சர்வேஸ்வரஐயர் அவர்களது ஆக்கங்கள் ஈஸ்வரசிந்தனைச்சுடர் எனும் நூலுருவில் வெளிவருகின்றது.

உலகம் போற்றும் ஆசிரியப்பணியில் தம்மை ஒருவராக இணைத்துக் கொண்ட இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக விளங்கிய காலம் முதல் யாழ்ப்பாணக் கல்லூரியிலும், வட்டு இந்துக்கல்லூரியிலும் கற்பிக்கும் காலங்களிலும், ஆசிரியராகப் பணியாற்றிய காலங்கள் வரையாவும் தாம் ஓய்வு பெற்றதன் பின்னரும் எழுதிய ஆக்கங்கள் பல. அவற்றுள் தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து ஆக்கங்களே இந்நூற்தொகுதியால் இடம் பெறுகின்றது.

இந்நூலுவாக்கத்திற்கு உதவிய யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதியும், நியந்த்ரீயின் தலைவருமான பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கட்கும் யாழ் பல்கலைக்கழக சம்ஸ்கிருதத்துறை விரிவுரையாளரும் நியந்த்ரீயின் உபதலைவருமான பிரம்மஸ்ரீ . கிருஷ்ணாந்த சர்மா அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோன்.

நியந்த்ரீயின் ஆரம்பகால உறுப்பினர்களுள் ஒருவராக விளங்கிய அந்நாளின் நினைவாகவும், நியந்த்ரீயின் வெளியீடாகவும் வெளிவரும் இந்நூலினை அச்சுப்பதித்துத்தந்த நல்லூர் பிள்ளையார் அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

அமரர் பிரம்மஸ்ரீ ப. சர்வேஸ்வர ஐயர் அவர்களது ஆக்கம் பலவற்றுள் சிலவற்றை சிந்தனைகள் வெளிக்கொணருகின்றோம். இந்நூலினைப் படித்து பலரும் பயனடைவார்களாக.

# நீங்காத நினைவலைகள்

**பேராசிரியர் கலாநிதி. ப. கோபாலகிருஷ்ண ஐயர்**
இந்துநாகரிகப் பேராசிரியர் கலைப்பீடாதிபதி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
தலைவர், நியந்திரி – சிவன்கோவில் – நல்லூர்.

எமது அந்தண குலத்திலகமாக விளங்கிய ஓய்வுபெற்ற பேராசிரியர் இலக்கிய கலாநிதி அமரர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களின் அரவணைப்பில் உருவாகி வரும் எமது அன்பிற்குரியவருமான பிரம்மஸ்ரீ ப. சர்வேஸ்வர ஐயர் அவர்களது மறைவினால் அனைவரும் துயருற்றிருக்கும் இவ்வேளையில் அவரைக் காலந்தோறும் நினைவு கூரத்தக்க வகையில் அவரது ஆக்கங்களைத் தாங்கிய சிந்தனைச் சுடராக இந்நூல் வெளிவருவது மன ஆறுதலைத் தருகின்றது.

பேராசானின் மருகராகிய அமரர் பிரம்மஸ்ரீ பத்மநாதன் ஐயர் சர்வேஸ்வர ஐயர் பாரத்துவாஜ கோத்திரத்தைச் சேர்ந்தவர். முன்னேஸ்வரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரது தந்தையாராகிய அமரர் பிரம்மஸ்ரீ சிவராமகிருஷ்ண ஐயர் பத்மநாத ஐயர் கொழும்பில் சரஸ்வதி புத்தகசாலை அதிபராக விளங்கியவர். இவரது தாயார் பேராசானின் தந்தையாகிய சிவஸ்ரீ கார்த்திகேசு குருக்கள் அவர்களது புத்திரியாகிய கமலாம்பிகை அம்மாள் ஆவார். இவர் நல்லூரைச் சேர்ந்தவர். எனவே பிரம்மஸ்ரீ சர்வேஸ்வர ஐயர் பேராசானின் வழி வந்தவர் என்பதோடு மாத்திரமன்றி கல்வியிலும் ஏனைய துறைகளிலும் அவரது வழிகாட்டலில் உருவாக்கப்பட்டவர். நல்லூர் 06.02.1936 இல் பிறந்த பிரம்மஸ்ரீ சர்வேஸ்வர ஐயர் 16.12.2002 அன்று நல்லூரிலேயே அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு மனக்கலக்கமுற்றோம்.

அறுபத்தேழு வருடங்களைக் கொண்டதாக அவரது வாழ்வு அமைந்தது.

தமது மாமனாரின் வழி பிரம்மஸ்ரீ ஐயர் அவர்கள் சேர்.பொன். இராமநாதன் அவர்களால் உருவாக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரியில் தமது ஆரம்பக் கல்வியைப் பெற்றார். பின்னர் தமது மாமனாராகிய பேராசான் குருக்கள் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத்தில் கண்டி தர்மராஜக் கல்லூரியிலும் கல்வி பயின்று பின்னர் யாழ்ப்பாணம் ஸ்டான்லிக் கல்லூரி என்றழைக்கப்பட்ட கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் தமது கல்வியைத் தொடர்ந்தார். இதனைத் தொடர்ந்து தமது மாமனாரிடத்தே சமஸ்கிருதக் கல்வி கற்று லண்டன் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி நிலையில் பட்டதாரியானார். தமது பட்டப்பின் படிப்பை தொடரும் நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரித்துறையில் 'அப்பர் தேவாரம் கூறும் சமயமும் தத்துவமும்' என்ற தலைப்பில் ஆய்வு செய்து முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். பட்டதாரி ஆசிரியராகத் திகழ்ந்தமையினால் கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழையும் (னுணி னை நுனரஉயவழை) பெற்றார். தமது ஆய்வினைத் தொடரும் நோக்கில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டத்திற்கான பதிவினை மேற்கொண்டு "காரணகமம் கூறும் கிரிமை மரபுகள்" என்ற தலைப்பில் ஆய்வின் ஆரம்ப வேலைகளைத் தொடங்கிய போதும் இப்பிரதேச சூழ்நிலை காரணமாக அம்முயற்சி நிறைவேறாது போயிற்று.

பிரம்மஸ்ரீ ஐயர் அவர்களது வாழ்க்கைத் துணைவியர் ஸ்ரீமதி சரோஜா வட்டுக்கோட்டை பிரம்மஸ்ரீ அனந்த சுப்ரமணிய ஐயர் அவர்களது புத்திரிகளில் ஒருவராவார். இவர் சிறந்ததொரு குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது சகோதரர்கள்

சிறந்த கல்விமான்களாகத் திகழ்ந்தமையினால் பிரம்மஸ்ரீ ஐயர் அவர்களும் திருமணத்தின் பின் சீரும் சிறப்புடனும் தமது இல்லற வாழ்வில் விளங்கினார். இவருக்கு மூன்று புதல்வியரும் ஒரு புதல்வரும் உள்ளனர். இவரது மூத்த புதல்வி ஆசிரியையாவர். தமது கணவருடன் கொழும்பில் வசித்து வருகின்றார். இரண்டாவது புதல்வி திருமணமாகி இலண்டனில் தமது கணவருடன் வசிக்கின்றார். இவரது மூன்றாவது புதல்வி கலைத்துறையில் ஈடுபாடு கொண்டு வீணை வாத்தியத்தில் இசைக்கலைமாணி பட்டம் பெற்று இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் ஆசிரியப்பணியில் ஒப்பந்த அடிப்படையில் உள்ளார். இவரது புதல்வர் பிரம்மஸ்ரீ பத்மநாதன் பேராசானின் குருகுலத்தில் சம்ஸ்கிருத கல்வி மற்றும் சமயஞ்சார்ந்த பயிற்சி ஆகியவற்றைப் பெற்றவர். பின்னர் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று போது எனது மாணவனாக விளங்கினார். தந்தை வழி சமஸ்கிருத மொழியில் சிறப்புப்பட்டம் பெற்று அத்துறையில் ஆர்வமுடன் ஈடுபட்டுவருபவர். கடந்த இரு வருடங்களில் யாழ் பல்கலைக்கழக சமஸ்கிருத துறையில் ஒப்பந்த விரிவுரையாளராகப் பணியாற்றியவர்.

பிரம்மஸ்ரீ சர்வேஸ்வர ஐயர் தமது வாழ்நாளில் பல்வேறு கல்வி நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவம் மிக்கவர். தொடக்க காலத்தில் பேராதனை இலங்கைப் பல்கலைக்கழத்தில் சமஸ்கிருதத் துறையில் இருவருடங்களாக உதவி விரிவுரையாளராகப் பணியாற்றிய பின்னர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பட்டப்பின்படிப்புப் பிரிவில் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். அதனைத் தொடர்ந்து அக்கல்லூரியில் உதவி நூலகராகவும் பணிபுரிந்தவர். இத்தகைய பணிகளைத் தொடர்ந்து நீண்ட காலம் வட்டு இந்து கல்லூரியில் ஆசிரியராகவும் உப அதிபராகவும் ஓய்வு பெறும் வரை பணியாற்றியபெருமை இவருக்குண்டு. 1992 ஆம் ஆண்டில் யாழ் பல்கலைக்கழக

சமஸ்கிருத்துறை வருகை விரிவுயாளராகவும் பணியாற்றியுள்ளார். தொலைக்கல்வி வளர்ச்சியிலும் பிரம்மஸ்ரீ ஐயர் அவர்கள் ஆசிரியராகத் தமது பங்களிப்பை நல்கியுள்ளார். யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கத்தில் பண்டிதர் பயிற்சி நெறி சார்ந்தவர்களுக்கு சமஸ்கிருத பாடத்தைப் பயிற்றுவித்தார்.

பிரம்மஸ்ரீ ஐயரவர்களுடைய ஆக்கங்களாகிய பத்துக் கட்டுரைகள் இச்சிந்தனைச்சுடரை அலங்கரிக்கின்றன. இவை எமது பண்பாடு, மொழி, கல்வியியல் சார்ந்த விழுமியங்களை அறிய உதவுவன. 'வேத ரிஷிகளும் மந்திரங்களும்', 'சீனப்பண்பாட்டு வளர்ச்சிக்கு உதவிய நாடு பாரதம்', 'சிவாகம மரபில் மூர்த்தியலங்காரம்', 'பொலநறுவை கால பௌராணி சைவம்', போன்ற கட்டுரைகள் குறிப்பிடற்பாலன. அவரது கல்வியியல் ஆய்வாக அமைவது 'அப்பர் தேவாரம் கூறும் கல்விச் சிந்தனைகள்' என்ற கட்டுரையாகும். பிரம்மஸ்ரீ ஐயர் அவர்களது ஆய்வுப் புலமைக்கு இவை சான்றாக உள்ளன.

பிரம்மஸ்ரீ சர்வேஸ்வர ஐயர் அவர்கள் தமது குலமரபிலிருந்து சற்றும் பிழாது வாழ்ந்த பண்பாளர். எளிமை, அடக்கம், அன்பு, சகோதரத்துவம், பணிவு ஆகிய குறை நலன்களுக்கு உதாரண புருஷராக விளங்கியவர். தமது குடும்பத்தைக் கண்போல் பாதுகாத்து தமது பெண் குழந்தைகளுக்கு எதிர்கால வாழ்வுக்குரிய கல்வியறிவூட்டியும் தமது புதல்வராகிய பிரம்மஸ்ரீ பத்மநாதனை தமது பணியைத் தொடரும் நிலையில் வழிகாட்டி உருவாக்கியும் தம் கடமைகளைச் சரிவர நிறைவேற்றிய கர்மவீரன். இவையாவற்றுக்கும் மேலாக யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வெளிவாரி மாணவர்களுக்கும் இவர் சற்றும் சளைக்காமல் சமஸ்கிருத மொழியைப் புகட்டி வந்தார். இவரிடம் கல்வி பயின்று அந்தண குல மாணவர்களும் ஏனையோரும்

இன்று தம் பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்து பட்டதாரிகளாக உள்ளனர். அத்தகையோர் வரிசையில் இன்று யாழ் பல்கலைகழக சமஸ்கிருதத்துறை விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா அவர்களை உதாரணமாகக் கூறலாம். சமஸ்கிருத மொழியைப் பயின்ற மாணவர்கள் அவரிடம் பெரும் ஈடுபாடு கொண்டு இம் மொழியைக் கற்றுவந்தனர். தமது மாமானரது வழிகாட்டலில் தம்மிடத்தே சிறந்ததொரு நூலகத்தை இல்லத்தில் உருவாக்கயிருந்தார்.

பிரம்மஸ்ரீ சர்வேஸ்வர ஐயர் அவர்களுக்கும் எனக்கும் நாற்பது வருடங்களுக்கு மேலான தொடர்பு இருந்து வந்தது. எமது குருநாதர் ஓய்வுபெற்ற பேராசிரியர் அமரர் பிரம்மஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் அவர்களிடம் நான் மாணவனாக சமஸ்கிருதம் பயின்ற காலத்தில் இவரும் எனது சகபாடியாக விளங்கினார். பேராசானோடும் என்னோடும் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகளில் பரீட்சகராக விளங்கி பெரும் பங்காற்றியவர். என்மீது அளவற்ற அன்பும் அபிமானமும் கொண்டு விளங்கிய பின்னர் உறவினராகி பாசத்துடன் பழகி வந்தார். அவருடன் பழகிய நாட்கள் இன்றும் என் உள்ளத்தில் நீங்காத நினைவலைகளாக உள்ளன. பேராசானதும் கண்டி அம்மாவினதும் பாசத்திற்கு உரியவராக விளங்கிய இவரை அவர்கள் அன்புடன் 'தம்பி' என்றழைப்பர். இவரது பிற்கால வாழ்வுக்கு வழியமைத்துக் கொடுத்த பெருமை இப்பேராசான் தம்பதியர்க்கே உரியது. பேராதனையில்நீண்டகாலம் இவர் என்னோடு அன்புடன் பழகியவர். நான் யாழ் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்து வருகின்ற இக்காலத்திலும் எனது இல்லத்திற்கு வரத் தவறுவதில்லை. வட்டுக்கோட்டைக்குத் துவிச்சக்கர வண்டியில் செல்லும் வேளை என்னைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டவர். நல்லூர் சிவன் கோவிலில் நடைபெறும் சமய நிகழ்ச்சிகளின் போது கலந்துகொண்டு மனநிறைவு காண்பவர்.

சுகவீனமுற்ற காலத்திலும் கூட எனது நிகழ்ச்சிகளில் தவறாது பங்குகொண்டு மகிழ்ச்சியடைவார்.

இவரது தந்தையாரது பிறந்த ஊராகிய முன்னேஸ்வரத்திலும் இவர் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார். ஸ்ரீ முன்னேஸ்வர ஆலயத்தில் நடைபெறும் சமய நிகழ்ச்சிகளிலும் பக்தியுடன் பங்குகொள்பவர். தமது மாமனாரைப் போன்று ஸ்ரீ வடிவழகிகை வழிபடுவதில் இன்பம் காண்பவர். அதே போன்று நல்லூர்க் கந்தன் மீதும் நல்லூர் ஸ்ரீ கமலம்பிகை சமேத கைலாசநாத சுவாமி மீதும் அளவற்ற பக்திபூண்டவர். தேவை யேற்படும் காலங்களில் தமது குலத்தொழிலாகிய குருத்துவத்தை மேற்கொண்டவராவர். எத்தகைய பெருமையுமின்றி மிகவும் பக்தியுடனும் அடக்கத்துடனும் அப்பணிகளை மேற்கொள்வார். இவரது வாழ்நாளில் நல்லூர், முன்னேஸ்வரம், வட்டுக்கோட்டை, கொழும்பு ஆகிய இடங்களோடு கொண்டிருந்த தொடர்பினால் பரந்தொரு சமூகப்பிணைப்பை ஏற்படுத்தியிருந்தார். நல்லூர் சிவன் கோவில் ஆதீன கர்த்தராகவும் ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தான ஆதீன கர்த்தராகவும் விளங்கிவரும் அவரது இளைய மாமனராகிய பிரம்மஸ்ரீ இரத்தின கைலாசநாதக்குருக்கள் அவர்களிடம் கொண்டிருந்த பற்றினால் நல்லூரில் இவர் வாழ்ந்த காலத்தில் அவரது வழிகாட்டல்களும் இவரது ஆளுமையை வளர்ந்தன. எத்தகைய சலிப்புமின்றி தமது உறவினர்களினதும் அன்பு நெஞ்சங்களிலும் இல்லங்களுக்குச் சென்று அவர்களது உறவைப் பேணிவருவதில் பிரம்மஸ்ரீ ஐயர் கண்ணுங்கருத்துமாக இருந்து வந்தார். இது அவருடைய சிறந்த பண்புகளில் ஒன்று எனக்கூறின் மிகையில்லை. அவர் அண்மைக்காலத்தில் சுகவீனமுற்று இன்னலுற்ற போது இத்தகைய தொடர்புகள் படிப்படியாக குறையலாயின.

இத்தகைய சிறந்த குணநலன்களும் பண்புகளும் கொண்ட பிரம்மஶ்ரீ சர்வேஸ்வர ஐயர் சிறந்ததொரு ஆசிரியனாகவும், கல்வி மானாகவும், எம்மிடையே நிறைவான வாழ்வு வாழ்ந்த ஒருவராவார். இன்று அவர் அமரராகிவிட்டார். மானிட வாயுவின் நியதி இதுவே என நினைத்து மனச்சாந்தியடைவோமாக. அவரது நினைவுகள் காலத்தால் மறைந்து போகாமல் செய்யும் நோக்கில் அவரது குடும்பத்தினர் சார்பாக எமது நியந்தீரியின் அனுசரணையுடன் இந்நினைவு நூல் வெளிவருகின்றது. எமது நியந்தீரியின் ஆரம்ப கால உறுப்பினர்களில் ஒருவராக விளங்கிய இவருக்கு நாம் செலுத்தும் மனப்பூர்வமான நினைவஞ்சலியாகவும் இது அமைகின்றது.

அன்னாரது ஆன்மா ஸ்ரீ கமலாம்பிகை சமேத கைலாசநாதப் பெருமானின் திருவடிகளில் சாந்தி பெறுவதாகுக என மனதாரப் பிரார்த்தித்து இம்மலரை அவரது நினைவாக நியந்தீரி அன்னையின் பாதக் கமலங்களில் பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்

ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம், நல்லூர், ஸ்ரீ கைலாசநாதசுவாமி தேவஸ்தானம் ஆகியவற்றின் பிரதான குருவும் தர்மகர்த்தாவுமான

***சிவஸ்ரீ கா. இரத்தின கைலாசநாதக்குருக்கள்***

***அவர்களது***

# நீங்காத நினைவலைகள்

எனது மருமகன் சர்வேஸ்வர ஐயர் மறைந்தசெய்திகேட்டு அதிர்ச்சியடைந்தேன். என்னுடைய 12, 13 வயசிவது கிட்டதட்ட 1938, 1939ம் ஆண்டுகளில் நான் முதல் முதல் கொழும்புக்கு சென்ற பொழுது அங்கு என் அக்கா கமலாம்பாளுடன் தங்கிருந்தேன். அப்பொழுதுதான் சர்வேஸ்வர ஐயர் பிறந்து சிறுகுழந்தையாக இருந்தான். சிரித்து விளையாடி ஒவ்வொருவருடனும் தாவி மகிழ்வூட்டிக்கொண்டிருந்தான். அதிலிருந்து அதாவது குழந்தையாயிருக்கும் பொழுது தாயை இளந்து அதன் பின் என் அத்தை அமிர்தவல்லி எம்மைத்துனி சுந்தரவல்லி இவர்களால் வளர்க்கப்பட்டு மங்கையர்க்கரசி வித்தியாலயத்திலும் அதன் பின் பரமேஸ்வரக் கல்லூரியிலும் கல்வி கற்றான். முதலில் அமிர்தவல்லி அம்மா (அமுதாம்மா) காலமானார். பின்னால் சுந்தரவல்லி அம்மாவால் சர்வேஸ்வரன் வளர்க்கப்பட்டு வந்தான். அமிர்தவல்லி அம்மா காலமாகுமுன் தமையன் பரமேஸ்வர ஐயர் கொழும்புக்கு தன் தகப்பனாருடன் வசிக்கப்போய்விட்டான். அதன் பின் சுந்தரவல்லி அம்மா காலமானவுடன் சர்வேஸ்வரஐயர் தன் மூத்த தாய்மாமன் பேராசிரியர் கைலாசநாதக்குருக்களுடன் பேராதனையில் வாழ்ந்து B.A(Hons) வரை படித்தான். அதன் மேல் வட்டுக்கோட்டை அனந்தசுப்பிரமணிய ஐயர் மங்களம்மா ஆகியோரின் கடை மகள் சரோஜாவை மணம் முடித்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணம் கல்லூரி பட்டதாரி மாணவர்களுக்கு விரிவுரை ஆசிரியராக கடமை புரிந்தார்.


இதன் பின் இந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி கழகம் யாழ்ப்பாணம் சர்வகலாசாலைப் பிரிவில் சேர்ந்த பிறகு வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி ஆசிரியராகவும் உதவி அதிபராகவும் கடமையாற்றி ஓய்வுபெற்றான். இவ்வளவும் என் மனதில் பதிந்துள்ளது.

கொழும்பில் பிரபல புத்தகக்கடை சரஸ்வதி புத்தகசாலை ஸ்தாபகர் பத்மநாப ஐயருக்கும் கமலாம்பாளுக்கும் புத்திரனுக்கு கமலாம்பிகை (அம்பிகா) சோபனா, மோஹன், பத்மநாபஐயர், கல்பனா என்ற நான்கு பிள்ளைகள் உண்டு. இவர்கள் என் அக்கா கமலாம்பிகையின் மூலம் எனக்கு கிடைத்த பேரப்பிள்ளைகள்.

ஆண்டாண்டு அழுது புரண்டாலும் இம்மாநிலத்தே வேண்டாம் நமக்கும் இவ்வழியே.

எனது மருமகன் சர்வேஸ்வரன் அவர்களது ஆத்மா ஸ்ரீவடிவாம்பிகா சமே ஸ்ரீ மூன்னநாதசுவாமி திருவடிகளிலும், ஸ்ரீகமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதசுவாமி திருவடிகளிலும் உறைந்து உங்களுக்கு என்றும் நல்வழி காட்டுவார் எனக்கூறி அவரது ஆத்மா சாந்தியடை பிரார்த்திக்கின்றேன.

கா. இரத்தின கைலாசநாதக்குருக்கள்



பாரத்வாஜகோத்திரம்

## பிரம்மஸ்ரீ பத்மநாப ஐயர் சர்வேஸ்வர ஐயர்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06.02.1936 | 16.12.2002 |

## பிரம்மஸ்ரீ பத்மநாப ஐயர் சர்வேஸ்வர ஐயர் அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

என்றுங் குன்றாத பெருமதிப்புடைய கல்விச் செல்வத்தை எம்மனோர்க்கு வாரி வழங்கும் பெருநோக்குடன் தாம் கற்ற கல்வியினை தொடர்ந்து வழங்கிய மனப்பான்மையினராக, அந்தணர் குலத்திலகமாக, உயர் பண்பாளராக யாழ்ப்பாணத்து நல்லூரில் பிறந்து அறுபத்தாறாவது வயதில் நல்லூரிலேயே அமரத்துவமடைந்த பிரம்மஸ்ரீ பத்மநாப ஐயர் சர்வேஸ்வர ஐயர் அவர்கள் வழிகாட்டிய இவ்வுயர்பண்புக்கு சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்.

இலங்கையிலிருந்து இலண்டன் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலமொழி மூலமாக சம்ஸ்கிருத மொழியைக் கற்று தாம் பெற்ற கல்விச்செல்வத்தை எமது நாட்டில் சிறப்பாக யாழ்ப்பாண மாணவர்களுக்கென்றே தம்மை அர்ப்பணித்து, பரந்த சீடர் மரபுகளை நிலை நிறுத்தி, உத்தம புருஷராகத் திகழ்ந்து அமரத்துவமடைந்த இவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இவர் பிறப்பிலே அந்தணர் பாரத்வாஜ கோத்திரத்தைச் சார்ந்தவர். ஆங்கீரஸ, பாரகஸ்பத்ய, பாரத்வாஜ எனும் மூன்று ரிஷிகளைப் பிரவரங்களாகக் கொண்டவர். யஜுஸ்சாகையை அத்யனம் செய்து ஆபஸ்தம்ப சூத்திரத்தைப் பின்பற்றியவர். இவரின் முன்னோர்கள் முன்னேஸ்வரம் முன்னைநாதசுவாமி தேவஸ்தானத்தில் முப்போதும் திருமேனி தீண்டும் சிவாச்சார்ய மரபில் தோன்றிய சிவராமகிருஷ்ண ஐயர், சுப்புலக்ஷ்மி தம்பதிகளின்

பிள்ளைச்செல்வங்கள் சுப்பிரமணிய ஐயர், நீலாம்பிகை, சாம்பசிவ ஐயர், பத்மநாப ஐயர், சுந்தரம்மா ஆகியோர். இவர்கள் முன்னேஸ்வரத்தையே பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டவர்கள். இவர்களைப்பற்றி இவரது தாய்மாமன் பேராசியர் கைலாசநாதக் குருக்கள் தமது என் சரிதத்தில்: 'இந்தியாவிலிருந்து இன்னொரு குடும்பம் முன்னேஸ்வரத்தில் வந்து குடியேறியது. இவர் பெயர் சிவராமகிருஷ்ண ஐயர். இவர் மலையாளம் எனும் கேரளதேசத்தில் இருந்து வந்தபடியால் மலையாளத்தையர் எனக் குறிப்பிடப்பட்டார். இவருடன் மனைவி சுப்பம்மாவும் கூட வந்தார். அத்தம்பதியருக்கு ஆறு குழந்தைகள். மூத்த குழந்தை வடிவாம்பா தேவராஜ் என்பவரையும், மூன்றாமவள் நீலாம்பாள் நாகபட்டினத்திலிருந்து குடியேறிய கிருஷ்ண ஐயரையும், கடைசிப் பதல்வியாகிய சுந்தரம்மா என் தந்தையையும் விவாகம் செய்தனர். இப்பெண்கள் மூவருடனும் பிறந்தோர் சுப்பிரமணிய ஐயர், சாம்பசிவ ஐயர், பத்மநாப ஐயர் என மூவராவார். இது என் தாய் வம்சாவளி, சிவராமகிருஷ்ண ஐயர் மலையாளத்தில் எங்கிருந்து வந்தார். அவர் பூர்வீகம் பற்றிய விபரங்கள் ஒன்றும் தெரியாது. அவர் முனீஸ்வரத்தையே உறைவிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். இந்தியா நாகபட்டினத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கிருஷ்ணஐயர் முனீஸ்வரத்தில் வசிக்கும் நாளில் சிவராமகிருஷ்ணஐயரின் இரண்டாவது மகள் நீலாம்பிகையை விவாகம் செய்தார்.

எனத் தெளிவுபடுத்துகின்றார். இவர்களுள் பத்மநாப ஐயர் அவர்களே இவரது தந்தையார். இவர் 1900ம் ஆண்டில் பிறந்தவர். தமது இருபத்தி இரண்டாவது வயதிலேயே கொழும்பில் சரஸ்வதி புத்தகசாலை ஒன்றினை ஆரம்பித்து நடாத்தி வந்தவர். மிகுந்த தமிழ், ஆங்கிலம், சிங்களம், சமஸ்கிருதம் ஆகிய மொழியறிவுகளைப் பெற்றவர். கொழும்பு

செட்டியார்தெரு முத்துவிநாயகர் கோவில், ஜிந்துப்பிட்டி முருகன் கோவில் ஆகியனவற்றில் முப்போதும் திருமேனி தீண்டுபவராக விளங்கியவர். ஆனந்தசாகரம் எனும் தமிழ் மாதாந்த சஞ்சிகையை 1921 ஏப்ரல் மாதம் முதலும்; சரஸ்வதி எனும் தமிழ் மாதாந்த சஞ்சிகையை 1927ம் ஆண்டு முதலும் வெளியிட்டு வந்தவர். கறுவாக்காட்டுப் பகுதியில் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிக்கும் தமிழ்ப் பண்டிதராகத் திகழ்ந்தவர். சிலாபம் சென்.மேரீஸ் கல்லூரியில் கற்றவர். கலாநிலையம், இந்துகலாபிவிருத்திச் சங்கம் எனும் நிறுவனமமைத்து அதனூடாக தமது சரஸ்வதி புத்தகசாலையில் ஆயிரக்கணக்கான நூல்களைத் தொகுத்தும்,

பதிப்பித்தும், உரையெழுதியும், விற்பனை முகவராகவும் விளங்கிவெளிப்படுத்திய பெருமைக்குரியவர். சிறுசிறு நூல்களாக இந்துசமய நூல்களை வெளியிட்டு மக்கள் யாவரிடமும் அடைவதற்கு வழி வகுத்தவர். இத்தகைய பெருமைக்குரிய இவரது தந்தையார் 1971ல் அமரத்துவமடைந்தார்.

இவரது தாயார் கமலாம்பிகை அம்மாள். இவா் நல்லூர் சிவன்கோவில் ஸ்தாபகர் பிரம்மஸ்ரீ ந.வே.கார்த்திகேய குருக்களின் மகள். பிரம்மஸ்ரீ கார்த்திகேயக் குருக்கள் தம்பையாக் குருக்கள் என அழைக்கப்பட்டவர். இவருக்கு மூன்று மனைவிகள். முதல்மனைவி முனீஸ்வரம் சிவஸ்ரீ மு.சோமாஸ்கந்தக் குருக்களின் சகோதரியான கமலாம்பாள், இரண்டாவது மனைவி மீனாம்பிகை, மூன்றாவது மனைவி சுந்தரம்மா, கார்த்திகேயக் குருக்களின் இரண்டாவது மனைவியாகிய மீனாம்பிகைக்குப் பிறந்த கமலாம்பிகையே சர்வேஸ்வரஐயரது தாயார்.

பிரம்மஸ்ரீ பத்மநாபஐயர், கமலாம்பிகை தம்பதிகளுக்கு இரண்டு புதல்வர்கள். இவர்களுள் மூத்தவர் பிரம்மஸ்ரீ

பரமேஸ்வர ஐயர், இளையவர் பிரம்மஸ்ரீ சர்வேஸ்வர ஐயர்.இவர் 06.02.1936 தைப்பூச நாளில் நல்லூரில் பிறந்தார். இவர்கள் இருவருடைய தாயார் கொடிய நோயினால் இருவரும் இளம்பிராயத்திலிருக்கும் பொழுதே உயிர் துறந்தார். இவர்கள் இருவருள் சர்வேஸ்வர ஐயரை இவரது தாயின் தந்தையாகிய கார்த்திகேயக் குருக்களின் சகோதரியாகிய அமிர்தவல்லியம்மா வளர்த்து வந்ததோடு ஆசார ஒழுக்கங்களையும் புகட்டி வழிப்படுத்தினார். இவரோடு இணைந்து நல்லூர் பிரதேசத்தில் வாழ்ந்த காலத்தில் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலையில் ஆரம்பக்கல்வியையும் பரமேஸ்வராக் கல்லூரியில் உயர்கல்வியையும் கற்றார். முன்னேஸ்வரத்தில் உபநயனம் செய்யப்பட்ட இவர் இவருடைய வளர்ப்புத் தாயாகிய அமிர்தவல்லி அம்மாவின் மறைவுக்குப்பின் இவர் தனது தாய்மாமனாகிய பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள், சகோதரி திரிபுரசுந்தரி அம்மாள் தம்பதிகளின் வழிகாட்டலில் கண்டியில்
இருந்ததோடு அங்கு தர்மராஜாக் கல்லூரியில் சிலகாலம் கல்வி கற்றார். தாய்மாமனாகிய பேராசியர் குருக்கள் அவர்கள் தனது
கலாநிதிப்பட்ட ஆய்வுக்காக இந்தியா சென்றபோது தனது சகோதரி திரிபுரசுந்தரி மற்றும் சகோதரன் தியாகராஜக்குருக்கள் குடும்பத்ததினரோடு மீண்டும் நல்லூரில் வசித்து வந்தார். அவ்வேளையில் பரமேஸ்வராக் கல்லூரியிலும், ஸ்ரான்லிக் கல்லூரியிலும் கல்வி பயிலும் வாய்ப்பைப் பெற்றார். 1957களில் மீண்டும் கண்டி சென்று தனது தாய்மாமன் குடும்பத்தினரோடு வாழ்ந்து வந்தார்.

பேராதனையில் இருக்கும் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சம்ஸ்கிருதத் துறையில் விரிவுரையாளராக விளங்கிய இவ்ரது தாய்மாமன் பேராசியர் கைலாசநாதக் குருக்கள் அவர்களது தூண்டுதலினால் வெளிவாரி நிலையில் இந்திய சமய வரலாறு பாளி,

சம்ஸ்கிருதம் ஆகிய பாடங்களை உள்ளிட்டு லண்டன் பல்கலைக்கழகத்தில் சம்ஸ்கிருதத்தை சிறப்புப் பாடமாகக் கற்று கலைமாணிப் பட்டம் பெற்றார். இவரது தாய்மாமனோடு ஏற்பட்ட கல்விசார்ந்த உறவு இவரை உயர்நிலைப்படுத்துவதற்கு பெரிதும் உதவியது.

இவர் பேராதனை - இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சம்ஸ்கிருத துறையில் விரிவுரையாளராக 1962 - 1964 வரை கடமையாற்றினார். இவரது கற்பதோடு இணைந்த கற்பித்தல்பணி ஆரம்பமானது. அங்கு சம்ஸ்கிருத முதுகலைமாணி, தகுதிகாண் தகுதியும் பெற்றார். தொடர்ந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் பிரிவில் சம்ஸ்கிருத விரிவுரையாளராக கடமையாற்றினார். அவ்வேளை அங்கு நூலகத்தில் பகுதிப் பொறுப்பதிகாரியாகவும், பொறுப்பதிகாரியாகவும் கடமையாற்றினார். இச்சேவை 1974வரை தொடர்ந்தது.

இலங்கை அரசு தனியார் பாடசாலைகளை அரசு மயமாக்கும் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படுகையில் இவர் வட்டுக்கோட்டை சித்தன்கேணி இந்துக்கல்லூரியில் உதவி ஆசிரியரானார். அங்கு 22 வருடகால சேவையில் நீண்ட நாட்களாக உபஅதிபராகவும் பதிற்கடமை அதிபராகவும் பொறுப்பாசிரியராகவும் மாணவ மன்றங்களின் வழிகாட்டியாகவும் விளங்கி 1996ம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

இவர் கல்வி கற்பிக்கும் காலங்களில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 1982ல் முதுகலைமாணிப் பட்டத்தையும்,

1988ல் கல்விப்ப் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவையும் பெற்றதோடு தொடர்ந்து 'காரணாகமம் கூறும் கிரிமை மரபு' எனும் பொருளில் கலாநிதிப்பட்டத்திற்கான ஆய்வினையும் மேற்கொண்டு வந்தார்.

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1982ல் சம்ஸ்கிருதத் துறையின் வருகை விரிவுரையாளராகவும், கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மருதனார் மடத்தில் இயங்கிய கல்வி வலயத்தில் தொலைக்கல்விப் பாடத்தில் இந்துநாகரிக, இந்துசமய ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

இவர் வட்டுக்கோட்டை ஆனந்தசுப்பிரமணியசர்மாவின் கனிஷ்ட புத்திரியாகிய சரோஜாவை 1963ல் திருமணம் செய்ததோடு இவரது குடும்ப வாழ்க்கை ஆரம்பமானது. இவருக்கு கமலாம்பிகை, சோபனா, பத்மநாபன்(மோகன்), கல்பனா எனும் நான்கு பிள்ளைச் செல்வங்கள்.

தினத்தாள்களிலும், வானொலிகளிலும் தமது ஆக்கங்களை வெளிப்படுத்திய சர்வேஸ்வர ஐயர் சம்ஸ்கிருத மொழியையும், இந்துசமயம், இந்து நாகரிகம், தமிழ் ஆகிய பாடங்களையும் தமது கற்பித்தற் பாடங்களாக கொண்டுவந்ததோடு ஆங்கிலத்தையும் போதித்து வந்தார்.

முன்னேஸ்வர தேவஸ்தானம், நல்லூர் சிவன்தேவஸ்தானம், வட்டுக்கோட்டை மஹாலிங்க சுவாமி தேவஸ்தானம், நல்லூர் முத்துவிநாயகர் கோவில் ஆகிய ஆலயங்களுடன் நெருங்கிய தொடர்புடையவராகவும், பரந்த உறவினர்களின் அன்புக்குரியவராகவும், பரோபகாரியாகவும் விளங்கி வந்தார்.

இவர் தமது மூத்தமகளான கமலாம்பிகைக்கு பலாலி நடராஜக் குருக்களின் கனிஸ்ட புத்திரன் பாலசுப்பிரமணியம் அவர்களையும்; இரண்டாவது மகளான சோபனாவுக்கு

புன்னாலைக்கட்டுவன் பாலசுப்பிரமணிய ஐயரின் சீமந்த புத்திரன் சுதாகரன் அவர்களையும் விவாகம் செய்து கொடுத்து ஷரண்யன், ஷா்மி, சந்தியா, ஷயனிகா ஆகிய பேரப்பிள்ளைகளையும் பெற்றார்.

ஓய்வு பெற்று விளங்கும் காலங்களில் தமது பொழுதினை கற்பித்தலில் சிறப்பாக சம்ஸ்கிருத மொழியைக் கற்பிக்கும் பணியில் தம்மையிணைத்து தாம் கற்ற கல்வியனுபவங்களைப் பகிர்ந்து வழங்கி வந்தார்.

தென்னிந்தியாவுக்கு தலயாத்திரைகளினை மூன்று தடவைகள் மேற்கொண்ட சமய ஈடுபாடு கொண்ட இவர் சென்ற வருடம் தாம் நோய்வாய்ப்பட்டிருந்ததையும் பொருட்படுத்தாது தமது பேரக்குழந்தைகளுடன் சென்று திரும்பியமை குறிப்பிடத்தக்கது.

கண்டி மாமா என உறவினர்ளாலும், ஐயா என அன்பர்களாலும்; சேர் என மாணவர்களாலும்; ஐயா சேர் என பாடசாலை சமூகத்தினராலும் அன்பாக அழைக்கப்பட்ட இவர் இவரது சுற்றத்தவர் சூழ சித்திரபானு வருடம் மார்கழி மாதம் 1ம் நாள் திங்கட்கிழமை (16.12.2002) இரவு 8.34 மணியளவில் பூர்வபக்ஷ துவாதசித்திதியில் இறைவன் திருவடி சேர்ந்தார்.

இவர் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாத சுவாமியினது நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதசுவாமியினதும் திருவடித் தாமரைகளின் நிழலில் நின்று என்றும் எம்மை வழிப்படுத்தப் பிரார்த்திக்கின்றோம்.

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***

# பொருளடக்கம்

*முன்னுரை I

*அஞ்சலியுரை

1. பேராசிரியர் கலாநிதி
ப. கோபாலகிருஷ்ண ஐயர் II

2. சிவஸ்ரீ இரத்தின கைலாசநாதக்குருக்கள் IX

*பிரம்மஸ்ரீ பத்மநாப ஐயர் சர்வேஸ்வர ஐயர்
அவர்களின் வாழ்க்கை வரலாறு XI

1. திருமுறைகளின் இயல்பும் அவற்றின் சிறப்பு அம்சங்களும் 1

2. அப்பர் பாடிய திருமுறைகளும் அவற்றின் சிறப்பியல்புகளும் 10

3. அப்பர் தேவாரத்தில் வேதங்கள், கேள்வி, இதிகாச புராணக் கருத்துக்கள் 14

4. அப்பர் தேவாரத்தில் சைவ ஒழுக்கமும் வழிபாடும் 19

5. அப்பர் தேவாரத்தில் நீதிவாக்கியங்களும், உபதேசங்களும் 23

6. அன்னையின் அருட் கண்கள் 32

7. வேதங்களும் மந்திரங்களும் 36

8. சீனச் சமுதாய வளர்ச்சிக்கு உதவிய நாடு பாரதம் 41

9. சிவாகம மரபில் மூர்த்தி அலங்காரம் சிந்தனைகள் 46

10. Puranic saivism in ceylon During the Polonnaruwa Period 57

# 1
# திருமுறைகளின் இயல்பும் அவற்றின் சிறப்பு அம்சங்களும்

சைவநெறியில் வாழ்பவர்களுக்கு அடிப்படை நூல்களாகத் திருமுறைகள் அமைகின்றன. இன்பம்வரினும் துன்பம்வரினும் இரண்டையும் ஒப்பக்கருதும் மனச்செம்மையே 'திரு'வெனும் சொல்லுக்குரிய பொருள். இத்தகையோரை

**'கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்'**

எனச் சேக்கிழார் போற்றுகிறார். இத்தகையோருக்கு இறைவன் தோன்றாத்துணையாக நின்று அருள் வழங்கும் நிலை 'திரு நின்ற செம்மை' எனப் போற்றப்படுகின்றது. இப்படிப்பட்ட பெரியோரினால் அருளப்பெற்ற தமிழ்ப் பாடல்களே திருமுறைகளாகும்.

திருமுறை எனும் தொடரிலுள்ள திருவென்பது நூலையும் அதன் உட்பிரிவுகளையும் குறிக்கும். முறைப்பட இயற்றப்பெற்றமையினால் முறையென்பது நூற்குப் பெயராயிற்று.

மேலும் முறை என்பது நூலெனும் கருத்தில் வழங்கப்பெற்றமையை திருமந்திரப் பாடலும், கந்தப்புராணச் செய்யுளும் சுட்டுகின்றன. மக்களை விலங்கினின்றும் பிரித்து நன்றுந்தீதும் பகுத்துணரும் மனவுணர்வுடையராக்கி மேம்படுத்தும் நூல்களைத் திருவள்ளுவர் 'இலங்கு நூல்' எனச் சிறப்பித்துள்ளார்.

நூல்களை உலகநூல், அறிவுநூலென இருவகையாக வகுத்த பேராசிரியர் சைவசமயத்தவராற் போற்றப்படும் திருமுறைகளை அறிவு நூல்களென்பார். இவை இறைவன் திருவருளால் வெளிப்படுத்தப்பட்ட மெய்நூல்களாகும். இறைவனை இடைவிடாது நினைந்து இறைவனது பேரறிவினுள் அடங்கி நின்ற சிவஞானிகளாக விளங்கியவர்களே திருமுறையாசிரியர்கள்.

வேதங்களை 'எழுதாமறை' என்பது போல திருமுறைகளை 'எழுதுமறை'யென வழங்குவர். இதனை 'வண்டமிழால் எழுதுமறை

மொழிந்த பிரான்' எனப் பெரியபுராணமும், 'எழுதுமறை மொழிந்த கழுமல முனிவன்' எனத் தில்லைக் கலம்பகமும் கூறுகின்றன. திருமுறை என்ற பெயர் வழக்கினைத் 'திருமுறை எழுதுவோர் வாசிப்போர்' எனப் பெரிய புராணத்தில் சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார்.

திருமுறை என்னும் சொல்வழக்கு மூன்றாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டுக்களில் முதன் முதலாக இடம் பெறுகின்றதெனவும்; இவ்வேந்தன் காலத்துக்கு முன்னுள்ள கல்வெட்டுக்களில் மூவர் பாடிய பதிகங்கள் 'திருப்பதியம்' என்றே குறிக்கப்பட்டன என்னும் வெள்ளைவாரணன் கூறியுள்ளார்.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு எனக் கூறும் வழக்கினை உமாபதி சிவாச்சாரியார் தமது நூலில் குறித்துள்ளார்.

நம்பியாண்டார் நம்பியே சோழ மன்னனின் விருப்பப்படி திருமுறைகளைத் தேடித் தொகுத்தவரெனத் திருமுறை கண்ட புராணம் கூறும். இவர் தமது நூலில் தேவாரத் திருப்பதிகங்கள் சேமித்து வைக்கப்பட்ட அறையில் பல பதிகங்கள் எழுதப்பெற்ற ஏடுகள் கரையான் புற்றால் மூடப்பட்டிருந்தன என்று கூறியுள்ளதை நோக்குமிடத்துப் பல பாடல்கள் மறைந்து போயிருக்கலாமென்பது புலப்படுகின்றது.

திருமுறை கண்ட புராணத்தின்படி அபயகுலசேகர மன்னனுக்குக் கிடைத்த பதிகங்கள்

| | |
|---|---|
| திருஞானசம்பந்தர் பதிகங்கள் | 384 |
| திருநாவுக்கரசர் பதிகங்கள் | 321 |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதிகங்கள் | 100 |

நம்பியாண்டார் நம்பி வகுத்த திருமுறைகளுள் முதல் ஏழு திருமுறைகளே தேவாரத் திருமுறைகளாகும். மணிவாசகர் அருளிய திருவாசகம், திருக்கோவையார் ஆகியன எட்டாந் திருமுறையாகும். ஒன்பதாந் திருமுறையில் திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பி, காடாநம்பி, கண்டராதித்தர், வேணாட்டிகள், திருவாலியமுதர், புருடோத்தம நம்பி, சேதிராயர் எனும் ஒன்பதின்மர் பாடிய திருவிசைப்பாப் பதிகங்கள் இருபத்தெட்டும் அவர்களுள் சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டாகிய பதிகமொன்றும் ஆகிய இருபத்தொன்பது

பதிகங்களையும் காணலாம். திருமூலர் இயற்றிய திருமந்திரப் பாடல்களைப் பத்தாம் திருமுறையாகவும், திருவாலவாயுடையார் திருமுகப்பாசுரம் முதலிய பிரபந்தங்களைப் பதினொராந் திருமுறையாகவும் வகுத்தருளினார். இவ்விதம் நம்பியாண்டார் நம்பி வகுத்ததன் பின் பெரிய புராணமும் திருமுறைகளுள் ஒன்றாக வகுக்கப்பெற்றதை உமாபதி சிவாச்சாரியார் திருத்தொண்டர் புராணமெனப் புராணத்திருமுறைக்குத் திருநாமம் சீர்பெற அமைத்திட்டு 'தெள்ளு தமிழ்ச் சேக்கிழார் புராணஞ் செய்த திருமுறை; எனவும்' செறிமதயானைச் சிரத்தில் பொறகலத் தோடெடுத்து திருமுறையை இருத்தி, எனவும் சேக்கிழார் புராணத்திற் கூறியுள்ளார்.

மேலும் சைவத் திருமுறைகள் பன்னிரண்டெனும் வழக்கம் அவரது காலத்திற்கு முன்பே நிலைபெற்றதென்பதை,

***"மூவரோது திருமுறைகளேழு திருவாதவூரர் முறையொன்று இசைப்***
***பாவரைத்த முறையொன்று மூலர் முறையொன்று பாசுரமதாதியாக்***
***கோவை செய்த முறையொன்று சேவையார் குலாதி நீதிமுறை யொன்றுடன்***
***பாவை பாகர் திருவருள் சிறந்த முறை பன்னிரண்டென வைத்த பின்"***

எனக் கூறுவதன் மூலம் அறியலாம்.

நம்பியாண்டார் நம்பி திருமுறைகளைப் பதின்றொன்றாக வகுத்த வரலாற்றையும் திருமுறைகண்ட புராணம் பின்வருமாறு கூறுகின்றது. மந்திரங்கள் ஏழு கோடியாதலின் தேவாரத் திருப்பதிகங்களும் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டன. இம் மந்திரங்கள் பஞ்சப்பிரமம் என்றும்; சடங்கமென்றும் கூறப்பட்டுப் பதினொன்றாகவும் வருதலால் முன்னர் கூறிய தேவாரத் திருமுறைகள் ஏழினோடு திருவாசகம், திருவிசைப்பா, திருமந்திரம், காரைக்காலம்மையார் முதலியோர் பாடிய பிரபந்தங்கள் ஆகியவற்றை எட்டு முதல் பதினொன்று வரையுள்ள திருமுறைகளாகத் தொகுத்தார்கள்.

இவ்விதம் வகுக்கப்பெற்ற திருமுறைகளை இயற்றியோர் அக்காலத்திலேயே வழிபாட்டுக்குரியராயினர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமக்கு முன் தோன்றிச் சிவத்தொண்டு புரிந்த சம்பந்தர், அப்பர் ஆகியோரருளிய நந்தமிழ் மாலையைப் பாடி இறைவனை வழிபட்ட செய்தியை

**நன்று மகிழ்ந் சம்பந்தர் நாவுக்கரசர் பாட்டு கந்தீர** எனவும்

சேரமான் பெருமான் நாயனார் திருவஞ்சைக்களத்தில் இறைவனை வழிபடும் பொழுது திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலியோரின் பாடல்களை ஓதி வழிபட்ட செய்தியை பெரிய புராணம் - கழறிற்றிவார் புராண ஒன்பதாம் பாடல் தெரிவிக்கின்றது.

தேவாரம், திருவிசைப்பா முதலிய திருமுறைகளை இயற்றியவர்களைத் திருக்கோவில்களில் எழுந்தருளிவித்து வழிபடுதலுக்கேற்ற திருக்கைக்கோட்டி மண்டபம் அமைக்கப்பட்டிருந்ததைக் கல்வெட்டுக்களில் அமைந்த குறிப்புகள் தெரிவிக்கின்றன.

ஞானநூல்தனையோதல், ஓதுவித்தல், நற்பொருளைக் கேட்பித்தல், தான் கேட்டல், நன்கு ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும் இறைவனடி அடைவிற்கும் எழிலி ஞானப்பூசை ஆகும் என அருணந்தி சிவாச்சாரியார் தமது நூலிற் கூறியுள்ளதை நோக்குமிடத்து இவர்களை வழிபாடு செய்தல் திருமுறைகளைப் பாராயணம் செய்தல் ஆகியவை உயிர்களை உய்விக்கும் தன்மையனவாகும்.

இத்தகைய சிறப்பம்சங்கள் பொருந்திய பன்னிரு திருமுறைகளுள் முதலேழு திருமுறைகளே தேவாரமென்பதை இரட்டைப் புலவர்கள் தமது ஏகாம்பரநாதருலாவில்

**மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்**
**தேவாரஞ் செய்த திருப்பாட்டும்**

என்ற தொடரிலே குறிப்பிடுகின்றார். இத்தொடரை வெள்ளைவாரணன் விளக்கும்பொழுது தேவாரம் செய்த திருப்பாட்டு என்பது மூவர் பாடிய திருப்பாடல்களையும் தேவாரஞ் செய்த என்பது அத்திருப்பாடல்களை இசைப்படுத்திப் பாடிய தொழில் நிலைகளையும் குறித்து நின்றன எனக் கூறுகின்றார். இவரை

அடுத்து எல்லப்ப நாவலர் தாம் பாடிய திருவருளைக் கலம்பகத்தில் மூவர் திருப்பதிகங்களை 'தேவாரம்' என்ற பெயரால் குறிப்பிட்டுள்ளார். மூவர் பதிகங்களுக்கே தேவாரம் எனும் பெயர் வழங்கப்பெற்றுள்ள தென்பது சதாசிவப் பண்டாரத்தார் எழுதிய இலக்கிய வரலாற்றிலும் 'தேவாரமெனும் பெயர் வழக்கு' எனும் கட்டுரையிலும் தெளிவு படுத்தப்படுகின்றது.

தேவாரம் எனும் தொடரைத் தேவ+ஆரம் எனப் பிரித்து இறைவனுக்கு மாலையாவது என்ற பொருளிலும் தே+வாரம் எனப்பிரித்து தெய்வத்தினிடத்து அன்பை விளைவிப்பது என்றும் வழங்கப்பட்டதென வெள்ளைவாரணார் கூறுகின்றார். இத்தொடரை தேவ+ஹாரம் எனப் பிரித்து தேவபூசைக்குரிய வீடு எனும் பொருளிலும் இத்தொடர் வழங்கப்பட்டிருக்கலாமென நடேசக்கவுண்டர் கருதுகின்றார்.

இராசஇராசன் காலத்தில் கோவில்களில் திருப்பதிகம் ஓதும் வழக்கம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் திருப்பதிகம் ஓதுவதற்கு இராசஇராசன் ஏற்பாடு செய்துள்ளான்.

திருமுறைகளை ஓதுவது என்பதற்குப் பதிலாகத் 'திருப்பதிகம் விண்ணப்பம் செய்வது' என்றும்; ஓதுவார் என்போருக்கும் பதிலாக 'பிடாரர்' என்றும் இம்மன்னன் காலச் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருப்பதிகம் ஓத நாற்பத்தெண்மரை நியமித்து இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆடவல்லான் எனும் மரக்காலால் முக்குறுணிநெல் கொடுக்கப்படவேண்டுமென இராசஇராசன் விதித்தான். இங்கு மரக்காலுக்கு இறைவன் பெயர் வைத்தமை குறிப்பிடத்தக்கது.

பன்னிரு திருமுறையாசிரியருள் காலத்தால் முற்பட்டவர்கள் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தை இயற்றிய திருமூலரும் பதினொராந் திருமுறையில் இடம்பெறும் பிரபந்தங்களைப் பாடிய காரைக்கால் அம்மையாரும் ஆவார். இவர்களது காலம் கி.பி 5ம் நூற்றாண்டாதல் கூடுமெனவும்; பன்னிரண்டாம் திருமுறையை இயற்றிய சேக்கிழார் காலம் கி.பி 12ம் நூற்றாண்டெனவும் வெள்ளைவாரணன் கருதுகின்றார். சுருங்கக்கூறின் கி.பி 5ம் நூற்றாண்டு முதல் கி.பி 12ம் நூற்றாண்டு வரையிலுள்ள

காலப்பகுதியே சைவத் திருமுறைகள் தோன்றி வளர்ந்த காலமாகும்.

தேவாரத் திருமுறைகள் தோன்றிய காலத்திலேயே வடமொழிக் கருத்துக்கள் தமிழகத்தில் பரவலாயின. இதிகாச புராணங்கள் விரித்துக் கூறும் இறைவனது எழிற் கோலங்கள் அட்டவீரட்டங்கள், இறைவனது மூர்த்தங்கள் ஆகியவற்றைத் திருமுறைகள் விரித்துக் கூறுமளவிற்கு வேறெந்த இலக்கியமும் கூறவில்லையெனலாம். புராணங்கள் கூறும் வர்ணனைகளையும் பல நிகழ்சிகளையும் அடிப்படையாகக் கொண்ட திருக்கோலங்களில் இறைவனை வழிபடும் மரபைத் தேவாரங்களே எடுத்தியம்புகின்றன. தமிழ்ப் புராணங்கள் கி.பி 12ம் நூற்றாண்டுக்குப் பின்னரே இயற்றப்பட்டன. இவற்றிலும் வடமொழிப் புராணக்கருத்துக்களும் இடம்பெற்றன.

திருமுறைகளில் சைவசமயக் கருத்துக்களும் தத்துவக் கருத்துக்களும் இடம்பெற்றமையைக் கருத்திற்கொண்டே லட்சுமணன் அவர்கள் 'சைவ சித்தாந்த நூல்களை தோன்று முன்னரே திருமுறை ஆசிரியரின் சிந்தனைகள் தோத்திர நூல்களில் இடம்பெற்றுவிட்டன' எனக் கூறியுள்ளார்.

சமயக் கருத்துக்களையும் தத்துவங்களையும் அறிய அடிப்படை இலக்கியங்களாகப் பன்னிரு திருமுறைகள் அமைகின்றன. இவற்றிலேதான் சைவ சித்தாந்த உண்மைகள் அனுபூதிமான்களுடைய அனுபூதி வாயிலாக (முப்பொருள் உண்மை) விளக்கப் பெறுவதைக் காணலாம். சைவத்திருமுறைகளைச் சமயம், தத்துவம் ஆகியவற்றைக் கூறும் அடிப்படை இலக்கியங்களெனக் கூறல் மிகப் பொருத்தமானது. மேலும் தமிழகச் சைவ வரலாற்றைச் சரிவர அமைக்க இவை இன்றியமையாதவை. தமிழகத்தில் புராணங்கள்தோன்றாக் காலத்தில் வடமொழி சமயம், தத்துவம் ஆகிய கருத்துக்களையும் வழிபாடு தொடர்பான பல விபரங்களையும் தரும் இலக்கியங்களாக இவை அமைகின்றன.

சைவத் திருமுறையாசிரியருள் அப்பர் சிறந்த திருவருள் அனுபவம் கைவரப் பெற்றவர். இறைவனின் பாதாரவிந்தங்களை நெஞ்சகத்தே நிறுத்தியமையால் நடமாடும் கோயிலாகத் திகழ்பவர். 'அன்பலாற் பொருளில்லை ஐயன் ஐயாறனர்க்கே' என எடுத்தோதியவர். 'தொண்டலாற் உயிற்கு ஊதியமில்லை' எனத்

தொண்டின் நெறியுணர்த்தியவர். திருத்தொண்டின் வாழ வரும் ஞானத்தவ முனிவர் எனச் சேக்கிழாரால் வழுத்தப் பெற்றவர். நீண்ட காலம் சமயத் தொண்டு புரிந்தவர். சமண நெறியின் தலைவராயிருந்து அச் சமயநெறியின் குறைகளையும் சைவத்தின் பெருமையையும் விதந்தோதியவர். அரசன் ஆணை பிறப்பித்து ஏவலாளரை அனுப்பியபோதும் அவ்வாணையை மறுத்து 'நாமார்க்கும் குடியல்லோம்' எனக் கூறி அஞ்சாமையின் திருவுருவமாகத் திகழ்ந்தவர். பக்தியுணர்வில் நின்று இறைவன் புகழைப் பாடியவர்.

சேக்கிழார் அப்பரைச் சம்பந்தரோடு இணைத்துச் சைவத்தின் இரு கண்களென மதித்துள்ளார். உலகியல் வெம்மையை உணர்ந்து அதனை பகைப்புலனாகக் கொண்டு இறையின்பத்தைக் காண்பதையே நோக்காக உடையவர். தாண்டக வேந்து என அழைக்கப்படுபவர். பெருமிதம், அஞ்சாமையாகிய உணர்வுகளோடு திருக்கோவிலை மையமாகக் கொண்டு பதிகங்களைப் பாடியவர்.

இவ்விதம் தேவார முதலிகளுள் சிறப்பிடம் விக்கும் நாவுக்கரசர் பாடிய பாடல்களின் தொகையை

> **இணை கொள் ஏழெழு நூறிலும் பனுவல்**
> **ஈன்றவன் திருநாவினுக்கரையன்**

என சுந்தரரும்

> **கசிந்து இதயம் எழுநூறு அரும் பதிகநிதியே**
> **பொழிந்தருளு திருநாவின் எங்கள் அரசு**

எனவும்

> **பதிகம் ஏழேழு நூறு பகருமாகவியோகி**
> **பரவு நாவலரசனான பரம காரண வீரன்**

என நம்பியாண்டார் நம்பியும் அருளிச் செய்துள்ளார். இதையே திருமுறை கண்ட புராணமும் கூறுகின்றது.

இச்சான்றுகள் யாவும் இவர்பாடிய பதிகங்கள் 4090 எனவும், பாடல்கள் 49,000 எனவும் உறுதி செய்கின்றன. இவர் நீண்ட காலம் நிலவுலகில் வாழ்ந்தபடியால் அதிகமான பதிகங்களைப் பாடியிருக்கலாம்.

திருமுறை கண்ட புராணத்தின்படி அபயகுலசேகர மன்னனுக்குக் கிடைத்த பதிகங்கள்

| | |
|---|---|
| திருஞான சம்பந்தர் | 384 |
| திருநாவுக்கரசர் | 321 |
| சுந்தரமூர்த்தி நாயனார் | 100 |

ஆனால் திருஞான சம்பந்தர் பதிகங்கள் 383ம் திருநாவுக்கரசர் பதிகங்கள் 312ம் சுந்தரரின் 100 பதிகங்களும் மட்டுமே அச்சில் வந்துள்ளன. அண்மையில் திருவிடைவாய்க் கல்வெட்டில் கிடைத்த பதிகமொன்றையும் கூட்டினால் சம்பந்தரின் பதிக எண் சரி. ஆனால் நாவுக்கரசரது ஒன்பது பதிகங்கள் இன்னும் கிடைக்கவில்லை.

அப்பர் தேவாரப் பதிகங்களில் பத்துப் பாடல்களுக்கு மிகுந்த பதிகங்களையும் குறைந்த பாடல்களுள்ள பதிகங்களையும் கணக்கிட்டு நடேசக் கவுண்டர் அவர்கள் திருமுறை ரீதியாக 4ம், 5ம், 6ம் திருமுறையிலுள்ள பாடல்களின் எண்ணிக்கையைப் பின்வருமாறு தருகின்றார்.

| | பதிகம் | பாடல்கள் |
|---|---|---|
| 4ம் திருமுறை | 113 | 1069 |
| 5ம் திருமுறை | 100 | 1015 |
| 6ம் திருமுறை | 99 | 980 |
| | 312 | 3064 |

## அப்பர் பயின்ற பண்கள்

இவரது பாடல்களில் பயின்றுள்ள பண்கள் பின்வருமாறு: நான்காம் திருமுறையில் இந்தளம், காந்தார பஞ்சமம், காந்தாரம், குறிஞ்சி, கொல்லி, சாதாரி, சீகாமரம், பழந்தக்கராகம், பழம் பஞ்சுரம், பியந்தைக் காந்தாரம் ஆகிய பண்களுக்குரிய திருப்பதிகங்களும், 5ம் திருமுறையில் திருக்குறுந்தொகை யாப்பிலமைந்த திருப்பதிகங்களும்; 6ம் திருமுறையில் திருத்தாண்டகப் பதிகங்களும் இடம்பெற்றுள்ளன என்பதை நடேசக்கவுண்டரும், ஜெயராமனும் கூறுகின்றனர்.

இறைவனது துணையைப் பெறுவதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகள் கூறப்படுகின்றன. இவற்றுள் சரியை திருக்கோயில் கூட்டி மெழுகுதல், திருவிளக்கிடல், திருநந்தவனமமைத்தல், பூக்கொய்து மாலை தொடுத்துக் கொடுத்தல் ஆகிய திருப்பணிகளைச் செய்தலாகும். இவ்வழியைத் தாசமார்க்கம் என்பர். இவ்வழியில் ஆன்மா இறைவனுக்குத் தொண்டன் எனும் பாவனையில் பணிபுரியும் கிரியை இறைவனை அருச்சிப்பது, போற்றுவது போன்றவற்றைச் செய்வதாகும். இதனைப் புத்திர மார்க்கம் என்பர். அடுத்த நிலையாகிய யோகநிலை ஒரு நண்பனது நிலை இதனை யோக மார்க்கம் என்பர். ஈற்றதான ஞான மார்க்கத்தில் ஈசுவரனைப் பற்றிய ஞானமே முக்கியமானதாகும்.

இந்நெறிகளுள் சகலரும் பின்பற்றக்கூடிய எளிமையான நெறி சரியையேயாகும். திருக்கோயில் வழிபாட்டுடன் இயைந்த கிரியை நெறிக்கு அனுசரணையாயிருப்பது சரியையே. கிரியை வழிபாட்டுக்குத் தேவையான பொருட்களை சேகரித்தலும், இறைத் தொண்டு புரிதவலும் இதன் அடிப்படைகளாகின்றன. ஏனைய யோகநெறி ஞானநெறியாகியவற்றைப் பின்பற்றுவோர் ஒரு சிலரே.

சகலராலும் எளிதில் பின்பற்றக்கூடியதும் கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றிற்கு அடித்தளமானதுமான சரியை நெறியாளரான அப்பரின் திருமுறைகளே முதலில் வைத்தெண்ணப்படத் தகுந்தவை.

# 2

# அப்பர் பாடிய திருமுறைகளும் அவற்றின் சிறப்பியல்புகளும்

சைவநெறியில் வாழ்பவர்களுக்கு அடிப்படை நூல்களாகத் திகழுபவை சைவத்திருமுறைகளே. இவை இறைவனை இடைவிடாது நினைந்து இறைவன் பேரறிவினுள் அடங்கிநின்ற ஆசிரியர்களால் அருளப்பெற்றவை. வேதங்களை 'எழுதாமறை' என்பது போல திருமுறைகளை 'எழுதுமறை' என வழங்குவர். திருமுறை எழுதுவோர் வாசிப்போர் எனப் பெரியபுராணத்திற் சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார்.

குலோத்துங்கசோழன் கல்வெட்டுக்களில் திருமுறை எனும் சொல்வழக்கு முதன்முதலாக இடம் பெற்றுள்ளதாகவும் இவ்வேந்தர் காலத்துக்கு முன்னுள்ள கல்வெட்டுக்களில் மூவர் பாடிய பதியங்களே 'திருப்பதியம்' எனக் குறிக்கப்பட்டவெனவும் வெள்ளைவாரணன் கருதுகிறார்.

உமாபதிசிவாச்சாரியார் தமது நூலிற் சைவத்திருமுறைகள் பன்னிரண்டு எனக் குறிப்பிட்டுள்ளார். நம்பியாண்டார் நம்பியே சோழ மன்னனின் விருப்பப்படி திருமுறைகளைத் தேடித் தொகுத்தவரெனத் திருமுறைகண்டபுராணம் கூறுகின்றது. திருமுறைகண்டபுராணத்மதின்படி அபயகுலசேகர மன்னனுக்குக் கிடைத்த பதிகங்கள்.

| | |
|---|---|
| திருஞானசம்பந்தர் பதிகங்கள் | 384 |
| திருநாவுக்கரசர் பதிகங்கள் | 321 |
| சுந்தரமூர்த்திநாயணர் பதிகங்கள் | 100 |

ஆனால் திருஞானசம்பந்தர் பதிகங்கள் 384உம், திருநாவுக்கரசர் பதிகங்கள் 321உம், சுந்தரமூர்த்தி நாயணர் பதிகங்கள் 100 மட்டுமே அச்சில் வெளிவந்துள்ளன. அண்மையில் திருவிடைவாய்க் கல்வெட்டில் கிடைத்த பதிகம் ஒள்ளையும் கட்டினால் சம்பந்தரின் பதிக எண் சரி. ஆனால் நாவுக்கரசரின் ஒன்பது பதிகங்கள் இன்னும் கிடைக்கவில்லை.

அப்பர் தேவாரப் பதிகங்களில் பத்துப் பாடல்களுக்கு மிகுந்த பதிகங்களையும் குறைந்த பாடல்களுள்ள பதிகங்களையும் கணக்கிட்டு, நடேசக்கவுண்டர் அவர்கள் திருமுறை ரீதியாக 4ஆம், 5ஆம், 6ஆம் திருமுறைகளில் உள்ள பாடல்களில் எண்ணிக்கையைப் பின்வருமாறு தருகின்றார்.

| | பதிகம் | பாடல்கள் |
|---|---|---|
| 4ஆம் திருமுறை | 113 | 1069 |
| 5ஆம் திருமுறை | 100 | 1013 |
| 6ஆம் திருமுறை | 99 | 980 |
| | 312 | 3064 |

நம்பியாண்டார்நம்பி வகுந்த திருமுறைகளுள் முதல் எழு திருமுறைகளே தேவராத் திருமுறைகளாகும். அவர் வகுந்த திருமுறைகளுள், முதலாம், இரண்டாம், மூன்றும் திருமுறைகள் திருஞானசம்பந்தராலும்; 4ஆம், 5ஆம், 6ஆம் திருமுறைகள் திருநாவுக்கரசராலும்; 7 ஆம் திருமுறை சுந்தரமூர்த்திநாயனாராலும் அருளிய தேவராத் திருப்பதிகங்கள் இடம்பெறுகின்றன.

தேவாரம் என்ற தொடரைத் தேவ + ஆரம் எனப் பிரித்து இறைவனுக்கு மாலையாவது என்ற பொருளிலும், தே + வாரம் எனப் பிரிந்துதெய்வத்தினிடத்து அன்பை விளைவிப்பது என்றும் வழங்கப்பட்டதென வெள்ளைவரானர் கூறுகின்றார். இத்தொடரை தேவ + ஹாரம் எனப்பிரித்து தேவபூசைக்குரிய வீடு பொருளிலும் இத்தொடர் வழங்கப்பட்டிருக்கலாமென நடேசக்கவுண்டர் கருதுகின்றார்.

இராஜ இராஜ மன்னன் காலத்தில் ஆலயங்களில் திருப்பதிகங்கள் ஓதும் வழக்கம் சிறப்பிடம் வகித்தது. தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் இராச இராசன் திருப்பதிகம் ஓதுவதற்கு ஏற்பாடுகள் செய்திருந்தான்.

திருமுறைகளை ஓதுவது என்பதற்குப் பதிலாகத் "திருப்பதிகம் விண்ணப்பம் செய்வது" என்றும், ஓதுவார் என்போருக்குப் பதிலாக "பிடாரர்" என்றும் இவ்வரசன்காலத்துச் சாசனமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருப்பதிகம் ஓதுவதற்காக

நாற்பத்தொன்மரை நியமித்து இவர்கள் ஒவ்வொருவருக்கும் "ஆடவல்லான்" எனும் மரக்காலால் முக்குறுனி நெல் கொடுக்கப்படவேண்டுமென இராச இராசன் விதித்திருந்தான். இங்கு இறைவன் பெயரையே மரக்காலுக்கு வைத்தமை குறிப்பிடத்தக்கது.

பன்னிரு திருமுறையாகியர்களுட் பதினொராம் திருமுறையில் இடம்பெறும் காரைக்கால் அம்மையாரின் பிரபந்தங்களும் பத்தாம் திருமுறையில் இடம்பெறும் திருமூலர் இயற்றிய திருமந்திரமும் காலத்தால் முந்தியவை. காரைக்காலம்மையார் சங்கமருவியகால இறுதிப்பகுதியைச் சார்ந்தவர். சேக்கிழார் சோழர்காலத்தைச் சேர்ந்தவர். இவற்றைக் கருத்திற்கொண்டு நோக்கும் பொழுது திருமுறையாசிரியர்களில் காலம் கி.பி.5ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.12ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியே சைவத்திருமுறைகள் தோன்றி வளர்ந்த காலமாகும்.

தேவாரத் திருமுறைகள் தோன்றிய காலத்தின் இந்துசமயக் கல்விக் கேட்பாடுகளே தமிழகத்தில் நிலவின. வைதிக இலக்கியங்கள். சூத்திரநூல்கள். இதிகாச புராணங்கள் கூறும் கல்விமரபோடிணைந்த சிவபிரானின் எழிற்கோலங்கள். அட்டவீராட்டங்கள், இறைவனது மூர்த்தங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட திருக்கோலங்களில் இறைவனை வழிபடும் மரபையும் தேவாரங்களே எடுத்தியம்புகின்றன.

அப்பரின் திருமுறைகளில் மேற்குறித்த அறிவு சிறப்பிடம் வகித்தது. மேலும் இறைவனது அருளைப்பெறுவதற்புச் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்குநெறிகள் கூறப்படுகின்றன. இவற்றுள் அடிப்படை நெறியாகச் சரியை அமைகின்றது. அதனைத் தாசமார்க்கமென்பர். தாசநெறியான சரியை, திருநந்தனமமைத்தல், பத்திரபுஷ்பமெடுத்தல், திருமாலைகட்டுதல், திருவலகிடுதல், திருமெழுக்குச்சாத்துதல், சுகந்ததீபமிடல், திருவிளக்கேற்றுதல், தோத்திரம் பாடல், பூசைத்திரவியங்கள் கொடுத்தல், சிவனடியார் திருவேடத்தைக் கண்டவிடத்து வணங்குதல், அவர்களது பணிவிடைகளைச் செய்தல் முதலியன.

அப்பர் தமது பாடல்களில் அஞ்செழுத்தோதுதல், அடிபணிதல், ஆப்பிநீர் அலகுகொண்டு திருக்கோயிலைச்சுத்தி செய்தல்,

இண்டைமாலைகட்டுதல், சங்கம் ஊதுதல், தாளம் கையில் கொள்ளல் போற்றுதல், திலகமிட்டுக்கொள்ளல், துதித்தல், நாமங்களை ஓதுதல், நீறிட்டு நினைத்தல், பூக்கூடைசுமத்தல், மலர்பறித்தல், முழுக்கட்டுதல், விளக்கிடுதல் முதலிய வழிபாட்டு நெறியைப் போற்றியுள்ளார்.

கிரியை வழிபாட்டில் ஓரங்கமாக விளங்கும் முற்குறித்த செயல்களைக் கூறும் சரியையே ஏனைய நெறிகளுக்கு அடிப்படையானதும் முதன்மையானதுமாகும். இவற்றைத் தமது தேவாரங்களிற் சிறப்பித்துக்கூறும் வகையிலும் சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களைப்பற்றிய முன்னோடி சிந்தனைக்கூறும் அவரது பாடல்கள் இறைவனது திருக்கோலம் பற்றியும், திருவுருவங்கள், வழிபடுபவர், வழிபாட்டுநெறி ஆகியவற்றைப் பற்றியும் அறியபட பெரிதும் உதவுகின்றன.

சகலராலும் எளிதிற் பின்பற்றக்கூடியதும் கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றிற்கு அடித்தனமானதுமான சரியை நெறியாளரான அப்பர் தாமே உழவாரப்படைதாங்கி ஏனையோருக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார். சமயநெறியில் மட்டுமன்றி கல்விச்சிந்தனைகளிலும் இவரது பாடல்கள் சைவ ஒழுக்கம். வழிபாடு, உபதேசங்கள் ஆகியவற்றினைக் கூறுவதன்மூலம் சிறப்பிடம் பெறுகின்றன.

******

# 3

# அப்பர் தேவாரத்தில் வேதங்கள், கேள்வி, இதிகாச புராணக் கருத்துக்கள்

அப்பர் தேவாரம் கூறும் கல்விச் சிந்தனைகளை நன்கு விளங்குவதற்குப் புராதன சமய தத்துவச் சிந்தனைகள் சிறந்த பின்னனிகளாக அமையும். வேதங்கள், வேள்விகள், இதிகாச புராணக் கருத்துக்கள் ஆகியன அப்பர் அருளிய தேவாரங்கள் காட்டும் கல்விச் சிந்தனைகளுக்குப் பொருத்தமான பின்னனியாக விளங்குமாற்றை நோக்குவோம்.

புராதன வைதிக இலக்கியங்களாகக் கருதப்படுபவை சங்கிதைகளும் பிராமணங்களுமாகும். அவற்றைத் தொடர்ந்தெழுந்த உபநிடதங்கள் வேதங்களாகவே கருதப்படுகின்றன. வைதிக இலக்கியங்களுட் காலத்தால் முந்தியது இருக்குவேதம். வைதிக தெய்வங்களுள் உருத்திரனே தேவார சிவனுக்கு முன்னோடியாயமைந்ததை நாம் தெளிவுறக் காணக்கூடியதாக உள்ளது. வேதங்களிற் சிவன் உருத்திரனாகவே கூறப்படுகின்றான். இவ்வுருத்திரனும் சிவனும் ஒன்றே என்றும், துன்பத்தை நீக்குபவன் எனும் பொருளில் உருத்திரனென்றும்; இன்ப உருவினன் எனும் பொருளில் சிவனென்றும் அழைக்கப்படுகின்றான் என அறிஞர் கூறுவர். உருத்திரனும் சிவனும் ஒன்றே என்பதை யசுர்வேதப் பாசுரங்களும் உறுதிசெய்கின்றன. யசுர்வேத்திலேயே இத்தெய்வம் பல பெயர்களாற் சதருத்திரியத்திற் போற்றப்படுகின்றான். தேவாரங்கள் இறைவனைச் 'சாமவேதர்' எனக் கூறுகின்றன. ஊடியிருந்ததேவி, இராவணன் இமயமலையை எடுக்கமுயன்றபோது அஞ்சியதாகவும் அப்போது இறைவன் காலால் அழுத்தியதாகவும் அவ்வமயம் இராவணன் தன் முன்கை நரம்பை வெட்டி வேதகீதங்கள் பாடியதாகவும் தேவாரங்கள் கூறுகின்றன.

இறைவனே சாமவேதம் பாடினார் என்பதை,

**'பாடினார் சாமவேதம்'**

**'பண்ணொரு பாடல் தன்னைப் பரவுவார்'**

எனப் பல அடிகள் திருமுறைகளில் இடம்பெறுகின்றன.

சாமவேதத்தை அடுத்து அதர்வவேதத்தில் தெய்வங்கள் தம் இயல்புகள் குறையப்பெற்று மாந்திரீகத்துடன் தொடர்புள்ளவர் களாகச் சித்திரிக்கப்பட்டபோதும் இந்நிலை உருத்திரனுக்கு ஏற்படவில்லை. அதர்வவேதம் உருத்திரனது பெயர்களாக பவன், மகாவேதன் ஆகியவற்றைக் கூறும். இக்கருத்தையே தேவாரங்கள்.

**'பவன் எனும் நாமம் பிடித்து'**
**'உயர் பசுபதி யதன் மிகை வரு பசுபதி'**
**'தீர்த்த மெலாம் சடைக் கரந்த தேவன்'**

எனக் கூறும். அதர்வவேதம் உருத்திரனை அந்தகனைக் கொன்றவனாகக் கூறுகின்றது. அதனைத் தேவாரங்கள்.

**'ஆர்த்தார் உயிரடும் அந்தகன்றன்னுடன் போர்த்தார்'**

எனக் கூறும். மேலும் வழிபடுவோர் மந்தைகளையும் மக்களையும் பாதுகாக்குமாறு சிவனை வேண்டுவர். தேவாரத்திலும் வழிபடுவோர் அடையும் பயன்களாக

**"ஆடிப் பாடிக் கைதொழ ஓடிப் போம்**
**நமதுள்ள வினைகளே"**

எனக் கூறப்பட்டுள்ளது நோக்கற்பாலது.

வேதங்கள் தொடர்பாக அப்பர் தமது தேவராங்களில் பலவாறு குறிப்பட்டுள்ளார். இருக்கு, சாமம் ஆகிய வேதங்களைப்பற்றிக் குறிப்பிடும் போது,

**இருக்கு நான் மறை ஈசனையே தொழும்**
**கருத்தினை நினையார் கல் மனத்தவரே.**

**சந்தோக சாமம் ஓதும் வாயானை**

**சாமவேதமாகி ன்றதோர் சயம்பு**
**சாமவேதர் பாடினார் சாமவேதர்**
**சாமுண்டி சாமவேதம் கூத்தொடும் பாடவைத்தார்**
**சாமவேதத்தின் இசை வீணை தடவிக் கொண்டார்**
**சாமவேத கந்தருவம் விரும்புமே.**

எனக் பலவாறு இயல்புவது குறிப்பிடற்பாலது.

தேவங்களை சிவபிரானோடிணைத்துக் காண்பது அப்பரின் சிறப்பியல்பு.

இதனை,

'ஓதிய வேத நாவர்'

'ஓதும் வேதம் கற்றானே'

'குற்றமில் வேதமுடை யானை'

'நால் வேதத்தர்'

'நால் வேதம் ஆனாய் போற்றி'

'ஓதினார் வேதம் வாயால்'

'நால் வேதம் கரை கண்டானை'

'பிறரறியாததோர் சுருதியானை'

'வேதத்தின் பொருள் கொள் வீணை கோட்பானை'

'வேத நாவன்'

'வேத நான்காயினானை'

'வேதம் ஆய விண்ணோர்கள் தலைவனை'

'வேதமும் சொல்ல வல்லான்'

'வேத வித்தை'

எனக் பலவாறுகூறுவதைக் கொண்டு, வேத அறிவு அறிந்து, பொருள் உணர்ந்து, உரியமுறையில் ஓதவல்லவனாகக் கூறியிருப்பது நோக்கற்பாலது.

சங்கிதைகளை அடுத்து பிராமணங்கள் சிறப்பிடம் வசிக்கின்றன. இவ்விலக்கியங்களில் உருத்திரன் மிகவும் பிரசித்திபெற்றுவருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. உருத்திரனுக்குரிய பெயர்களுள் மகாதேவனும் ஒன்றாகும். தேவாரம்.

'கங்கை சடை கரந்த மாதேவன் காண்'

'மலையார் தம் மகளொடு மாதேவன் சேரும் மறைக்காடு'

'மாதனத்தை மாதேவனை'

'மாதேவன் கண்டாய்'

'வானவர்கள் தாம் வணங்கும் மாதேவன்'

எனப் பலவாறு மாதேவனெனச் சிவனைக் குறிப்பிடுகின்றன. சங்கிதைகளிற் சிறப்பிடம் வகித்த உருத்திரன் பிராமண இலக்கியங்களில் மாதேவன், ஈசன், பசுபதி, போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றான். இதனையே தேவாரங்கள்

*'மாதேவன் தேவனல்லால் மற்றில்லையே'*
*'மாதேவன் கண்டாய்'*
*'ஈசன் பல்கணத்தெண்ணப்பட்டு'*
*'அனகனாய் நின்ற ஈசன்'*
*'எம்மான் ஈசன் எந்தை'*

எனக் பலவாறு போற்றுகின்றன.

பிராமண இலக்கியங்களில் சிறப்பிடம் வசிப்பன கிரியைகளே. சிவனையும் கிரியைகளோடு தொடர்புபடுத்திய பல பாசுரங்கள்,

*'அந்தியோடுதயம் அந்தணாளர் ஆனெய்யால் வேட்கும் செந்தழலுருவர்'*
*'ஒலி விறந்த வேதியின்... வேள்வி..... ஆவன் ஐயாறன் அடித்தலமும்'*
*'மேலான வேதியர்க்கு வேள்வியாகி வேள்வியின் பயனாய விமலன்'*
*'வேதங்கள் வேள்வி பயந்தார் போலும்'*
*'வேத வேள்விச் சொல்லான் காண்'*
*'வேளாத வேள்வி உடைத்தாய் போற்றி'*

எனக் பலவாறு இறைவனை வேள்வியோடு தொடர்புபடுத்தி வழுத்துகின்றன.

உபநிடத காலத்திற் புராதன இந்தியாவின் சமயமரபு தத்துவநெறி நோக்கிச் சென்றதை உணரத்தக்கதாயுள்ளது. உபநிடதங்களில் உருத்திரன் புலன்களாற்கிரகிக்கப்படாதவனாயும்;, பல தோற்றங்கள் கொண்டவனாகவும்; மனதில் வதிபவனாகவும், உலகின் பாதுபாவலனாகவும்; எங்குமுள்ளவனாகவும் போற்றப்படுகின்றான். இக்கருத்துகளையே தேவாரங்களும் போற்றிக்கூறுகின்றன.

மேற்குறிப்பிட்ட சிந்தனைகளின் வளர்ச்சியை அறிய இதிகாச புராணங்கள் இன்றியமையாதன. சைவர்கள் தாம் வணங்கும் தெய்வமான சிவபிரானை இத்தகையவரென உன்னித் தியானிக்கவும் திருவுருவில் எழுந்தருளச்செய்து வழிபடவும் வேண்டப்படும் விரிவான கருத்துக்களைப் புராணங்களே தருகின்றன.

பெயர் உருவமாகிய வரையறைகளுக்கப்பாற்றபட்ட இறைவனுக்கப் பெயரிட்டழைத்து, நாம் வழிபடவேண்டிய பல பெயர்களை அறிமுகஞ்செய்தவையும், பல திருவுருவங்களைக் கற்பித்தும், விக்கிரகங்களைத் தாபித்து வழிபடுபதற்கு வழிகோலியும், சமய தத்துவ சிந்தனையோடு மட்டுமன்றி, கல்விச் சிந்தனைகள் தொடர்பான அறிவை இவை விரித்துத் தருவதால் இவை இன்றியமையாது வேண்டப்படும் நூல்களாகும்.

இதிகாச புராணங்களில் இடம்பெறும் சிவபிரானது இலிங்கத் தோற்றம், ஏனைய சிவபிரானது கோலங்கள், அட்டவீரட்டங்கள் போன்ற பல்வேறு அம்சங்களும் சிவபிரானது அங்கத் தோற்றங்களும் அவரது கல்விச் சிந்தனைகளை அறியப் பேருதவிபுரியும்.

இலிங்கவழிபாடுபற்றி,

***'அளக்கலா எரிபுரியும் இலிங்க புராணத்துள்ளானை'***

***'இங்குற்றேனென்று இலிங்கத்தே தோன்றினான்'***

எனத் தேவாரங்கள் இயம்புகின்றன.

சிவபிரானது சடை நெற்றிக்கண், கரங்கள், கழுத்து, மேனியழகு, உடம்பு, அட்டமுர்த்தித்தோற்றம், அர்த்தநாரீசுவரத் தோற்றம் (மங்கைபங்கன்) ஹரிஹரத்தோற்றம், பரமயோகி, ஆதியுமற்தமுமற்றவர், யானைத்தோலுடை, புலித்தோலுடை, மான்தோலுடை தரித்தது, பிறைச்சந்திரன், ஆயுதங்கள் (சூலம்,மழு), ஊர்தி (இடபம்), கொடி (இடபக்கொடி), உறைவிடம் (கைலை) ஆகியவை பற்றிய விபரங்கள் தேவராங்களிற் பலவாறாகக் கூறப்பட்டுள்ளன.

இறைவனின் அட்டவீரட்டச் செயல்களாவன பிரமன் தலைகொய்தது, அந்தகனை அழித்தது, முப்புரங்களைக் செற்றது, தக்கன் செருக்கை அடக்கியது, சலந்தரனைச் சங்கரித்தது, கஜாசுரன் தோலுரித்தது. காமனைக் காய்ந்தது, யமனை உதைத்தது ஆகியவற்றைத் தேவாரங்கள் விரிவாகக் கூறும்.

வேதங்கள். வேள்விகள். இதிகாச புராணக் கருத்துக்கள் தொடர்பான தெளிவான கருத்துக்கள்ளயும், சிந்தனைகளையும் அப்பர் தமது தேவாரங்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளதை நோக்கும்பொழுது, அவர், இவை தொடர்பான சிந்தனை நன்கு கற்றுத் தெளிந்தவரெனக் கருதுதல் மிகப் பொருத்தமானதே.

4

## அப்பர் தேவாரத்தில் சைவ ஒழுக்கமும் வழிபாடும்

இதிகாச புராணக் கருத்துக்களை முன்னோடியாகக் கொண்டு, அவை கூறும் இறைவனது வீரச்செயல்களையும், அற்புதங்களையும் அடிப்படையாகக் கொண்டு சிவாலயங்கள் எழுந்தன. சிவாகமங்கள் கிரியைகளை கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் என நான்கு பிரிவுகளாக வகுத்து அமைந்துள்ளன. இவற்றுள் கர்ஷணம். என்பது நிலத்தை மட்டமாக்கி ஆலயம் அமைக்க ஆயத்தங்களைத் தொடங்கும் பொழுது நிகழ்த்தப்படும் உழுங்கிரியை ஆகும். பிரதிஷ்டை, அநாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்தனம், அந்தரிதம் என நால்வகைப்படும். ஆலயங்கள் இல்லாத இடங்களில் புதிதாக அமைத்து இங்கு இறைவனைப் பிரதிஷ்டித்தல் அனாவர்த்தப் பிரஷ்டையாகும். பன்னெடுங்காலங்களுக்கு முன் நிர்மானிக்கப்பட்ட தேவாலயங்கள் நெடுங்காலமாக நித்திய நைமித்திகங்கள் நடைபெற்றுவரும்வேளை எதிர்பாராதவாறு காடுபடர்தல், மன்மாரி, தீபரவுதல் முதலியவை நிகழ்ந்து ஆலயம் மறைக்கப்பட்ட பொழுது, அதனை வெளியாக்கியோ அல்லது முன்போல் தேவாலயமொன்றைப் புதிதாக நிர்மானித்தோ நிகழ்த்தும் பிரதிஷ்டை ஆவர்த்தனப் பிரதிஷ்டையாகும். நித்திய நைமித்திகங்கள் நடைபெற்று வரும்வேளை, விமானம், கோபுரம், மண்டம், பிராகாரம், ஆலய விக்கிரகங்கள் ஆகியவற்றில் எவையாயினும் வெடித்தோ பிளந்தோ சேதமடையின் பாலஸ்தாபனஞ் செய்து பழுதடைந்த கட்டிடங்களை முன்போல் அழகாகவும் பலம்வாய்ந்ததாகவும் திடமானதாகவும் அமைத்து பிரதிஷ்டை செய்வதனைப் புனராவந்தனப் பிரதிஷ்டை என நூல்கள் கூறுகின்றன. தேவாலயத்தில் மக்கள் எவரிறப்பினும் மிருகங்கள் கொல்லப்படிகும் கள்ளர், பைத்தியக்காரர், நாய், கழுதை, பன்றி, குரங்கு, வேதாகமங்களை நித்திப்போர் நுழையினும் நிகழ்த்தப்படும் கிரியை அந்தரிப் பிரதிஷ்டையாகும்.

அப்பர் காலத்தில், பலவகையான ஆலயங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவரது பின்வரும் பாசுரமொன்றிலிருந்து, அறியக்கூடியதாகவுள்ளது.

**'பெருக்கு ஆறுசடைக்கு அணிந்த பெருமான் சேரும்**
**பெருங்கோயில் எழுபதுனோடு எட்டும் மற்றும்**

கரக்கோயில் கடி பொழில் சூழ் ஞாழல் கோயில்
கருப்பறியல் பொருப்பு அனைய கொகுடிக் கோயில்
இருக்கு ஓதி மறையவர்கள் வழிபட்டு ஏத்தும்
இளம் கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவன் உறையும் கோயில்'

இத்தகைய ஆலயங்களில்,

'நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கும் இட்டு
பூமாலை புனைந்து ஏற்றிப் புகழ்ந்து பாடி
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடி
சங்கரா சய போற்றி போற்றி என்றும்
அலை புனல் சேர் செம்சடை எம் ஆதி என்றும்
ஆரூரா என்று என்றே அலறா நில்லே'

எனக் தம் பேரியல்பு தோன்ற அனுபவநிலையில் அறிவுறுத்தி மகிழ்கின்றார். அவரது பாடல்கள், சமணரை இகழ்ந்து, சைவத்தைப் போற்றும் தன்மையன. சமணரைப்பற்றிக் குறிப்பிடும்போது அவர்களது உடை, உடையின்மை, ஆசனம், உண்ணும்வகை, உறிதூக்குதல், குளியாதிருத்தல். துறவு, பறிதலையர், போன்ற வார்த்தைகளாற் குறிப்பிட்டுச் சமணரைப் பற்றிய பதிகமொன்றில் அவர்களைப்பற்றிய விபரங்களைக் குறிப்பிடுகின்றார். இத்தகைய சமயநெறியில் தலைவராயிருந்தவர், மீண்டும் சைவத்திற்கு மாறிவந்தபின், இறையருளுக்குப் பாத்திரமாகி சைவ ஒழுக்க பற்றிய பல விபரங்களைத் தமது பாடல்களில் ஆங்காங்கு குறிப்பிட்டுள்ளார்.

'அட்டமாங்கம் கிடந்தடி (விழுதல்)
அலகும் நீரும் கொண்டாட்டித் (தெளிதல்)
அவர்புனல்சேர் செம்சடை ஆதி(எனப்போற்றுதல்)
ஆப்பி நீரோடலகுகைக் (கொள்ளுதல்)
இளவெழுந்த இருங்குவளை மலர்பிளவுசெய்துபிணைத்து அடி(யிடுதல்)
எருக்கம் கண்ணி கொண்டிண்டை (புனைதல்)
கட்ந்வாங்கம் கபாலக் கைக் (கொள்ளல்)
கனர்டி பூண்டு கபாலங்கைக் (கொள்ளல்)
கந்தமாலர் இண்டை புனைதல்

காலை எழுந்து கடிமண தூயன தாங்கொணர்ந்து
சங்கரா சயபோற்றி போற்றுதல்
சலம்பூவொடு தூபம் இறவாமை
தமிழோடிசைபாடல் மறவாமை
தலையாரக் கும்பிட்டுக் கூத்தாடுதல்
திலகமண்டலம் தீட்டித்திரிலை
நக்கணைந்து நறுமலர் கொய்தல்
நித்தம் எம்பிரானுடைய கோயில்புக்கல்
நிரம்ப நீர்வுமந்தாட்டி நனைதல்
நெய்யும் பாலும் கொண்டாட்டி நினைதல்
புக்கணைந்து புரிந்தவர் இடுதல்
புலர்வதன் முன் அலகிட்டு (மெழுகிடுதல்)
பூப்பெய் கூடைபுனைந்து (சுமத்தல்)
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து (பாடுதல்)
பெருக்கக் கோவணம்பீறி (உடுத்தல்)
பொய்யும் பொக்கமும் போக்கிப் (புகழ்தல்)
மரக்களேறி மலர் பறித்திடுதல்
விண்டவான் சங்கம் விம்மவாய் (வைத்தல்)
வெந்த நீறு விளங்க(அணிதல்)

போன்ற சைவ ஒழுக்கத்தினோடிணைந்த செயல்கள்பற்றியும் தமது திருப்பாடல்களில் ஆங்காங்கு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விதம் சைவ ஒழுக்கம் பற்றிய பல விபரங்களோடு ஆங்காங்கு அகப்பூசைமுறை, அட்டபுஷ்ப பூசை, வழிபாடு ஆகியன பற்றிய பல விபரங்களையும் கூறுவனவாக அப்பரது பாடல்கள் அமைகின்றன.

"காயமே கோயிலாகக் கடி மனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறை நீரமை ஆட்டி
பூசனை ஈசனர்க்கு போற்றவக் காட்டினோமே"

என அழகுற அறிவுறுத்தியுள்ளார்.

அட்டபுட்பம் கொண்டு வழிபாடு இயற்றினால், வினைகள் தீரும் என்பது ஆன்றோர் கருத்து இதனையொட்டி அப்பரும்,

அட்டபுட்பம் அவைகொளுமாறு கொண்டு அட்டுமாறு செய்திப்ப
அட்டமாலர்கள் கொண்டே ஆனஞ்சும் ஆட்ட

*உரை செய்நூல் வழியொன்மலர் எட்டிட...வினைகள் தீர்ப்பரால் எட்டுநாண் மலர் கொண்டவன் சேவடி மட்டலர் இழுவார் வினைமாயும்*
*அழித் தொண்மலர் கொண்டுபணிந்தவர் ஊழித் தொல்வினையோட அகற்றுவர்*

*தடமலரெட்டினால் பரித்தேத்தவல்லார்வினைபாற்றுவர்*
*தேனப்போதுகள் முன்றோடைந்துடன் காணப்போதிடுவார் வினைதீர்ப்பவர்*
*நீளமா நினைந்ததொண்டலரிட்டவர்.... வினையும் குறைவிப்பரல்*
*பூங்கொத்தாயின் முன்றோடோரைத்திட்டு வாங்கி நின்றவர் வல்வினை யோட்டுவார்*
*மலரெட்டினால் காலையேத்தவினையைக்கழிப்பரால்*
*மலரோரிரு நான்கு பொண்டுள்குவாரவர் வல்வினையோட்டிடுவார்*

எனப் பலவாறு அட்டபுட்ப பூஜை பற்றியும், அதன்மூலம் வினைகள் போக்கலாம் எனவும் கூறுவது நோக்கற்பாவது. மேலும் பூசைசெய்யும் முறையாக தூய காவிரியில் நன்னீர்கொண்டு இருக்கொடு ஓதி ஆட்டி, குங்குக்குழம்புசாத்தி, இண்டைகொண்டு, ஏறநோக்கி ஈசனைக் கண்டு வழிபடுதலாகும். வழிபடும்போது புரியும் தொண்டுகளாக அஞ்செழுத்தோதுதல், அடிபணிதல், ஆப்பிநீர் அலகு கொண்டு திருக்கோயிலைச் சுத்திசெய்தல், இண்டைமாலைகட்டுதல்,கட்டுவாங்கம், கபாலம் கைக்கொள்ளுதல், கல்லவடம்இடுதல், கண்டிபூணுதல், சங்கம்ஊதுதல், தாளம் கைக்கொள்ளல், தியானித்தல் , திலகமிட்டுக்கொள்ளுதல், துதித்தல் (பாடுதல், ஏத்துதல், கதறுதல்), நாமங்களை ஓதுதல், நீறிட்டு நினைத்தல், பூக்கூடைசுமத்தல், மலர்பறித்தல், பூசித்தல், முழுக்காட்டுதல், விளக்கிடுதல் முதலியவற்றைக் குறிப்பிடுகின்றார்.

இறைவனது சுழல்களை அமரர்களும் தொழுது பணிவர். இதனை,

*அண்டர்கள் தொழுதோது சூடு சுழல்*
*அமரர்கள் அருச்சித்தேத்த இருந்தவன் காண்*
*இந்திரன், பிரமன், அங்கி எண் வகை வசுக்களோடு வானவர் வணங்கி வாழ்ந்த*
*தோத்திரங்கள் சொல்லி வானோரேத்த நிறைந்தானை*
*மந்திர மறையதோதி வானவர் வணங்கி வாழ்த்த*
*வேதங்கள் நான்கும் கொண்டு விண்ணவர் பரவி ஏத்த*

எனப் பலவாறு அப்பர் கூறியுள்ளார்.

இவ்விதம், வேதாகம நெறிக்கமைய சைவ ஒழுக்கம். வழிபாடு தொடர்பான பல விடயங்களை அப்பர் பதிகங்களுக்கு அறிவூட்டும் வகையில் கொண்டமைவதோடு பல நீதிவாக்கியங்களையும் உபதேசங்களையும் கொண்டு இலங்குகின்றன.

## 5

# அப்பர் தேவாரத்தில் நீதிவாக்கியங்களும், உபதேசங்களும்

அப்பர் தம் வாழ்நாள் முழுவதும் உழவாரப்பணிபுரிந்து, சரியை நெறியை உலகிற்கு உணர்த்தியவர். அவரது பாடல்களில் ஆங்காங்கு நீதிவாக்கியங்களும் உபதேசங்களும் இடம்பெறுகின்றன.

அவர் அந்தணனைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது,

*'அந்தணர்க் கருங்கலம்அருமறை ஆறங்கம்'*

எனக்குறிப்பிடுகின்றார். அதாவது வைதிக இலக்கியங்களாகக் கருதப்படும் சங்கிதைகள், பிராமணங்கள், ஆரணியகங்கள், உபநிடதங்கள் ஆகியவற்றோடு வேதாங்கம் எனப்படும் சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், ஜோதிஷம், கல்பம், நிருத்தம் என்பன. இவையே அந்தணர்க்கருங்கலம் என்கிறார்.

இறைவனது திருவடிகளை நினையாத வாழ்வெல்லாம் பூமியில் பிறந்தநாளல்ல எனும் கருத்துப்பட 'அரன் திருவடிகள் நிலைய மாட்டா... வாழ்வெல்லாம் மண் மேல் பிறந்த நாள் நாளல்ல' எனக் கூறியுள்ளார்.

இறைவனது திருவடிகளை மனதில் அமையப்பெறாதவர் நரகக்குழியில் இருப்பர் என்பதை 'அரன் பொற்கழல் உள்ளிருக்கும் உணர்சியிலாதவர் நள்ளிருப்பர் நகரகக்குழியில்' என்கிறார். தீராத நோய்கள் அகல வெண்ணீறயாதவர் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கிற்றாரென்பதை அரு நோய்கள் கெட வெண்ணிறணியாராயின் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றார் எனக் கூறகின்றார். ஒரு காலும் திருக்கோயில் குழாதவரும் பிறப்பதற்கே தொழிலாகி இறப்பவராக அப்பர் கருதுகிறார். இறைவனை தானன்றி வேறொன்றிலாத் தத்துவனாகவும் உண்பதன் முன் மலர்பறித்திட்டு உண்ணாதவர் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரெனவும் அப்பர் கூறுகின்றார்.

தனித் திருக்குறுந்தொகைப் பதிகத்துள்

**"ஒன்ப தொன்பதி யானை யொளிகவி**

றொன்ப தொன்பது பல்கணைஞ் சூழவே
ஒன்ப தர்மவை தீத்தொழில் இன்னுரை
ஒன்ப தொத்து நின் றொன்னான் ஒடுங்குமே"

எனும் பாடலில் ஒன்பது என்ற எண்ணில் மேல் வைத்து இன்னுரை ஒன்பது ஒத்து நின்று என்னுள் ஒடுங்குமென ஒடுக்கத்தைக் குறித்துள்ளார். என் பேச்சுக்கள் முதலியன எல்லாம் எவ்வளவு விரிந்து சூழினும் முடிவில் நான் எனும் அகங்கார நினையினவாய் வந்து என்னையே சுற்றி என்கைதி தொடுங்கும், ஒன்பது எனும் எண்ணினைப் போல் எனக் குறிக்கின்றார். ஒன்பது எனும் எண்ணை எந்த எண்ணால் பெருக்கிக் கூட்டினாலும் ஒன்பதே வரும். (உ+ம்) 9 x 6 = 54 , 5 + 4 = 9. இதேபோல் நமது செயல்களெல்லாம் யான் எனும் இகங்காரநிலையில் நம்முள்ளே அடங்கும்.

உறங்கா துறங்கும் சிவயோக நிலையை

**"வஞ்சப் பெண் ணரம்குபோயில் வாளெயிற் றரவஞ் தஞ்சா**
**வஞ்சப் பெண் ணிருந்தசூழல் வான்றவழி மதியம் தோன்றும்**
**வஞ்சப் பெண் வாழ்க்கை யாளன்வாழ்வினை வாழலற்று**
**வஞ்சப் பெண் ணுறக்க மானேன் வஞ்சனேனென் செய்கேனே"**

எனும் பாடலில் வஞ்சப் பெண் - கங்கை, அவளிருக்கும் அரங்கைக் கோயிலாக்க கொண்டு வாழ்வது பாம்பு, அவ்வாளெயிற்றரவமும் வான்தவழ் மதியமும் வாழும் இடம் - செஞ்சடைக்சூழல்; வஞ்சப் பெண் வாழ்கையாளன் - செஞ்சடையோன், அவ்வாழ்க்கை - வஞ்சர பெண்வாழ்க்கை, அதாவது கள்ளக் காதலிடத்தன்புகலந்து வைத்தொழுகும் கள்ளக்காரிகை வாழ்க்கை; வஞ்சப் பெண்ணுறக்கம் - பொய்யுறக்கம், கைப்பிடித்தநாயகன் தூங்கும் பொழுது அவனை எமாற்றி தன்மேற்படும் அவன் கையெடுத்து அப்புறந்தள்ளி புறம்போகநினைக்கும் கள்ளக்காரிகையின் பொய்த்துயில்.

உள்ளக்கிழவனைவிட்டு கள்ளக்குழவனைத்தொட்டு காதலால், நட்டுவாழும் ஒருத்தி இரவில் அவன் வரவுநோக்கித் தூங்காது கண்மூடியிருக்கும் நிலையாகும். .

மேற்குறித்த பாடலின் தத்துவத்தினையும் விளங்குதல் பொருத்தமானது. தேவியை தம்பாதியிலுடைய இறைவன் வம்பாகக்

கங்கையை வஞ்சப் பெண்ணைத் தம்பாதியில் வைத்துள்ளான். இதனால் அவ்வஞ்சப் பெண்வாழ்க்கையாளன் ஆகினாள். இறைவன் செஞ்சடையாளிடம் நெஞ்சம் வைத்து உறக்கம் சிறிதுமின்றி இருக்கிறான். உமையை ஏய்த்துக் கங்கையைக் கலக்க உறங்காதுள்ளான். அவன் தலையில், மன்னிய பாம்பும் திங்களை விழுங்கக்கருதி உறங்காதிருந்தது. அவ்வஞ்சப் பெண் வாழ்க்கையாளன் (சிவபெருமான்) வாழ்வினை வாழ்வதாக நாவுக்கரசர் கூறுகின்றார். அதாவது, உயிர்த்துணையாம் தோன்றாத்துணைக்கு ஓர் துணையாகித் துவாதசாந்தப் பெருவெளியில் துரியம் கடந்த பரநாத மூலத்தலத்து வாழ்வு.

மேலும், வஞ்சப் பெண்ணாகிய கங்கை அப் பெண் வாழ்க்கையாளனாகிய சிவபெருமானைத் தழுவவிழைந்து அவன் வரவினை நோக்கித் தூங்காது தூங்கியலைகின்றாள். செஞ்சடைமுடியான் செம்பாதியாள் அறியாதவாறு கங்கையைத் தழுவித்துயிலாது துயில்கிறான். வாளெயிற்றரவு மதியை விழுங்கக் கருதிக் கண்வளராது வளர்கின்றது, இடையில் அவ் வஞ்சப் பெண்ணை மதியம் தோய்கின்றது. இங்கு அப்பர் உறங்காதுறங்கும் சிவயோகநிலையை நகைச்சுவையோடு தத்துவத்தையும் இணைத்து அழகுறக் கூறியுள்ளார்.

அப்பர் வேணியப்பரை விரும்பி வஞ்சப் பெண்போல உறங்காது உறங்குகின்றார். அது துவாதயசாந்தப் பெருவெளியில் விழித்துறங்கும் சிவயோக நிலையாகும்.

இதனையே தாயுமானவரும்.

***"ஆங்கா மற்றுன் அறிவான அன்பருக்கே***
***தூங்காத தூக்கமது தூங்கும் பராபரமே"***

எனக் குறிப்பிட்டுள்ளார்.

அடவி காடாக அருப்போடு மலர்பறித்திட்டுண்ணா ஊரையும், திருவெண்ணிறணியாத திருவிலூரையும், பருக்கோடிப் பத்திமையாற் பாடா ஊரையும், பாங்கினொடு பல தாரிகள் இல்லா ஊரையும், விதானமும் வெண்கொடியும் இல்லா ஊரையும் விருப்பொடு வெண் சங்கம் ஊதா ஊரையும், அப்பர் கூறி, இவை ஊரல்ல அடவிகாடே எனக் குறிக்கிடுகின்றார்.

திருநீறணிபவரை நினைப்பவரே இச்சையாவதும் வேட்கையாவது மென

***'விச்சையாவதும் வேட்கையாவதும்***
***நிச்சல் நீறணிவாரை நினைப்பதே"***

எனக்கூறியுள்ளார். இதையே 'நெந்த நீறருங்கலம் விரதிக்கெலாம்' எனப் பிறிதோரிடத்திற் குறிப்பிடவது ஈண்டு நினைவுகூரற்பாலது. இறைவனை 'தன்னைநோக்கி தொழுவார்க்கெலாம், பின்னை என்னார் எனக் குறிப்பிட்டு, 'நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே' என்றுரைத்த அப்பர் பெருமானின் பாடல்களில் ஆங்காங்கு நீதிவாக்கியங்கள் பரந்து காணப்படுகின்றன.

இவரின் திருப்பாடல்கள் உலகுக்கு உபதேசஞ்செய்யும் தன்மையனவாகவும், நெஞ்சுக்கு உபதேசஞ்செய்வனாவாகவும் உலகினருக்கு மெய்ந்நெறிகாட்டும் உபதேசங்களை உள்ளடக்கியனவாகவும், இறைவனைக் காணமுடியாமைக்கான காரணங்களைக் கூறி நன்னெறி காட்டும் நோக்குடையனவாகவும் தலங்களைக் குறிக்கும் உபதேசங்களாகவும் அமைவதைக் காணலாம்.

இறைவனை மனதில் நினைந்து, மலர்தூவி, திருநாமம் ஐந்தும் சொல்லி மனக்கசிவுடன் தொழவேண்டுமெனவும், அவ்விதம் தொழுதால் வினையும் நோயும் வெந்தறும் எனவும், வைகலும் மறவாது வாழ்த்தி ஏத்திக் காதன்மையால் தொழவேண்டுமெனவும் அப்பர் தமது திருப்பாடல்களில் கூறுகின்றார். இதனை,

***'அள்ளலைக் கடக்க வேண்டில் அரனையே நினைமிற் நீங்கள்'***
***'இடர்தனைக் கழிய வேண்டி இறைவனை ஏத்துமின்றோ'***
***'இருத்தி எப்போழுதும் நெஞ்சன் இறைவனை ஏத்துமின்கள்'***
***'இறைவனை நாளும் ஏத்த இடும்பை போய் இன்பமாமே'***
***'பூக்கள் கொண்டவன் பொன்னடி போற்றினால்***
***காப்பர் நம்மைக் கறைமிடற்றன்னலே'***
***'திருநாமம் அஞ்சம் சொல்லிக் கசிவினால் தொழும்'***
***'பற்பலகாலம் பயிற்றிப் பரமனைச் வொற்பல காலம் நின்***
***றேத்துமின் தொல்வினை .. கதிரகண்ட அப்'***
***'புற் பணி கெடுமாறது போதமே '***
***'பூக்கள் கொண்டவன் பொன்னடி போற்றினால்***
***காப்பர் நம்மைக் கறை மிடற் றண்ணலே'***

'மந்திரம் நமச்சிவாய ஆகத் தனியப் பெற்றால்
வெந்தறம் வினையும் நோயும் வெவ்வழல் வினாஇட்டன்றே'
'வென்ற ஐம்புலன்கள் தம்மை விலக்குதங்குரியீரெல்லாம்
ஒன்றவே உணர்ந்திராகில் ஓங்காரத் தொருவனாகும்'
'வைகல் மறவாது வாழ்த்தி ஏத்திக் காதன்மையால் தொழும்'
'வைத்த மாடும் மடந்தை நல்லார்களும் ஒத்தொவ்வாத உற்றார்களும்
என்செய்வார்.... அத்தர் தாமுளர் அஞ்சவதென்னுகே'

எனக் பலவாறு கூறியுள்ளார்.

உலகினர்க்கு உபதேசங்கள் பலவாறு செய்த அப்பர் நெஞ்சுக்கும் உபதேசஞ்செய்துள்ளார். உபதேசம் செய் பதிகங்களாக 5.33, 5.49, 6.42 ஆகிய பதிகங்கள் கருதப்படு கின்றன.

தனது நெஞ்சினை இடர்கெடுமாறு எண்ணும்படியும் எம்பெருமான் சேவடி வாழ்த்தி வணங்கவேண்டுடெனவும், துயங்கிநின்று சோரவேண்டாமெனவும், எந்தையர் திருநாமம் நமச்சிவாய என்றெழவேண்டுமெனவும், தீவினைகள் தீரும்வண்ணம் கதறவேண்டுமெனவும், தாழ்ந்து பணிசெய்யுமாறும், நித்தம் திருவாரூராரெனச் சிந்திக்குமாறும், ஈசன் அடியினை நவிலுமாறும், பாசத்தைப் பற்றறுக்க எம்பெருமானை ஏத்தவேண்டுமெனவும், இன்பம் வேண்டில் நம்பன்தன் அடியிணைக்கே நவில்வாயெனப் பலவாறு அவர் தம் பாடல்களில்,

'இடர்கெடுமாறும் எண்ணுதியேல் நெஞ்சேநீவா...... ஆரூரா
என்றேன்றே அவறா நில்வே.....'

'உள்ளமே ஒன்றுறுதி உரைப்பன் நான்...ஆரூர்
அமர்ந்த எம் வள்ளல் சேவடி வாழ்த்தி வணங்கிடே'

'குலங்கள் என்செய்வ குற்றங்கள் என்செய்வ
துயங்கி நீ நின்று சோர்ந்திடல் நெஞ்சமே...... சேறை
அலங்கனார் உளர் அஞ்சுவதென்னுக்கே.........'

'எந்தையர் திருநாமம் நமச்சிவாய என்றெழுவார்க்
கிருவிசும்பின் இருக்கலாமே'

'செடியேறு தீவினைகள் தீரும் வண்ணம்
சிந்தித்தே நெஞ்சமே திண்ணமாக........ கச்சிக்கம்பா
என்றும் கற்பகஎன்றென்றே கதறாநில்லே'

'சோற்றுத் துறையருக்கு தாழ்ந்து நீ பணி செய்மடநெஞ்சமே'
'நீப்பரிய பல பிறவிநீங்கும் வண்ணம் நினைத்திருந்தேன்'

*காண் நெஞ்சே.......நித்தமாக..... திருவாரூரா என்றே சிந்தி நெஞ்சே*
*பாசத்தைப் பற்றறுக்கலாகும் நெஞ்சே எம்பெருமான்*
*என்றென்றே ஏத்தா நில்லே*
*'வையர் தன்னில் கள்ளக் கடலில் அழுந்தி வாளா*
*நலஞ்சுழியா எழு நெஞ்சே.....இன்பம் வேண்டில்*
*நம்பன் தன் அடியிணைக்கே நவில்லாய்*

எனப் பலவாறு உபதேசஞ்செய்துள்ளார்.

அப்பர் உலகினர் பொருட்டு வருந்துவதோடமையாது, அவர்களுக்கு மெய்ந்நெறி காட்டும் உபதேசங்கள் செய்ததை அவரது பாடல்கள் எடுத்தியம்புகின்றன.

உலகினர், ஆளாளுரை அடைந்துய்யாது மெய்ம்மையுள்நில்லாது மாய்ந்து மண்ணாகிக் கழிவர் எனவும், ஐயனை அறியாத சிலர் காலங்கள் போக்கிடுவார்களெனவும், தமக்குள்ள சிவனைச்சலவார்கள் சிந்திப்பதில்லையெனவும், அப்பர் வருந்துகிறார். இதனை,

*'ஆளாகார் ஆளானாரை அடைந்துய்யார்*
*மீளா ஆட் செய்து மெய்ம்மையுள் நிற்கிலார்*
*தோளாச் சுரையோ தொழும்பர் செவி*
*வாளா மாய்ந்து மண்ணாகிக் கழிவரே'*

*'ஐயனை அறியார் சிலர் ஆதர்கள்....பழனன்பால்*
*பொய்யர் காலங்கள் போக்கிடுவார்களே'*

*'வையம் வலம் கொளும் ஐயனை அறியாச் சிலர்*
*ஆதர்கள்......பொய்யர் காலங்கள் போக்கிடுவார்களே'*

*'சலவார்கள் தமக்குடல் சிவனைச் சிவனைச் சிந்திப்பார்களே'*

எனப் பலவாறு அப்பர் கூறியுள்ளமை ஈண்டு நோக்கற்பாலது.

ஈசனை மனதில் உள்குவர்க்கன்றி, ஏனையோர், எத்துணை முயவிலும் பயனில்லையென்பதை,

*"கங்கையாடிலென்,காவிரியாடிலென்*
*பொங்கண் குமரித்துறை ஆடிலென்*
*ஓங்குமாக் கடல் ஓத நீராடிலென்"*

*"காலை சென்றுகலந்து நீர் மூழ்கிலென்*
*வேலை தோறும் விதி வழி நிற்கிலென்*
*ஆலை வேள்வி அடைந்தது வேட்கிலென்"*

"கான நாடு கலந்து திரியிலென்
ஈன்மின்றியிருந்தவஞ் செய்யிலென்
ஊனை உண்டல் ஒழிந்து வான் நோக்கிலென்"

"நன்றுநோக்கிலென் பட்டினியாகிலென்
குன்றிமேறி இருந்தவஞ் செய்யிலென்
சென்றுநீர் குளித்துத் திரியிலென்"

"பட்டராகிலென் சாத்திரம் கேட்கிலென்
இட்டுமட்டியும் ஈதொழில் பூணிலென்
எட்டும் ஒன்று இரண்டும் அறியிலென்"

"வேதம் ஓதிலென் வேள்விகள் செய்கிலென்
நீதி நூல்பல நித்தம் பயிற்றிலென்
ஓதி அங்கம் ஓராறு உணறிலென்
ஈசனை உள்குவார்க் கன்றி இல்லையே"

எனப் பலவாறு கூறி, பருந்து ஒன்றாய் நின்றான், ஞானன், இட்டன். பத்தர் சித்தத்துள்ளான் எனப் பலவாறு கூறியுள்ளார்.

மேலும் இறைவனைக் காணமைக் காரணங்களை இன்ன இன்ன செய்யாமையால் அவரைக் காணவில்லை யென்பதை, அவற்றைச் செய்யத் தூண்டுவதனையும் அவரது பாடல்கள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. இது தொடர்பாக, அப்பர் தம் பாசுரங்களில்,

'அட்டமாங்கம் கிடந்ததடி வீழ்ந்திலர்'
'அலரும் நீரும் கொண்டாட்டித் தெளிந்திலர்'
'ஆப்பி நீரோடலகு கைக்கொண்டிலர்'
'இளவெழுந்த இருங் குவளைம் மலர், பிராவு செய்து'
'பிணைந்தடி யிட்டிலர்'
'எருக்கங் கண்ணி கொண்டிண்டை புனைந்திலர்'
'கட்டுவாங்கம் கபாலம் கைக் கொண்டிலர்'
'கண்டி பூண்டு கபாலம் கைக்கொண்டிலர்'
'கந்த மாமலர் இண்டை பிணைந்திலர்'
'திலக மண்டலந் தீட்டித் திரிந்திலர்'
'நக்கணைந்து நறுமல் கொய்திலர்'
'நிரம்ப நீர் சுமந்தாட்டி நினைந்திலர்'
'நெய்யும் பாலும் கொண்டாட்டி நினைந்திலர்'

'பூக்கணைந்து புரிந்தலரிட்டிலர்'
'பூப் பெய் கூடை புனைந்து சுமந்திலர்'
'பொய்யும் பொக்கமும் போக்கிப் புகழ்ந்திலர்'
'மரங்களேறி மலர்பறித்திட்டிலர்'
'விண்டவாள் சங்கம் விம்ம வாய் வைத்திலர்'
'வெந்நீறு விளங்க அணிந்திலர்'

எனப் பலவாற செய்யாத செல்களைக் கூறி, அதனாலேயே இறைவனைக் காணவில்லையெனக் கூறுவது ஈண்டு நோக்கற்பாலது.

அப்பரது உபதேசங்கள் திருந்தலங்களோடு தொடர்புற்றிருப்பதையும் சமணர், புத்தர் தொடர்பானவையுமாக அமைந்துள்ளன.

திருத்தலங்களைப் பொறுத்தமட்டில் அண்ணாமலை, அதிகை,அன்பிலாந்துறை, ஆமாத்தூர், ஆரூர், அரனெறி, ஆலம்பொழில், ஆனைக்கா, இராமேசுரம், ஐயாறு, ஒற்றியூர், கச்சி, கடம்பத்துறை, கடம்பூர், கண்டியூர், கருவிலி, கழுமலம், காட்டுப்பள்ளி, கானூர், குடமூக்கு, குரங்குக்கா, கொண்டீச்சுரம், கோடிகா, கோழம்பம், கோளிலி, செம்பொன் பள்ளி, சேறை, சோற்றுத்துறை, திரிசிராப்பள்ளி, தில்லை, நல்லம், நல்லூர், நாகை, நின்றியூர், நீலக்குடி,நெய்த்தானம், பராய்த்துறை, பழனம். பாண்டிக்கொடிமுடி, பாதிரிப்புலியூர், புகலூர், புத்தூர், புள்ளிருக்குவேளூர், பூந்துருத்தி, பூவனூர், பைஞ்ஞிலி, மனஞ்சேரி, மருகல், மாற்பேறு, மீயச்சுரு, வலஞ்சுழி, வாஞ்சியம், வாய்மூர், வீழிமிழலை, வெண்காடு, முதலிய திருத்திலங்கள் தொடர்பானவையாகவுள்ளன.

இவற்றுள், புள்ளிருக்கு வேளூர் பற்றிக் குறிப்பிடும்பொழுது,

"மாற்ற மொன்றறியீர் மனை வாழ்க்கை போய்க்
கூற்றம் வந்துமைக் கொள்வதன் முன்னமே
போற்ற வல்லீரேற் புள்ளிருக்கு வேளூர்
சீற்றமாயின தேய்ந்தறும் காண்மினே"

என இத்தலத்துள்ள இறைவன் பெருமையைக் கூறுவதன் மூலம், தமது உபதேசச் சிந்தனைகளைத் திருத்தலத்துடன் தொடர்புபடுத்திக் கூறியுள்ளதைக் காணலாம்.

அப்பர் சமணர், பௌத்தர் தொடர்பாக, இகழந்துரைத்து, அவர்கள் சொற்கேளேல் என அறிவுறுத்தும் தன்மையும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

சமணரைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது நேசமிலாதவர், ஊத்தைவாயர். கடுவாயர், மனைதுறந்தவல்லமணர், மாசின ஏறிய மேனியர் எனப் பலவாறு இழித்துக்கூறி,

*"கடுவாயிட்டவர் கட்டுரை கொளாதே"*
*"சமணர் சொற் கேளாதீர்"*

என அறிவுறுத்தல் நோக்கற்பாலது. மேலும், ஐந்தாந் திருமுறையிலுள் ஒரு பதிகம் சமணரைப் பற்றியதாக உள்ளது.

இதேபோன்று பௌத்தரையும் உடல்மூடுவார். பொய்யெலாம் உரைக்கும் சாக்கியர் எனக் கூறி,

*"சமணர் புத்தர் குறியறியாது நின்று கண்டதே*
*கருதுவார்கள் கருத்தெண்ணா தொழிமினீகள்"*
*"மெய்யின் மாசுயைரார் உடல் மூடுவோய் பொய்யை*
*மெய் யென்று புக்குடன் வீழன்மின்"*

எனப் பலவாறு அறிவுறுத்துவதையும் காணலாம்.

இவ்றாறு அப்பர் தமது நீதிவாக்கியங்கள், உபதேசங்கள் மூலமும்,

*"ஆறொன்றிய சமயங்களின் அவ்வவர்க்கப்பொருள்கள்*
*வேறொன்றிலாதன"*

எனக் கூறும் திரு இன்னமபர் திவிருப்பாமுலமு சிவஞானசித்தியார் கூறும்,

*"யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி*
*மாதொரு பாகனார் தாம் வருவர்"*

எனும் கருத்துக்கு அடி கோலியது மட்மன்றி இயற்கைப்பொருள் அழகு, கருத்தாழம்மிக்க பாடல்கள் மூலம் சாத்திரக் கருத்துக்களை இலக்கிய நயம்பொருந்த கற்போரை இலக்கிய இன்பத்தில் ஈடபடச்செய்த பெரியாராக அப்பர் விளங்குகின்றார்.

# 6
# அன்னையின் அருட் கண்கள்

உலகிலுள்ள எண்ணற்ற உயிர்களுக்கெல்லாம் ஒப்பற்ற பெருந்தாயாக அன்னை விளங்குகின்றாள். அருளே வடிவமான அவளை,

*"அருளுண் டாம் ஈசற் கதுசத்தி யன்றே*
*அருளும் அவனன்றி யில்லை"*

எனச் சிவஞான போதமும்,

*"அருளது சத்தி யாகும அரன்தனக் கருளை யின்றித்*
*தெருள்சிவ மில்லை அந்தச சிவமின்றிச் சத்தியில்லை"*

எனச் சிவஞான சித்தியாரும், சிவஜ்ஞானப் பிரதாயினி, காமாக்ஷி, பத்மநயனா, மிருகாக்ஷி, பக்தரக்ஷணதாக்ஷிண்யகடாக்ஷி,ணீ என லலிதா சகஸ்ரநாமமும், லலிதா அஷ்டோத்தரசதமும் கூறுவதன் மூலம் உணரலாம். இவ்விதம் அருள் வடிவமாகத் திகழும் அவள், தன் அருளை உயிர்களுக்குப் பல வகையிலும் வாரி வழங்கிப் பாதுகாக்கும் தன்மையன் அவளது அருட் பார்வை, அனைத்துயிர்களுக்கும் இன்பம் வழங்கி நலந்தருகின்றது. பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து தத்தளிக்கும் உயிர்களுக்குப் பெருந் துணையாக நின்று, துன்பங்களை அகற்றி, இன்பங்களை உதவி வருகின்றது.

அவளது திருவடிகளைப் போன்று கண்களும் பல வழிகளில் நன்மை விளைவித்தப் பாதுகாக்குந் தன்மையன. அருள் பொழியும் தன் கடைக்கண் நோக்கால் உயிர்களுக்குப் பெருங் கருணை பாலித்து, ஆதரவு நல்கிக் காத்தருளுகின்றாள் அன்னை. அவளது திருவடிகளைப்போல அருட் கண்களும் ஒப்பற்றவையாக விளங்கி வருவதைக் கவிஞர் அழகுறப் பாடியுள்ளனர். இதில் அவனின் அருள் பெற்ற சங்கராசாரிய சுவாமிகளும், அபிராமிப் பட்டரும் சிறப்பிடம் வகிக்கின்றனர்.

அன்னையின் கண்களின் சிறப்புக்களை ஏழு நகரங்களாக, எண்வகைச்சுவைகளாக, இமையா நாட்டமுள்ளவையாகச் சங்கரன் சௌந்தரியலகரியிலும், நல்லன எல்லாந்தருவனவாக அபிராமிப்பட்டர் அபிராமி அந்தாதியிலும் போற்றியுள்ளமை ஈண்டு நினைவு கூரத்தக்கது.

**ஏழு நகரங்கள்:**

பாரதத்தின் புகழ் பெற்ற பழம்பெரும் நகரங்கள் ஏழு, அவையாவன, **விசாலை** (வைசாலி) **கல்யாணிபுரம், அயோத்தி, மதுரை,** போகவதி, **தாரை,** அவந்தி என்பன. இவ்வேழு நகரங்களின் இயல்பும் அம்பிகையின் திருக்கண்களில் அமைந்துள்ளன.

அகன்று பரந்து விசாலமானவையாக விளங்குவதனால் விசாலையாகவும், மங்கலமான சிறந்த நலல குணங்களைக் கொண்டள்ளமையால் கல்யாணிபுரமாகவும், குவளை மலரால் வெல்லப்படாது, அழகுமிகுந்தவையாகத் திகழ்வதால் அயோத்தியாகவும், அடியவர்களுக்குப் பேரின்பமாகிய இனிமை விளைத்தலால் மதுரையாகவும். வழிபடுவோருக்குப் பலவகை இன்ப அநுவங்களை அளித்ததால் போகவதியாகவும். அமிர்ததாரை போன்ற அருள் நோக்கம் பொழிவதனால் தாரையாகவும். தாயைப் போன்ற பரிவுடன் தண்ணருள் புரிதலால் அவந்தியாகவும் அம்பிகையின் கண்கள் விளங்குகின்றன எனச் சங்கரர் அழகுறக் கூறுகின்றார்.

**எண்வகைச் சுவைகள்**

சங்கரர், அம்பிகையின் அருடகண்களின் சிறப்பினை வேறொரு வகையில் நயந்து பாடியுள்ளார். சிறந்த இலக்கியங்கள் பல்வகைச் சுவைகள் பொருந்தியவை, உவகை, அழுகை, பெருமிதம், வெகுளி, நகை, அச்சம், இனிவரல், மருட்கை ஆகிய எண்வகைச் சுவைகள் இலக்கியங்களில் செறிந்திருக்கும். இவற்றை முறையே **சிருங்காரம், கருணம், வீரம், ரௌத்திரம், ஹாஸ்யம், பயானகம், பீபத்சம், அற்புதம்** என வழங்குவர்.

இச்சுவைகள் அம்பிகையின் அருட் கண்களிலும் அமைந்திருப்பதாகச் சங்கரர் சிறப்புற ஆராய்ந்து பாடியிருந்தல் நயத்தற்குரியது.

அம்பிகையின கண்கள் சிவபிரானுக்குத் தம் கவர்ச்சியினாலும், காதற்குறிப்பினாலும், உவகைச் சுவையை நல்குகின்றன. சிவபிரான் அல்லாத ஏனையோர்பால் அருவருப்பையும் வெளிப்பத்துகின்றன. சிவபெருமானின் சடைமுடிமேலுள்ள கங்கை நதியான மாற்றாளைக் கோபித்தல் வெகுளிச் சுவையைக் காட்டுகின்றன. சிவபிரானின் நெற்றியிலுள்ள அழல் வழியைக் கண்டு, முன்னர் கண்டிராதது போன்ற மருட்கைச் (அதிசயம்) சுவையைப் புலப்படுத்துகின்றன. சிவபிரான் அணிந்தள்ள பாம்புகளைக் கண்டு, அவற்றிற்குப் பயந்தனபோல் ஒடுங்கி, அச்சச் சுவையை அறிவிக்கின்றன. தம் அழகினால், தாமரை மலராகிய பகையை வெற்றி கொண்டு வீரத்தை வெளிப்படுத்துகின்றன. தோழியர்களுக்கு மகிழ்ச்சி பெருக இனிது விளையாடி நகைச் சுவையை நல்குகின்றன, இரவும் பகலும் வழிபடும் அடியவர்களைக் கண்டு இரங்கி நலம் புரிதலால் பெருமிதச் சுவை பெருகத் தோன்றுகின்றன.

**இமையா நாட்டம்:**

அன்னையின் அருள் நிறைந்த கண்களை இமையா நாட்டம் கொண்டவையாகத் துதிக்கும் திறன் நயத்தற்குரியது. நமது கண்களைப்போல் அம்பிகையின் கண்கள் இமைப்பதில்லை, அவை இமையா நாட்டம் என வழங்கப்படும், இதற்குக் காரணம் அவளது கண்கள் அருளால் நிறைந்து, திறந்து மலர்ந்திருத்தலாகும். இதனாலேயே இவ்வுலகம் தோன்றி நிலைபெற்று வருகின்றது. அவள் தன் கண்களைச் சற்று மூடி இமைப்பாளாயின் அவ்வளவில் இவ்வுலகம் அழிந்துவிடும். இதன் காரணமாகவே அவள் கண்களைச் சிறிதும் இமையாது இருக்கின்றாள். உலகிலுள்ள உயிர்கள் அனைத்திற்கும் தாயாக இருக்கும் அவள், ஆருயிர்களான அவளது குழந்தைகள் இடருறாதபடி விழிப்பாக இருந்து பரிவுடன் பாதுகாக்கும் பொறுப்புடையவள். இதன் பொருட்டே

அளப்பருங் கருணையால் அவள் விழித்து, இமையாத நாட்டம் உடையவளாகத் திகழ்கிறாள். அவளது இரக்க இயல்பிற்கும் பெருமைக்கும் எல்லையில்லை.

**நல்லன எல்லாம் தரும்:**

இவ்விதம் பல சிறப்புக்களை உடையனவாக அன்னையின் கண்கள் திகழ்கின்றன. தன்னை அன்புடன் வழிபடும் அடியவர்க்குத் தன் கடைக்கண் அருட் பார்வையினாலேயோ செல்வம், கல்வி, இன்பம், அழகு முதலிய சகல நலன்களையும் இனிதளித்துக் காப்பாற்றுகிறாள் என்பதை அபிராமிப்பட்டர் அழகுறப் பாடியுள்ளார். அவளது கடைக்கண் நோக்கம் பெற்றோர் சகலபேறுகளையும் அடைவர்.

ஆகவே , நாம் அனைவரும் அன்னையை மனம், வாக்குக், காயம் ஆகியவை ஒன்றிப் பல்லாற்றானும் துதித்து, வழிபட்டு, நலன்கள் அனைத்தும் பெற்று வாழ முற்படுவோமாக.

# 7

# வேதங்களும் மந்திரங்களும்

இன்றைய இந்து சமயத்தின் அடிப்படை நூல்களாகவும் தொன்மை நூல்களாகவும் திகழ்வன வேதங்கள். இவை சங்கிதைகள், பிராமணங்கள், ஆரணியகங்கள், உபநிடதங்கள் என நான்கு பகுப்பாக அமைகின்றன. வேதப்பகுதியில் சங்கிதைகள் மந்திரங்களை உள்ளடக்கியவை. இவற்றில் இருக்குவேத சங்கிதை, யசுர்வேத சங்கிதை, சாமவேத சங்கிதை, அதர்வவேத சங்கிதை எனும் நான்கு தொகுப்புக்களாலான மந்திரங்களே பெருமளவு இடம்பெறுகின்றன.

இவற்றுள் இருக்குவேத சங்கிதை ஹோதா எனும் புரோகிதராலும்; யசுர்வேத சங்கிதை அத்வர்யு எனும் புரோகிதராலும் சாமவேத சங்கிதை உத்காத என்ற புரோகிதராலும்; அதர்வவேத சங்கிதை பிரமன் என்ற புரோகிதராலும் உரிய முறையில் ஓதப்பெறுபவை.

வேதமந்திரங்கள் **உதாத்தம், அனுதாத்தம்,** ஸ்வரிதம் மூவகை ஒலி வேறுபாட்டிற்கமைய பதம் கிரமம், ஜடை, கனம் என்ற நான்கு முறைகளை அனுசரித்து அத்தியயனம் செய்யப்படுபவை. வேதங்களை மூவகையாக ஒலிக்கும் முறை **ஸ்வரங்கள்** எனப்படும்.

ஒலிக்கும் போது குரலை உயர்த்தி எழுப்பப்படும் ஓசை உதாத்தம் எனவும்; குரலைத் தாழ்த்தி ஒலிக்கும் பொழுது உண்டாகும் ஓசை அனுதாத்தம் எனவும்; இரண்டும் ஒரே சமமாகப் பொருந்தி வரும் ஒலி ஸ்வரிதம் எனவும்; ஆன்றோரால் குரல் வேறுபாட்டை அனுசரித்து வேதங்களை ஒலிக்கும், முறை நெடுங்காலமாகப் பேணப்படுகின்றது.

வேத மந்திரங்கள் பல்லாயிரமாண்டுகளுக்கு முன் இருந்த அதே உருவில் இன்றுவரை மாற்றம் பெறாது காணப்படுகின்றன. இவற்றை எழுத்திற் பொறிக்காது பரம்பரை பரம்பரையாக வாயால்

ஓதிச் செவியாற் கேட்டு வருவதன் காரணமாக, வேதங்கள் சுருதி, எழுதாமறை ஆகிய பெயர்களைப் பெற்றன. வேதங்களை ஓதுவதில் வல்லுனர்கள் இன்றுவரை அச்சேறிய வேதநூல்களைப் பாராமல் மரபு ரீதயா'ன முறையியல் தம் ஆசிரியர் முதலில் ஓதப் பின்னர் அதைத்தாம் அவதானித்துக் கேட்டு, தம்மாணவரை அவ்வாறே ஓதுவித்து இவ்வரிய பொக்கிஷத்தை நீண்ட காலம் பேணி வருகின்றனர். வேத இலக்கியம் இடைச் செருகல் எதுவுமின்றிப் பேணப்பட்டு வருவதற்கு அவற்றை அத்தியயனஞ் செய்யும் முறையே காரணம்.

மந்திரம் என்றால் நிலைத்தவனைப் பாதுகாப்பது என்பது பொருள். வேதகாலத்தில் வழிபடுபவன் தான் வழிபடும் தெய்வத்திற்கு நெய் முதலிய ஆகுதிகளை அக்கினி மூலமே உரிய வேதப்பாசுரம் மூலம் செலுத்தி வழிபடும் மரபு வேள்வி எனக்குறிப்பிடப்பட்டது.

வேத இலக்கியங்களில் மந்திரங்கள் அமைந்து காணப்படும். இதனைச் சங்கிதாபாடம் என்பர். சங்கிதையில் புணர்ச்சி விதிப்படி அமையப்பெற்ற சொற்கள் உரிய முறையில் ஓதப்பெறுபவை. சங்கிதைகளில் புணர்ச்சி விதிப்படி அமையப்பெற்ற சொற்களைத் தனித்தனியாகப் பிரித்து ஸ்வரங்களை ஏற்ற முறையில் மாற்றியமைத்து ஓதும் நிலை பத பாடத்தில் இடம்பெறுகின்றது. பத பாடத்தில் அடுத்தடுத்து வரும் இரு சொற்களை எடுத்துப் புணர்ச்சி விதிக்கிணங்க இணைத்தும் இவ்வாறு இணைப்பதனால் வேறுபம் ஸ்வரங்களை திருத்தி ஏற்றவாறு அமைத்தும் ஓதும் பாடம் கிரம பாடம் ஆகும். கிரமபாடத்தில் இடம் பெறும் சொற்களை இணை இணையாகப் புணர்த்தி ஸ்வரம் தொடர்ச்சியாக அமையும் வண்ணம் அமைந்து விளங்குகின்றன. இரு சொற்களை ஜடைபோல் பின்னிப் பின்னிப் புணர்ச்சி விதிக்கமைய அமைத்தும் ஓதும் முறை ஜடாபாடமாகும். மூன்று சொற்களை இவ்வாற எடுத்தமைத்துக் கனபாடத்தை உருவாக்கலாம். வேதம் ஓதுபவர்கள் இவ்வாறு பதம் கிரமம், ஜடை,கனம் எனும் நான்கு முறைகளைப் பின்பற்றினா் வேதம் ஓதும் ஆற்றல் வாய்ந்தவாகளை கனபாடிகள் என்பர். இவ்வாற வேத மந்திரம் உரிய முறையில் நான்கு முறைகளைக் கடைப்பிடித்து, ஸ்வரம் தவறாது ஓதப்படும் போது காதிற்கு மிகவும் இனிமையாக இருக்கும்.

வேதங்கள் மக்களால் ஆக்கப்படாதவை தெய்வீக நூல்களென ஆஸ்திகர்கள் இன்று வரை அபௌருஷேயம் எனும் அடைமொழியால் வழங்குகின்றனர். இதன் தெய்வீகத்தன்மையை தெளிவாகப் பின்வரும் கதை சுட்டிக்காட்டுகின்றது.

முன்னொருகால் கூத்தபிரான் சிவபெருமான் கூத்தாடினான். இறைவன் கூத்தின் இறுதியில் வலது கையில் விளங்கும் உடுக்கை அசைக்கும் பொழுது, இதிலிருந்து மாகேஸ்வசூத்திரங்கள் தோன்றின. மேற்கூறிய வரலாறு, சமஸ்கிருதமொழி இறைவனைத தோற்றுவாயாகக் கொண்டு தெய்வீக மொழியாய்த் திகழ்கின்றதென்பதைக் காட்டி நிற்கின்றது.

வேத மந்திரங்களுள் காலத்தால் முந்தியவை இருக்குவேத மந்திரங்களே. இதில் அமைந்துள்ள 10(பத்து) மண்டலங்களுள் இரண்டாம் மண்டலம் முதல் ஏழாம் மண்டலம் வரை உள்ள மண்டலங்களிலேயே மிகப்பழைய பாடல்கள் இடம் பெறுகின்றன. கிருத்ஸமர், விசுவாமித்திரர், வாமதேவர். அத்திரி பாரத்துவாஜர் வசிட்டர் ஆகிய முனிவர்களின் பரம்பரையைச் சாந்த அதே பெயருள்ள கவிகளால் இயற்றப்பட்ட பாடல்கள் அமைகின்றன. எட்டாம் மண்டலம். கண்வர் அங்கிரஸ் ஆகிய இருடிகளின் வழித்தோன்றல்களால் பாடப்பெற்ற பாடல்களும், முதலாம், ஒன்பதாம், பத்தாம் மண்டலங்களில் பல்வேறு பரம்பரையைச் சார்ந்த கவிகள் பாடிய பாடல்களும் உள.

அக்காலச் சமயம், தத்துவம், மக்களின் சமூகம், அரசியல் நிலை ஆகிய விபரங்களை அறிவதற்கு இருக்குவேத மந்திரங்கள் உறுதுணை புரிவன. காயத்திரி மந்திரம், புருஷசூக்தம், நாசதீய சூக்தம், பூர்வ அபரக்கிரியைகளின் போது ஓதப்பெறும் மந்திரங்கள் ஆகியவற்றை இருக்குவேத மந்திரங்கள் உள்ளடக்கியுள்ளன.

யசுர்வேத சங்கிதையில் தெய்வங்களைப் பல பெயர்கொண்டு உருத்திரனைப் பேற்றும் சதருத்திரியம் உருத்திரனின் 100பெயர்களை உள்ளடக்கியது, யசர்வேத மந்திரங்களுள் ஸ்வாஹா, ஸ்வதா, வஷட், வேட், வாத் ஓம், பூ:புவ:ஸ்வ ஆகியவை முக்கியமானவை. ஊம், ஆம், ஹ்ரீம், உம்,

ஏம், க்ரோம், பட்ஹ் போன்ற பிற்காலத்தந்திரசாஸ்திரங்களில் வரும் மந்திரங்களுக்கு யசுர் வேதமே முன்னோடி.

ஏற்கனவே குறிப்பிட்ட மந்திரங்களுள் தேவர்களுக்கு அவி சொரியும் பொழுது, வேட்பவாகள் ஒலிக்கும் மந்திரமாக சுவாஹா அமைகின்றது. பிதிரர்களுக்கு உணவளிக்கும் பொழுது சுவதா எனும் ஒலி எழுப்பப்பட்டது. இவற்றைவிட வஷட், வேட், வாத் ஆகிய ஒலிகளை யாகங்கள் நிகழும்பொழுது, உரியவாறு பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுள் தனிச்சிறப்புடையதாகத் திகழ்வது 'ஓம்' எனும் ஒலியே. இது முதலில் ஒருவர் மனதில் தோன்றிய சம்மதத்தினைத் தெரிவிக்கக் கையாளப்பட்டு, காலரீதியில் தெய்வீகமானதாகவும், உட்கருத்துக்கள் பல பொதிந்தனவாகவும் போற்றப்பட்டு வருகின்றது. இதற்கடுத்த நிலையில் பூ: புவ: சுவ: என்ற மூன்று அட்சரங்கள் அமைகின்றன. மிகவும் விசேடமாகக் கூறப்பட்டவை எனும் கருத்தமைந்த வியாகிருதி எனப்பெற்ற இம் மூன்றும் மண், விண், இடையக் குறித்த் பெயர்கள் என்பர். இவற்றைத் தவிர யாகங்கள் நிகழும் பொழுது உரியவாறு பயன்படுத்தும் ஒலிகளும் உள.

இருக்கு, யசுர் ஆகிய வேதங்களின் மூலப் பகுதிகளான பாடல்களையும், உரைப் பகுதிகளையும் குறித்த மந்திரம் எனும் சொல் நாளடைவில் மந்திர சக்தி வாய்ந்த இவ்வொலிகளை குறிப்பிடலாயிற்று.

அடுத்து உத்காதா என்ற புரோகிதரால் ஓதப்பெறும் சாமகானங்கள் ஆயிரம் வகையெனக் குறிபிப்பிடப்பட்டிருப்பினும் மூன்று சாமசங்கிதைகளே கைக்கெட்டியுள்ளன. அவற்றுள் கௌதம் சாமசங்கிதை பிரசித்தமானது. பெரும்பாலும் இருக்கு வேதத்திலிருந்து, ஓசை நயத்துடன் பாடுவதற்காகச் சாமவேத கானங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவை. இவைதவிர ஏனையவை வேள்வி முறை கூறும் நூல்களிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளை பாடும் ஆற்றல் கொண்ட புரோகிதரிடம் பாடங்கேட்குப் பயில்வர். இவற்றுள் கிராமகேயகானம், அரண்யகானம் ஆகியவை குறிப்பிடத் தக்கவை. அரண்யகானம், பயங்கரமானவையாகவும் காடுகளில் ஒதுக்குப்புறத்திலேயே ஓதுதற்கேற்றவை. இவற்றைவிட, உஹகானம், உஹ்யகானம்

என்பவை யாகங்களில் ஏற்பனவே குறிப்பிட்ட யாகங்களோடு தொடர்புடைவை.

இசையோடு பாடப்படும் இவ்வேதம் இசை, இராகம் ஆகியவற்றோடு இந்திய இசை வரலாற்றின் முன்னோடியாக அமைந்து விளங்குகின்றது.

அறிதல் எனும் கருத்தை உணர்த்தும் 'வித்' எனும் வினையடியினின்று தோன்றி 'வேத' எனும் சொல் முதலில் மூவகையான அறிவான அறிவான திரயீவித்யா அமைப்பைச் சுட்டி மூன்று வேதங்களான இருக்கு, யசுர், சாமம் ஆகியவற்றையே சுட்டுகின்றன. நெடுங்காலத்திற்குப் பின்னமே அதர்வதேவம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதில் நன்மை விளை விக்கும் மந்திரங்கள் தீமை விளைவிக்கும் மந்திரங்கள் ஆகியவை உள்ளன. பேஷஜானி, பௌஷ்டிகானி, நன்மை விளைவிக்கும் நோக்குடையவை. பிராயச்சித்தானி குறைகளை நீக்கும் ஆற்றலுடையவை. பெண்களின் நன்மை தீமைகளையும் கருதிச் செய்யப்படுபவை ஸ்த்ரீகர்மாணி அரசர்களின் நன்மை கருதி பிரயோகிக்கப்படும் மந்திரங்கள் ராஜகர்மாணி ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

இவ்விதம் வேதங்களில் இடம்பெறும் பாசுரங்கள் மந்திரங்களாக அமைந்து தெய்வங்களை கூவி அழைத்தல், கிரியை முறைகள் இசை மாந்திரீகம் ஆகிய நால்வகை வழிகளில் உரிய முறையியல் ஓதப்பெற்றுப் பிற்காலத்தில் வளர்ச்சிக்கு எய்திய கிரியை, தத்துவம் ஆகியவற்றிற்கு அடிப்படையாக அமைந்து விளங்கிய சிறப்பினை வரலாற்றின் பின் எழுந்த இலக்கியங்கள் தெளிவாக்குகின்றன.

# 8

# சீனச் சமுதாய வளர்ச்சிக்கு உதவிய நாடு பாரதம்

**பழங்கால வர்த்தகத் தொடர்பு:**

பாரதமும் சீனாவும் இயந்தியாவும். மொழி, கலாச்சாரம் முதலியவற்றால் நெருங்கிய தொடர்பு உடையவனாய் விளங்குகின்றன. ஆதிகாலம் தொட்டு பாரதம், சீனா, இலங்கை முதலிய நாடுகளுக்கிடையே நெருங்கிய வர்த்தகத் தொடர்புகள் இருந்ததாகச்சரித்திரச் சான்றுகள் காட்டுகின்றன. இந் நாடுகளுக்கிடையே பட்டு, மஸ்லின் (ஒரு வகைத் துணி), வாசனைத் திரவியங்கள், பொன், வெள்ளி, முத்து முதலியனவே முக்கிய வர்த்தகப் பொருட்கள்.

வடமொழி நூலாகிய பாரதம் அஸ்ஸாம் மாகாணத்தில் ஆட்சி புரிந்த பாகதத்த மன்னன் சீனத்தின் நண்பனென்றும் அவன் குருக்ஷேத்திரத்தில் நடைபெற்ற பாரதப் போரில் கௌரவர் பக்கம் சார்ந்து போர்புரிந்தானென்றும் கூறுகின்றது. கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் என்ற வடமொழி நூல், 'சீனப்பட்டிலுள்ள சில ரகங்கள் இந்தியாவில் பிரசித்தி பெற்றவையெனக் குறிப்பிடுகின்றது. 'மிலிந்த பஞ்' எனும் பாளிநூல் ஒரு கப்பற்சொந்தக்காரன் ஆழமான கடலைக் கடந்து பாரதம், சீனா, வங்கம், தக்கோலம். செவ்ரா, அலெகஸ் சான்டிரியா முதலிய துறை முகங்களுக்கும் மற்றைய பல துறைமுகங்களுக்கும் செல்வானாயின் அவன் செல்வந்தன் ஆகிறான்' எனக் கூறிப்பிடப்படுகிறது. இவையெல்லாம், ஆதிகாலத்தில் சீனாவிற்கும் பாரதத்தற்கும் இடையிலிருந்த நெருங்கிய வர்த்தகத் தொடர்பையே குறிக்கின்றது.

அநோக மன்னனது கால எல்லை புத்தரது காலத்திற்கு ஒரு நூற்றாண்டிற்குப் பின்னர் என்பதை, வடமொழி நூலும், சீன நூலும் ஒருங்கே கூறுகின்றன. சரித்திர ஆராய்ச்சியாளர் இக்கூற்றை

ஏற்றுக்கொள்ளாவிடினும், ஈண்டு இரு மொழிகளுக்கிடையே இருக்கும் நெருங்கிய தொடர்பு குறிப்பிடத்தக்கது

**குஷன் வம்ச வரலாறு:**

குஷ சாம்ராஜ்சியத்தின் ஆதி வரலாற்றைச் சீன ஆசிரியர்களே நன்கு பாதுகாத்து வைத்துள்ளனர். இவர்களது கூற்றை ஆதாரமாகக் கெண்டே 'கட்பஸில்' என்னும் மன்னன் அச் சாம்ராச்சியத்தின் முதலாவது அரசன் எனவும், கனிஷ்க மன்னனது காலம் ஏறக்குறைய கி.பி.78ஆம் ஆண்டு எனவும் நிறுவக் கூடியதாக இருக்கின்றது.

குஷ சாம்ராஜ்யம் பாரதத்திற்கும சீனாவிற்கும் மிக நெருங்கிய தொடர்பை உண்டுபண்ணியதென உறுதியுடன் கூறலாம். பௌத்தம், இக் காலத்திலேயே சீனாவிற்குக் கொண்டு செல்லப்பட்டது. இவ்வமயம் சீனாவிலிருந்த மிங்-ரி சக்கரவர்த்தியின் வேண்டுகோளின்படி கி.பி. முதலாம் நூற்றாண்டில், தர்மரக்ஷ கஸ்பமாதங்க என்னும் இருபௌத்த அறிஞர்களால், பௌத்த மதம் சீனாவிற்குப் பரப்பப்பட்டது. இவ்வறிஞர்கள் சீனாவிற்கு பௌத்தமத அடிப்படை நூல்களையும் கொண்டு சென்று தங்கள் மதப்பிரசாரவேலையில் அதிகம் ஈடுபட்டனர்.

இவ் அறிஞர்கள் சீனாவிற்பரப்பிய பௌத்தத்தை மகாயான பௌத்த என தற்கால அறிஞர் கூறுவர். புதிதாகச் சீனாவினுட் புகுந்த மகாயான பௌத்தம் மக்களின் ஆதரவைப் பெற்றது. மேலும் புத்த பிக்குகளைக் கௌரவிக்கும் முகமாக **வெண்குதிரை மடாலயம்** (The white Horse Monastery) என்னும் கட்டடமும் கட்டப்பட்டது. சீனப் பௌத்தரிடையே பாரதம் சென்று பௌத்தமதம் பற்றி மேலும் அறிய வேண்டும்மெனும் அவா வேரூன்றியது.

**சீனத்தில் பௌத்த நூல்கள்**

மகாயான பௌத்த நூலான 'சத்தர்ம புண்டரிகம்', சீனப் பௌத்தரிடையே மிகவும் பிரசித்தி பெற்ற நூல். மற்றொரு மகாயான பௌத்த நூலாகிய 'சுவர்ண பிரபா சோத்தம் சூக்தம்',

ஒரு நல்ல அரசனது கடமையைப் பற்றியும், அவன் தனது கடமையின்று தவறினால், அவனை விலத்தி நல்ல அரசனொருவனை அமர்துவது பற்றியும் குறிப்பிடுகின்றது. இம்முறை சீனாவிலும் நன்கு தெரிந்ததே.

சீனப் பௌத்த யாத்திரிகர் பலர் பராதத்திலுள்ள பௌத்த நூல்களை வாசித்தறியவும், பௌத்த சமயக் கிரியை,பழக்க வழக்கங்கள் முதலியன பற்றியறியவும், பாரதத்திற்கு வந்தனர். அவர்களுள், பாஹியன','ஹீயன்-ஷாங்' ஆகியார் முறையே கி.பி. 5ம், 7ம் நூற்றாண்டுகளில் பாரதத்திற்கு வந்தவர்கள்.

ஹர்ஷ மன்னனது காலத்திலேயே 'ஹீயன் - ஷாங்' என்னும் சீனயாத்திரிகர் பராதத்திற்கு வந்தார். அவர் பராதத்தில் தங்கிய 15 ஆண்டுகளுள் 8 ஆண்டுகள் ஹர்ஷமன்னனது அவையிலேயே கழிந்தன. ஏனைய வருடங்களில், பாரதத்தின் இதர இடங்களுக்குச் சென்று, ஆங்காங்குள்ள மக்களின் தினசரி வாழ்கை, அரசாட்சி முறை முதலிய பல விபரங்கள் பற்றித் தமது நூலில் சேர்த்துள்ளார். இவரது குறிப்புக்களனைத்தும் சரித்திர ஆராய்ச்சி யாளர்க்குப் பெரும் பயனளிப்பதாயிருக்கின்றன.

இவர்களைவிட மற்றும் சீன யாத்திரகர்களான 'ஐற்சிங்','சாங் - கி யென்','யுவாங் - சுவாங்' குறிப்புகள் பல, பராதத்திற்கும் சீனாவிற்குமிடையே நிலவய நெருங்கிய கலாச்சாரத் தொடர்பைச் சுட்டுவதாய மைகின்றன.

**சீனம் சென்ற இந்திய அறிஞர்கள்**

மேலும், பராத அறிஞர் பலர் சீனாவிற் சென்று அங்கு தங்கள் புகழை நிலை நாட்டியுள்ளார்கள். 'குமார ஜீவர்','போதி தருமர்'' ஆகியோர் சீனாவில் பௌத்த மதத்தை வளர்ப்பதிலும், பௌத்த நூல்களை சீன மொழியில் மொழி பெயர்ப்பதிலும் தம் வாழ் நாளை அர்ப்பணித்தார். இவர்களுள் 'குமாரஜீவர்' இந்து பௌத்த மதங்களில் வல்லுநர். 'போதிதருமர்' ஒரு பௌத்தசந்நியாகி, இவர் பௌத்தத்தில் தியானவழியைப் புகுத்தியது மட்டுமன்றி, சீன எண்ணங்களிலும், சமயத்திலும் புரட்சிகரமான பல மாற்றங்களை உண்டாக்கினார்.

## சீனக்கலை வளர இந்தியா உதவி

பௌத்த மதம் சீனாவில் பரவிய பின் சீனாக்கலை வேகமாக வளர்ச்சியுற்றது. சீனக்கலைகளில் பராதக்கலை இயல்புகளும் இடம்பெற்றன. 'வடவியீ' வமிச காலத்தில் (கி.பி. 386 - 636) நிலவிய சீன பௌத்தக்கலை, புதிய சமய ஊணர்ச்சியால் இயல்பாக வளர்த்த கலையே, ஆயினும் மத்திய ஆசிய வாணிகத் தொடர்பால் பராத, ஈரானிய இயல்புகள் சில இடம்பெற்றன.

"லியாங்" வமிச காலத்தில் (கி.பி. 502 - 557) பாரதத்திலிருந்து வளைவள்ளங்களுடைய தூண்களும், இயற்கை கொண்ட சிங்கங்கள் போன்ற உருவங்களும் சீனாவிற் பரவின.

பௌத்தம் சீனாவிற் பரவத் தொடங்கியதும் இந்தியத்தூபியை யொத்த 'பகோடா' எனும் ஆலய அமைப்பு முறை சீனாவில் எழுத்தது. கி.பி. நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 42 பகோடாக்கள் சீனாவில் இருந்தாகத் தெரிகின்றது.

"துன் குவாங்',, "யுன்காங்","லோங் மேன்"

ஆகியன சீனாவிலுள்ள பிரசித்தி பெற்ற பௌத்த கலாசார் தொடர்புள்ள இடங்கள் இவ்விடங்களில் காணப்படும் கலை வடிங்களில் குப்தக் கலை மரபையும், மதுரைக் கலை மரபையும் காணலாம். 'தியென் லுங் ஷன்' 2,3,10,16 ம் குகைச் சிற்பங்கள் மதுரைக்கலைமரபைத் தழுவியவை. ஹோ நானிலுள்ள 'நான் ஷிங்ராங்' குகைக் கோயில்கள், பராதத்திலுள்ள 'நாகார் ஜுன கொண்டா', 'அமராவதி' ஆகிய இடங்களிலுள்ள சிற்பக்கலையை நினைவுபடுத்துகின்றன.

## சீனமொழியில் வானசாஸ்திரம்

மேலும், சீன ஓவியம், சங்கீதம், நடனம், சானசாத்திரம், சோதிடம் முதலியவற்றில் பராதகலாச்சராத்தின் சாயல் பதிந்திருப்பதை ஆங்காங்கு காணலாம். "ராங்" காலத்தில் பராதவான சாஸ்திர வல்லுனர்களும், சோதிட விற்பன்னரும் சீனாவில் முக்கிய இடம்

பெற்றனர். "சாங்- ங்கானில், மூன்று வானசாத்திரக்கல்லூரிகள் கி.பி.7ம் நூற்றாண்டில் நிறுவப்பட்டன. 'சுவிமன்னர்' களது காலத்தில் அநேக இந்து கணித முறைப் படியமைந்த சோதிடநூல்கள் சீன மொழியில் மொழி பெயர்த் தமைக்கப்பெற்றன.

பராதசீனத் தொடர்புகள் ஆதி காலம் முதல்மிக நெருங்கிய தாயிருத்தமைக்கு சான்றுகள் பல காணப்படுகின்றன. பௌத்த மதத்தை பராதத்திடமிருந்து பெற்ற சீனா புத்தரது போதனைகளுட் சிறந்ததாகிய அஹிம்சையைக் கைக் கொண்டு தா்ம நெறியில் செல்லுமாயின், தற்போது இந்தியாவுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள சச்சரவுகள் தீர்த்து மீண்டும் இருநாடுகளும் ஆசியாவிலேயே அறம், அஹிம்சை ஆகியவற்றை வளர்க்கும் நாடுகளாக விளங்குமென்பதில் ஐயமில்லை.

# 9
# சிவாகம மரபில் மூர்த்தி அலங்காரம் – சில சிந்தனைகள்.

நாம் வைபவங்களுக்குச் செல்லும் பொழுது, சந்தர்ப்பம் சூழலுக்கேற்ப அலங்கரிக்கும் நிலை லௌகிகத்தில் இடம் பெறுகின்றது. தெய்விக நிலையில் ஒவ்வொரு இந்து ஆலயத்திலும் அமைந்துள்ள மூர்த்திக்கேற்ப அவ்வவ் ஆலயத்திற் பேணப்படும் மரபு வசதிக்கேற்ப நிகழ்த்தப் பெறும் நித்திய, நைமித்திக, காமியக் கிரியைகளில் மூர்த்தி அலங்காரம் சிறப்பிடம் வகிப்பதை இன்றும் காணலாம்.

ஆகம முறைப்படி அமைந்த சிவாலயங்களில் நிகழ்த்தப் பெறும் கிரியைகள் தொடர்பான விபரங்களை ஒழுங்குபடுத்திக் கூறுவன சிவாகமங்களே. சிவனின் பரிவார தெய்வங்களுள் ஒன்றான சக்தி வழிபாட்டைதந்திரங்கள் எடுத்திமியம்புவன. குமரக் கடவுளின் வழிபாட்டுமுறையை சிவாகமங்கள் இயல்பினும், இத் தெய்வ வழிபாட்டைக் குமாரதந்திரம் விரித்துக் கூறும். விஷ்ணுவைத் தனிப் பெரும் தெய்வமாகக் கூறும் வைஷ்ணவ ஆகமங்களான பாஞ்சராத்திரம், வைகாசனம், ஆகியவை அமைகின்றன திவ்யம், முனிவாசிதம், ஆப்தோ மனுஜம் எனப் பாஞ்சராத்திர சங்கிதைகள் மூவகையின, மரபு ரீதியாக 108 பாஞ்சராத்தி சங்கிதைகள் கூறப்படினும், 215க்கு மேற்பட்டதென அறியக் கூடியதாகவும், இவற்றுள் ஒரு சில மட்டுமே கைக்கெட்டியதாகயும் உள்ளன.

இவற்றுள் சிவாகமங்கள் இருபத்தொட்டு. அவையாவன காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சூக்குமம், சகசிரம், அம்சுமான், சுப்பிரபேதம், விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கிநேயம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேஸ்வரம், கிரணம், வாதுளம் என்பன. இவற்றுள் முதற் பத்தும் சிவபேதம் எனவும் ஏனைய பதினெட்டும் உருத்திர பேதம் எனவும் வழங்கப்படுகின்றது.

சிவாகங்கள் எடுத்தியம்பும் விதிகள் அனைத்தையும் பிரமாணமாகக் கொண்டு கிரியைகள் செய்யும்முறையினை ஒழுங்குபடுத்திக் கூறுவன பத்ததிகள். இவை பதினெண் சிவாசாரியர்களால் வகைப்படுத்தப்பட்டு பதிணென் பத்ததிகளாக அமைந்துள்ளன. பத்ததிகளை ஒழுங்குபடுத்திய சிவாவாரியார்களாக உக்கிரஜோதி, சத்தியஜோதி, ராமகண்டர். வித்தியாகண்டர், நாரயணகண்டர், சோமசம்பு, ஈசானசம்பு, ஹ்ருதயசிவன், பிரம்மசம்பு, வைராக்கிய சிவன், ஞானசம்பு, திரிலோசன சிவன், வருணசிவன், ஈசுவர சிவன், அகோர சிவன், ஆகியோர் அமைகின்றனர். ஏற்கனவே குறிப்பிட்ட 28 சிவாகமங்களை விட 207 உபாகமங்களும் உள.

சிவாகங்கள் ஒரு சில மட்மே பதிப்பிக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் காமிகாகமம், காரணாகமம், பௌஷ்காரகமம், பாரமேசுவர ஆகமம், இரௌரவாகமம், மிருகேந்திராகமம், அஜிதாகமம் ஆகியனவும், சோமசம்பு பத்ததி, அகோர சிவாசாரியார் பத்ததி ஆகியனவும் குறிப்பிடத்தக்கவை.

சிவப்பிரான் அருவம், அருவுருவம், உருவம் ஆகிய திருமேனிகளை உடையவன். இவற்றுள் அருவத்திருமேனி ஊனக் கண்களுக்குப் புலப்படாதவாறு நுண்ணியதாய் அகக்கண் கொண்டு உள் நோக்கும் யோகியர் நோக்கிற்கு மட்டுமே எட்டுவது மற்றது கை,கால்,முதலிய உறுப்புக்களோடு கூடிய உருவத் திருமேனி, இவ்விரண்டிற்கும் புறம்பானவாறு உருவமும் அருவமும் கலந்த தனிநிலையே அருவுருவத் திருமேனி. இதில் உருவத்திற்கு வேண்டுவனவான கை,கால்,முதலிய உறுப்புக்கள் இல்லாததால் அருவமாகியும் கண்ணால் பார்க்கும் பொழுதும் கையாற் தொடும் பொழுதும் உணரத்தக்கதனால் உருவமாகியும் விரவப் பெற்ற அருவுருவத் தோற்றம் சிவனுக்கு மட்டுமே சிறப்பாயமைந்து சிவலிங்கம் எனக் கூறப்படுகின்றது.

சிவபிரானுடைய மூர்த்திபேதங்கள் அறுபத்திநான்கினுள் இலிங்கத்தை அடுத்து 63 மூர்த்திகளில் வழுத்தப்படுகின்றன. இறைவனது திருமேனிகள் போக வடிவம், கோரவடிவம், யோக

வடிவம், என முத்திறத்தன. இவற்றுள் உமாமசேகரர், கல்யாணசுந்தரர் ஆகியவை போக மூர்த்தங்கள். கால சங்காரர், கஜாரி, காமாரி, காலகாலர், திரிபுராரி, சலந்திரவதர், கூர்மசங்காரர், மத்ஸ்யாரி, வராகரி. முதலியன கோரமூர்த்தங்கள். தட்ஷிணாமூர்த்தி யோக மூர்த்தமாகும். இவ்வாறு மகேசுரமூர்த்தங்கள் பல பேதங்களாக உள்ளன. சக்தி சிவபெருமானின் வேறாகாத திருவருளே. சக்தியும் சிவனைப் போன்று உமை, துர்க்கை, காளி முதலிய பல பேதங்களைப் பொருந்தி நிற்பன. விநாயகர், சுப்பிரண்பர் ஆகியோரின் மூர்த்தங்களுக்கும் சிவனுக்கும் பேதமில்லை என்பது உண்மை நூற்றுணிபு.

சில மூர்த்தங்களுட் சில நிற்பனவாகவும், இருப்பனவாகவும் நடப்பனவாகவும், அமைந்துள்ளன. விஷ்ணு மூர்த்தம் சயனிப்பதாகவும் அமைந்துள்ளது. இம் மூர்த்தங்களுக்கு பூசை, உற்சவங்கள் முதலியன எல்லா உபசாரங்களுடனும் செயற்பாலன. அவ்வாறு செய்யும் பொழுது மந்திரபேதம் உண்டேயொழியக் கிரியா பேதமில்லை. பிரதிமா பேதங்கள், இலட்சணங்கள் காரணம், காமிகம், ஆகிய முல ஆகமங்களிலும், அம்சுமான்காசியம் முதலிய உபாகமங்களிலும் விதிக்கப்பட்டுள்ளன.

சிவபிரானுடைய ரூபபேதங்கள் உலகப் பாதுகாப்புக்காகவே உண்டாயின. இவை வழிபாடுவோருக்கு வெவ்வேறு பலன்களைத் தரவல்லன. வழிபடுவோர் எவ்வெவ் உருவங்களை வழிபடுகின்றனரோ அவரவர் அவற்றிற்கேற்ப விரும்பிய பலன்களை எய்துவரெனத் தேவிகாலோத்திரத்தில் பகரப்பட்டுள்ளது.

சிவபெருமானுக்குச் செய்யும் உபசாரங்கள், அங்கம், உபாங்கம், பிரத்தியாங்கம் என மூவகையின. இவற்றுள் அபிடேகம், நைவேத்தியம், ஹோமம், நித்தியோற்சவம், தூபதீபாதிகள் ஆகியவற்றை அங்கம் உள்ளடக்கும். வஸ்திரம், ஆபரணங்கள், சந்தனம், மாலை ஆகியவற்றால் · மூர்த்திகளை அலங்கரித்தல் உபாங்கமாகும். சாமரை, குடை, கண்ணாடி முதலிய பிற உபசாரங்கள் பிரத்தியாங்கமாகும். இதனை அம்சமானாகமம் விளக்கம் கூறுகின்றது.

சிவாகமங்கள் மூர்த்தியலங்காரம் தொடர்பான விடயங்களைப் பரக்கக் கூறினும், இவை தொடர்பான சிந்தனைகள் அம்சமானாகமம், வீராகமம், சுப்பிரபேதாகமம், வீரதந்திரம், பீமசங்கிதை, தேவிகாலோத்தரம், காமிகாகமம், காரணாகமம், ரௌரவாகமம் ஆகிய வடமொழி நூல்களிலும், தேவாரம், கந்தபுராணம், பெரியபுராணம் ஆகிய தமிழ் நூல்களிலும் ஆங்காங்கு இடம் பெறுகின்றன. இவை தொடர்பான சில சிந்தனைகளை நோக்கலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் எழுதிய 'மூர்த்தியலங்காரவிதி' எனும் நூலில் யோக்கிய அலங்காரம் பற்றிய விபரங்களைக் கூறி, விபரீத அலங்காரங்களால் வரும் கேடு பற்றியும் அவற்றிற்கான பிராச்சித்தம் பற்றியும் விளக்கியுள்ளார். பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களும், 'சைவத் திருக்கோயிற் கிரியை நெறி' எனும் நூலில் அலங்காரம் தொடர்பான விபரங்களைச் சுருக்கமாகக் கூறியுள்ளார். அகோர சிவாசாரியார் பத்ததியில் மூர்த்தியலங்காரம் பற்றிக் கூறியிருப்பதை அவதானிக்கலாம்.

அபிடேகம் முடிந்ததும் தோய்த்துலர்ந்த திருவொற்றாடையால் ஈராந் துவட்டி நறுமணங் கமழும் சந்தனம், கோஷ்டம், குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம் ஆகிய வாசனைப் பொருட்களைப் பன்னீரில் தோய்த்தரைத்தெடுத்த சந்தனக் கலவையே இறைவனுக்குச் சாத்துதற்குரியது.

சிவாலயங்களில் நிகழும் கிரியைகள் நித்தியம், நைமித்தம், காமிகம் என்பன. நாடோறும் நிகழும் கிரியைகள் நித்தியக் கிரியைகள் எனவும், காரணங் கொண்டு நிகழ்வன காமியக் கிரியைகள் எனவும், பெறுபேற்றினை அவாவிச் செய்யும் கிரியைகள் காமியமக்கிரியைகள் எனவும் கூறப்படும். கிரியைகளின் பொது அம்சங்களான பூத சுத்தி, அந்தர்யஜனம், ஆவரணாந்தமான பூசையோ (உஷத்கால பூசை, காலை சந்தி, உச்சிக்காலம்,சாயரட்சை, இரண்டாம் காலம், அர்த்த ஜாமம்) காலைப்பூசை, உச்சிக்காலம், அர்த்த ஜாமம் எனும் மூவேளைப் பூசையோ, காலை, மாலை ஆகிய இரு வேளைப் பூசையோ

நிகழ்வதுண்டு மேலும் ஆலயங்களில் அவ்வக்கோயில் மரபு, வசதிக்கேற்ப அபிடேகம், அலங்காரம், நிவேதனம். தீபாராதனைகள்,அருச்சனை, தோத்திரம், நாட்டியம் ஆகியன நிகழும். இவ்விதம் ஏனைய வழிபாட்டு நெறிகள் நிகழ்வதற்கு அலங்காரம் சிறப்பிடம் வகிக்கின்றது. நித்தியம், நைமித்திகம், காமியம் ஆகிய மூவகைக் கிரியைகளிலும் அபிடேகம் அலங்காரம், நிவேதனம் ஆகியவை சிறப்பிடம் வகிப்பவை.

நைமித்தகக் கிரியைகளான விசேட கிரியைகள் வாரத்திற்கு ஒரு முறையோ, இரு வாரங்களுக்கு ஒரு முறையோ, மாதத்திற்கு ஒரு முறையோ, வருடமொரு முறையோ நிகழ்வன. பல வருடங்களுக்கு ஒரு முறை நிகழும் நைமித்திகக் கிரியைகளும் உள.

தினந்தோறும் நிகழும் கிரியைகளே விரிவாக நிகழ்த்தப்படும் சந்தர்ப்பங்களில் அபிடேகம், அலங்காரம், முதலியவற்றுடன் உற்சவமும் விரிவாக நிகழ்வன. வெள்ளிக்கிழமைகளில் இறை வழிபாடு செய்ய அடியவர்கள் பெருந்திரளாக ஆலயங்களுக்குச் செல்வர். இவற்றை விட முருகன், தட்சிணாமூர்த்தி ஆகிய தெய்வங்களை வழிபட வியாழக்கிழமைகளிலும் சிவனை விசேடமாக வழிபாடுவதற்குச் சோம வாரத்திலும் செல்லும் மரபு உண்டு.

இவற்றைத் தவிர இரு வாரங்களுக்கு ஒரு தடவை வரும் பிரதோஷம், மாதமொரு முறை வரும் கிருத்திகை, சதுர்த்தி, மாதப்பிறப்பு முதலிய விசேட தினங்கள், ஒவ்வொரு ஆண்டும் ஆறு தடவை வரும் நடேசரபிஷேகங்கள், ஆடிப்பூரம், ஆவணிச் சதுர்த்தி, ஆவணிமூலம், நவராத்திரி, விஜயதசமி, கந்தசஷ்டி, திருக்கார்த்திகை. கார்த்திகைச் சோமவாரம் தைச்சங்கிராந்தி, மாசிமகம் முதலியனவும், பிரமோற்சவமும் ஆண்டிற்கொரு முறை நிகழும் நைமித்திகக் கிரியைகள், மகாமகம் பன்னிரு ஆண்டிற்கொருமுறை நிகழ்வது. அர்த்தோதயம், மகோதயம் ஆகியனவும், கும்பாபிடேகமும் பல வருடங்களுக்கொருமுறை நிகழ்வன. பிரதிட்டை எனப்படும் கும்பாபிடேகம் மிக விரிவானது.

அபிடேகத்தினை அடுத்து நிகழும் அலங்காரத்தின்போது அலங்கரிப்பதற்கேற்ற மலர்கள் பற்றி ஆகமங்கள் பலவாறு கூறுகின்றன. மூர்த்திகளை அலங்கரியப்பதற்கேற்ற சாத்துவிக மலர்களாக வெள்ளெருக்கு, கொக்கிறகு,மந்தாரை, பிச்சி, நந்தியாவர்த்தை, மல்லிகை, முல்லை ஆகியனவும், இராஜத மலர்களான செந்தாமரை, செங்கழுநீர், செவ்வலரி, முதலியனவும், பொன்னிறமுடைய சண்பகம், கோங்கு முதலியன இராஜதசாத்துவித மலர்களாக அலங்காரத்திற்கு ஏற்றவையாக அமைக்கின்றன. அத்துடன் வில்வம், அறுகு, துளசி, மரிக்கொழுந்து, மாசிப்பச்சை, திருநீற்றுப்பச்சை முதலிய பத்திரங்களும் அலங்கரிப்பதற்கேற்றவை. இவற்றையும் ஏனைய ஏற்ற மலர்களையும், பத்திரங்களையும் மூர்த்தியை அலங்கரிப்பதற்குப் பயன்படுத்தலாம் என சிவாகமங்கள் கூறுகின்றன.

இறைவனை அலங்கரித்தல் தனிக்கலை, நித்திய, நைமித்திக, காமியக்கிரியைகளில் மூர்த்தியலங்காரம் சிறப்பிடம் வகிக்கின்றது. ஆடை, ஆபரணங்கள், பட்டு வஸ்திரங்கள், தூய்மையான பருத்திநூல் வஸ்திரங்கள் ஆகியவற்றோடு மாலைகளும் அணி விப்பதற்கேற்றவை. பகல் வேளைகளில் வெண்பட்டும் மாலைப் பொழுதில்மஞ்சள் பட்டும் அர்த்த யாமத்தில் கருநிறம் வாய்ந்த ஆடைகளும் தரிப்பதற்கேற்றவை. பூணூலும் இறைவனுக்கு அணிவித்தற்குரியது.

ஆபரணங்கள், பொன்,வெள்ளி, நவரத்தினங்களால், ஆக்கப்பெற்று அணிவித்தற்கு ஏற்றவை. சிவலிங்கத்தை அலங்கரிப்பதற்கு நாகாபரணம் சிறப்பாக உரியது. மகுடம். குண்டலம், கங்கணம் முதலிய ஆபரணங்கள் தரிப்பதற்கேற்றவை.

இறைவனுக்கு அணிவிக்கப்படும் மாலைகள் ஏகவர்ணப் பூக்களாலும், பூக்கள் இலைகள் ஆகியவற்றால் கட்டப் பெற்ற ஆரம், தொங்கு மாலை ஆகியவற்றை அரும்பு, அலர்ந்த மலர் ஆகியவற்றால் வாழை நார் கொண்டு வெகு விரைவாக அசையும் விரல்களால் மாலைகளையும் ஏனைய வற்றையும் பூக்களாலோ ஏனையவற்றைலோ கட்டுதல் கவர்ச்சிகரமானது. சரிகை, ஏற்ற இலைகள் ஆகியவற்றைப் பூக்களோடு இணைத்து மாலைகளை

அமைக்கும் கலை தனிச் சிறப்பும் கவர்ச்சியும் உடையது. இக்கலையில் துறைதோய்ந்தவர் அலங்கரணாசாரியர் எனப்படுவர்.

இதனை வீராகமம் விளக்கிக்கூறுகின்றது. ஆகமங்களின் கருத்து திருத்தொண்டர் புராணத்தில்

கோட்டுமலருந் நிலமலருங்குளிர் நீர் மலரும் கொழுங்கொடியின்
தோட்டுமலரு மாமலருஞ் சுருதிமலரும் திருவாயிற்
காட்டு முறுவல் நிலவலரக் கனகவரையிற் பன்னகதநாண்
பூட்டுமொருவர் திருமுடிமேற் புனையாரு மலர் தெரிந்து.

எனவும்

கொண்டு வந்து தனியிடத்திருந்து கோக்கும் கோவைகளும்
இண்டைச் சுருக்குத் தாமமுட னிணைக்கும் வாசமாலைகளும்
தண்டிற் கட்டுங் கண்ணிகளுந் தாளிற் பிணைக்கும் பிணையல்களு
நுண்டாதிறைக்கும் தொடையல்களுஞ் சமைத்து நுடங்கு நுண் மார் பர்

எனவும்
கந்தபுராணத்தில்

நொதுமல் பெற்றிடு நுண்டுகில் சூழ்ந்தனர்
முதியசந்த முதலமட்டித்தனர்
கதிருநன் பொற்கலன்வகை சாத்தினர்
மதுமலர்த்தொகை மாலிகை சூட்டினார்

எனவும் பலவாறு பூக்கள், ஆபரணங்கள், மாலைகள், ஆடைகள் ஆகியவற்றைப் பற்றிச் சைவத் திருமுறைகளும் சிவாகம மரபை அடியொற்றி அலங்காரத்தில் இறைவனின் தோற்றப் பொலிவை ஆங்காங்கு கூறுகின்றன.

மூர்த்திகளைத் தீண்டி அலங்கரிப்பவர்கள் அந்தந்த மூர்த்திக்குரிய ஆடைகள், மலர்கள், மாலைகள், அணிகலன்கள், ஆகியவற்றால் அலங்கரிக்க வேண்டும். ஒரு மூர்த்தியை பொருத்தமற்றதும் விபரீதமானதுமான முறைகளினால் அலங்கரித்தலும், போலி ஆபரணங்கள் சாத்துதலும், பொருத்தமற்ற

பொருட்களைத் தரித்தலும் கூடாதென்பதை வீரதந்திரம் வற்புறுத்திக் கூறுகின்றது.

மேலும், மூர்த்திகள் இருத்தல், நிற்றல் முதலாக எவ்வாறு அமைந்துள்ளதோ அதே தோற்றமாகவே அலங்கரித்தல் வேண்டும். எவர் விபரீதமான அலங்காரங்களை மூர்த்திகளுக்குப் புரிகின்றனரோ, அவர்கள் நரகத்தில் வீழ்வர். ஆகம விதிப்படி உருவாக்கப்பட்ட மூர்த்திகளை தோற்றம் மாறுதலடையுமாறு அலங்கரித்தல் கொடிய அபசாரமே.

இன்று பலர் உற்சவ காலங்களில் பெரும்பொருள் செலவழித்து விபரீத அலங்காரங்களை மூர்த்திகளுக்குச் செய்தும் செய்வித்தும் வருகின்றனர். இவ்வாறு செய்தல் சிவப்பிரீதியாகாது. மூர்த்திகளை விதி முறைப்படி அலங்கரித்து வழிபடுவதே சிவ புண்ணியமாகும்.

சிலர்மரம், தரும்பைக் கட்டை, உலோகம். வஸ்திரங்கள் ஆகியவற்றால் உண்டு பண்ணப்பட்ட பாதங்களையும் தேவத் திருமேனிகளில் சாத்தி அலங்கரிக்கின்றனர். இவ்வாறு செய்யக்கூடா தென்பதைப் பீமசங்கிதை கூறுவதோடு, இவ்வாறு செய்தால் அரசன், பிரபு ஆகியோருக்கு குட்டம் முதலிய நோய் நிகழும் எனவும், இத்தோஷ சாந்திக்காக சம்புரோட்ஷணம் செய்ய வேண்டுமெனப் பீம சங்கிதை கூறுகின்றது.

போலிக் கரங்களையும் கால்களையும் மூர்த்திகளில் சாத்துவதும் கட்டுவதும் குற்றமாகும். நேர்மையற்ற வழிகளினால் பல காரணங்களைக் கொண்டு கயிற்றினால் பிம்பத்தினைக் கட்டி அலங்கரிக்கக் கூடாது. இவ்வாறு செய்யப்பட்ட மூர்த்தியைத் தரிசித்தோர் அற்பாயுளைப் பெறுவர். இவ்வாறு செய்வதால் அரசனுக்குப் பிற அரசர்களாற் பயம், குட்டம் முதலிய நோய்கள் உண்டாகும். இத் தோஷத்தை நீக்க ஐம்பது கலச ஸ்நபனாபிடேகம், செய்வதோடு அகோர மந்திரம் 1008 தடவை செபிக்க வேண்டும். இதனை அம்சுமானாகமமும் தேவீகாலோந்திரமும் கூறுகின்றன.

இதில் மூர்த்திகளை வேறுபடுத்தாது விதிப்படி அலங்கரித்தல் வேண்டுமெனவும், இவ்வாறு வேறுபடுத்தி அலங்கரித்தல்

குற்றமெனவும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு அலங்கரித்தால் அரசனுக்கு மனவருத்தம் பகைவர் பயம் ஆகியன ஏற்படும் இக்குற்ற நீக்கத்திற்கு இருபத்தைந்து (பஞ்சவிம்சதி) கலச ஸ்நபன பூசை செய்து மூர்த்திக்கு அபிடேகம் செய்தல் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

ஒரு மூர்த்தியைப் பிறிதொரு மூர்த்தியாக்கக் கூடாது. இதனைச் செய்தவர், செய்வித்தவர்கள் துயரடைவர், சிவதேகத்தில் விஷ்ணுவின் தோற்றம் அலங்கரிக்கப்பட்டால் அத்தேசத்துச் சுப கருமங்களுக்குக் கேடு விளையும், மகாமாரியும் ஏற்படும். இக்குற்றத்தினை அகற்றுவதற்காக இருபத்தைந்து (பஞ்சவிம்சதி) கலச ஸ்நபனாபிடேகம் செய்தல் வேண்டுமென வீராகமத்தில் கூறப்பட்டுள்ளது.

உறுதியான மூர்த்திகளில் விகற்பமான அலங்காரஞ் செய்தால் அக்குற்றத்திற்காக பிரபுக்கள், அரசர்கள், தருமகர்த்தாக்கள் குறைபாடுடைய அங்கங்களை உடையவராவர். இக்குற்றத்தினை நீக்குவதற்காக பதினாறு (சோடச) கலக ஸ்நபனாபிடேகம் பண்ணி, மூல மந்திரத்தினை நூறு தடவை செபித்தல் வேண்டும். என பீமசங்கிதை கூறுகின்றது.

மேலும் பரிவாராலயங்களில் நிறுவப்பட்டள்ள மூர்த்தங்களையும் எழுந்தருளச் செய்யும் விக்ரஹங்களையும் மாற்றி விபரீதமாக அலங்கரிப்பின் விபரீதமான பலன் உண்டாகும் என வீராகமம் குறிப்பிடுகிறது.

காமிகாமம், நடராஜ மூர்த்தியில் கல்யாண சுந்தரரையும், கல்யாண சுந்தரத் தோற்றத்தினை நடராஜ மூர்த்தியிலும் விகற்பமாக அலங்கரித்தாலும், சக்தியோடு கூடிய மூர்த்திகளை சக்தியின்றி அலங்காரம் செய்யினும் குற்றமுண்டாகும். இக் குற்றத்தினை நீக்குவதற்காக முதலில் சாந்தி செய்த பின்னரே ஏனைய செயல்களைச் செய்ய வேண்டும். இதனை காமிகாகமம் கூறுகின்றது.

சக்தித் தோற்றங்களைச சிவத் தோற்றமாகவும், சிவத் தோற்றங்களைச் சக்தித் தோற்றமாகவும் விபரீதமாக அலங்காரம்

செய்வதால் அரசனுக்குத் தோல்வி ஏற்படும். இக் குற்றத்தினை நீக்குவதற்கு மூலமந்திரம் ஆயிரமும், சங்கித மந்திராகுதியும். பதினாறு கலச ஸ்நபனாபிடேகமும் செய்ய வேண்டும் எனக் காமிகாகமம் கூறுகின்றது.

இவற்றிலிருந்து எந்த ஒரு மூர்த்தியையும் அதற்கு வேறான மூர்த்தியாக விபரீமாகசட செய்தால் அது குற்றமெனவும், அக்குற்றம் நீக்குவதற்குச் செய்ய வேண்டிய பரிகாரமும் விதிக்கப்பட்டிருப்பதை நோக்கலாம்.

உக்கிரமூர்த்தியில் அமைதிக் தோற்றத்தினையும், சாந்த மூர்த்தியில் உக்கிரத் தோற்றத்தையும் விபரீதமாக அலங்கரிக்கப்பட்டிருப்பின் அடியவர்கள் அவற்றைத் தரிசிக்கக் கூடாது. அவ்வாறு தரிசித்தால் பூர்வ புண்ணியப் பயன்கள் அழிவெய்தும் என ரௌரவாகமம் கூறும்.

நிற்பனவாக அமைந்த மூர்த்திகளை நிற்பனவாகவும், இருக்கும் மூர்த்திகளை இருப்பனவாகவும், நிருத்த மூர்த்தியை நிருத்தற் தோற்றமாகவும், சயனத் தோற்றமுடைய மூர்த்தியை சயனத் தோற்றமுமாகவே அலங்கரித்தல் வேண்டும். இவற்றிலிருந்து, மூர்த்திகளின் தோற்றம் உள்ளவாறே அலங்கரித்தல் வேண்டும். இவ்வாறு அலங்கரிப்பதால் அரனுக்கு வெற்றியும், மக்களுக்கு சுகத்தையும் தரும். இக்கருத்தைக் காமிகாகமம் தெளிவாகக் கூறி மாற்றி விபரீதமாக அலங்கரித்தல் சாத்திர விரோதமெனத் தெளிவாகக் கூறுகின்றது.

மேற்கூறிய விபரங்களிலிருந்து மூர்த்திகளை அவ்வத் தோற்றங்களிலேயே அலங்கரித்தல் வேண்டும் என்பதும் விபரீத அலங்காரம் புரிதல் குற்றம் எனவும் இதற்கேற்ற பரிகாரங்களும் கூறப்பட்டுள்ளன. உரிய வஸ்திரங்கள், யோக்கியமான புஷ்ப மாலைகள், உத்தமமான ஆபரணங்கள் ஆகியவற்றால் மூர்த்திகளை அலங்கரித்து வழிபாடல் வேண்டும். இக்கருத்தினைச் சுப்பிர பேதாகமம் பின்வருமாறு கூறுகின்றது. “பல்வகை மலர்களால் மூர்த்திகளை அலங்காரஞ் செய்வோர் பலவகைப் போகங்களை எய்துவர். வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் மகாதேவருக்குச் சமர்ப்பிப்பவர் பெரும்பதவியை அடையவர்”, திருநாவுகடகரசு

நாயனாரும் இது தொடர்பாக

"விண்டமாமலர் கொண்டு விரைந்து நீர்
அண்ட நாயகன் றன்னடி சூழ்மின்கள்
பண்டு நீர் செய்த பாவம் பறைந்திடும்
வண்டு சேர் பொழில் வான்மியூரீசனே" எனவும்

"அண்டமே யாதியா யருமறையோ டைம்பூதப்
பிண்டமா யுலகுக்கோர் மெய்ப்பொருளாம் பிஞ்ஞகனைத்
தொண்டர் தாமலர் தூவிச் சொன்மாலை புனைகின்ற
இண்டைசேர் சடையானை யென்மனத் தேவைத்தேனே" எனவும்

பல இடங்களில் சிவாகமங்களை அடியொற்றிய மூர்த்தியலங்காரத்தின் சிறப்புக்களைப் போற்றியுள்ளார்.

மகேஸ்வர மூர்த்தங்கள் பல பேதங்களையுடையன. விநாயகர், சுப்பிரமணியம் வடிவங்கள் சிவனது, அருள் வடிவங்களே. சிவனின் திருவருளே சக்தி, மூர்த்திகளை விதிப்படி அலங்கரித்தல் வேண்டும், அசுத்த வஸ்திரங்கள் சாத்துதல், போலி மாலைகளைச் சூட்டல், போலி ஆபரணங்கள் அணிதல், போலிக் கரங்கள், கால்கள் வைத்துப் கட்டல் ஆகியன குற்றங்கள். ஒரு மூர்த்தியை இன்னொரு மூர்த்தியாக அலங்கரிப்பதும் தோஷமாகும். இவ்வாறு செய்தால் ஆகமங்களில், ஏனைய நூல்களிலும் தோஷ நிவர்த்தியை அவசியம் செய்து இனிமேல் இக்குற்றம் புரிதல் கூடாது.

மூர்த்திகளை உரிய முறைப்படி அலங்கரித்து, வழிபடுவர்கள் இம்மை, மறுமை ஆகிய இரண்டிலும் சிறந்த பயன்களை எய்துவர்.

சிவாலயங்களிலும், ஏனைய ஆலயங்களிலும் சிவாகம மரபிற்கேற்ப மூர்த்தி அலங்காரத்தினை நிகழ்த்தல் சாலச் சிறந்தது.

# PURANIC SAIVISM IN CEYLON DURING THE POLONNARUWA PERIOD

The origin of saivism can be traced back to a great antiquity. The materials provided by the finds in Mohenjodaro and Harappa help to great extent to trace the origin of Saivism. A few glimpses into Saivism can also be obtained from the vedic literature. No doubt move information is available from the Epics but the most profuse literary records relating to saivism are the Puranas. Therefore, for any fairly comprehensive and detailed statement on Saivism, we have to depend mainly on them. The influence of the Puranic ideas in the image / cult / and the temple can be seen during the Polonnaruwa period.

The excavations at Polonnaruwa have brought to light quite a good collection of Saiva bronze images. Further an ancient Hindu Shrine designates as Siva Devale No. 2 has also been discovered. These belong to the period of the Cola occupations in ceylon between the eleven year of Mahinda V (A.D.993) and the conquest of that city by Vijayabahu I in A.D. 1070.

The discoveries of the images were made by H.C.P. Bell and C.E Godakumbura. The discoveries of H.C.P . Bell have been discussed and catalogued and illustrated by Ananda Coomarasamy. The images include: Siva as Nataraja 'The Lord of Dance ', Parvati 'the Sakti of Siva', Siva as Somaskandamurthi, Nandin 'Siva's Sacred Bull', Candesvara , Gnanasambandar, Appar, Sundaramurti and Manikkavacakar. In 1960, C.E. Godakumbura discovered a collection of Saiva bronzes which consisted of Siva as Nataraja , Siva , as

Somaskandamurti, Siva as Batukabhairava. Parvati as Sivakamasundari, Parvati, Ganesa, Candesvara, Sundaramurti and Karaikkal Ammaiyar.

In 1916, Sir, P. Arunachalam delivered a lecture entitled "Polonnaruwa Bronzes, Siva worship and Symbolism." In this lecture he gives a brief account of the Saiva bronzes discovered by H.C.P. Bell. Navaratnam's **Ten Intiya Sirpavativankal** contains some of these bronzes. Cartman in his work entitled **Hinduism in Ceylon has made a cursory mention of these images. In 1961** C.E. Godakumbra delivered a lecture on the images discovered by him. C.S. Navaratnam too has a few comments to make on these images. The other works do not pay sufficient attention to these bronzes.

A detailed and an exhaustive treatment on the Puranic Saivism has been attempted by Kailasanatha Kurukkal in his thesis submitted to the University of Poona for the Degree of Doctor of Philosophy. This thesis deals with various cults associated with Siva and it contains much useful information to our studies. It is regretted that this work has not been published.

The Vedas, the Brahmanas, the Aranyakas and the Upanisạds do not give any positive clues to prove the existence of image worship or even the place of worship such as temples few references to cemples and image worship are available only in the Sutra texts. No doubt the rise of the image worship formed the basis of the temple cult. Once the cult of the temple became established along with the temple worship, the new modes of worship such as yajna, tapas, tirthas, stotras dhyana, became more popular during the Puranic period.

The discovery of the Siva Devale No. 2 and the image points to the existence of the temple as a religious institution. A brief study of the various Gods as treated in the Puranas would give the necessary background for our study.. As the fashioning of the various gods and goddesses have been done in accordance with the picture of the deities as presented in the Puranas, it would help to study the descriptions of these deities in the Puranas.

## SIVA IN THE PURANAS

The manifestations of Siva in various forms have been described in Puranas. The images discoverd in Polonnaruwa confirm the description of Siva in the Puranas. The Puranas describe Siva as the wearer of matted hair. His hair is pictured as scattered or dishevelled. He possesses three eyes and the third eye is located on the forehead. The number of hands ascribed to Siva in generally four. His neck bears a mark caused by the drinking of poison.

Generally he is described as the wearer of skin. Usually the skins of elephant, lion and tiger are mentioned. He is often described as besmearing his body with ashes. Serpents constitute for the most part his ornaments. They serve as bangles, armlets and girdle. The crescent moon is said to have decked the matted hair of Siva. Ganges is also regarded as a special ornament. He is often described as roaming about in the cemetery wearing the garland of skulls. Vrsabha is the chief vehicle. Kailasa is his principal abode.

Siva's personality is composed of two elements, one male and the other female. The features of each sex are evenly attributed. The physical features of ardhanarisvara form is described in Matsya Purana.

Siva is referred to as the 'god of dance, Nrtyasila and Nartanasila are the epithets attributed in the Puranas. In this connection, it should be noted that the representations of Siva as the dancing god is more prominent in the Tamil land. But the Puranas in Sanskrit provide the basis for this concepts of Siva

The representations of Siva Batukabhairavamurti and Somaskandamurti too have a Puranic background. Siva is mentioned as the god of destruction. But sometimes he is represented as the god of creation and preservation. He is also said to perform the five - fold functions.

## NATARAJAMURTI

Among the bronzes of Polonnaruwa which portray the dance of Siva all except one portray the mystic dance of Siva. The other form portrays Siva in a half - dancing - pose called Sandhyanrttamurti (Lord of twilight dance). It should be noted that the Nataraja form is the favourits symbol of Siva worship in South India and Ceylon. It is in the Tamil Country that this dance had evolved so as to reach its fullness. The best form can be seen in the sacred shrine at Chidambaram. Parvati gets the name of Sivakamasundari when she is with Nataraja.

The main characteristics of both this god and his consort as represented in Nataraja images conform to the Puranic descriptions. For instance, Siva wears matted hair, is three eyed, wears a skin, carries Ganga and the crescent moon, wears serpents for his ornaments and physical featıres of Arthanarisvara form is represented in the images.

The references to mystic dance of Siva represented in the Nataraja bronzes can be seen in the hymns in Tamil too. A work in Tamil speaks of a god who in his dancing pose reveals himself as the five sacred letters which constitute the mantra par excellence of the Saivites.

The agamas conform to the Puranic ideals and mention the various details relating to the construction, installations and worship of Nataraja images.

## BATUKABHAIRAVAMURTI

Often the Puranas refer to this terrible aspect of God Siva. Siva's bhairava form is connected in the Purana with several episodes.

Brahma once became extremely haughty and regarded himself as an equal of Siva because of his five faces. In order to make him realise his fault, Siva assumed the bhairava form and clipped off his fifth head.

There is another puranic episode. According to it the demon Andhaka oppressed the gods on the strength of the boon which he had obtained from Brahma. Thereupon Siva assumed the bhairava form and killed the demon.

On the basis of such episodes mentioned above, Siva is conceived, installed and worshiped as a dreadful god. In practices, this image is assigned only a subordinate place in the system of worship. At times he is identified with Siva. The place assigned to him in the temple is the area adjoining the outer gate. Moreover, he is considered as the guardian of the temple. He has a dog as his vehicle and is always represented naked.

The details relating to the construction, installation and worship of bhairava images have been given in the Agamas.

Among the Polonnaruwa finds there is only one image of Siva as Batukabhairavamurti.

## SIVA AS SOMASKANDAMURTI

This representation of Siva too has a Puranic background. The Puranas relate at several places how Siva and Paravati went to Saravana when their son Kartikeya was born. Siva and Uma took the child and embraced him. The Somaskandamurti presumably portrays this happy moment while Siva and Uma enjoyed the company of Skanda.

In this representation Siva is featured with a single face, Four arms, the right leg hanging down and the left one folded and laid on the seat. The figure is clad in a garment of skin and **Upavita**. The god is represented as holding a mrga and an axe in his hands. The other two hands being in the abhaya and the varada poses. Skanda is shown in middle .

Uma is represented with two arms, two eyes and two breasts. Her right leg is laid on the seat and the left one hangs down.

The Somaskanda group is always made of bronze and is regarded as an **Utsava vigraha** meant to be taken in procession. In temples of Siva,.this representation holds a position second in importance to the central shrine (Mula vigraha).

Among the Polonnaruwa finds only two images of Siva in the Somaskanda group have been discovered . In one group Skanda is missing and in the other Uma and Skanda are missing. The later group has other peculiarities when com pared with other statues of Siva in this representation. This status has the right leg poised up. Generally the facial features show excellence and the body of the figures are well proportioned.

## SAKTI IN THE PURANAS

The cult of Sakti or Mother Goddess can be traced back to the Mohenjodaro period. Though in the Vedic texts, the worship of goddesses is mentioned, it is in the Puranas she is regarded as supreme. They describe her as the most powerful being and at the same time as the consort of Siva and therefore subordinate to him.

The Puranas speak of two distinct existences of the goddess. Earlier she was daughter of Daksa and later reborn as Parvati. In both the existence she had Siva as her husband . The wedding ceremony of Siva has been described in detail. There are references in the Puranas according to which she recognizes Siva as the highest godhead accordingly practices tapes in his honour.

For the purpose of worship, Sakti is always featured with a single head, two arms in one of which she wields a lotus. The other hand hangs down. This mode of portrayal of Sakti has been followed throughout the Polonnaruwa period which is interpreted as expression of subordinate nature of Sakti. Among the bronzes, we find the portrayals of Sakti as Sivakami or Parvati.

## GANESA

Ganesa occupies an important position in the religious ideology of the Saivites. All the religious rites begin with the worship of this god. The immense capacity of Ganesa in removing the obstacles has been emphasised in the Puranas. He is represented as the son of Gowri and as possessing the head of elephant. He empowered by Siva to remove all the obstacles.

The worship of other deities too are allowed within the fold of Saivism. The elaborate worship of Siva does not begin or end abruptly with the worship of Siva alone. The worship is always preceded by an invocation to Ganesa and wound up with obeisance to Candesa.

In the Puranas, he is considered as an ancillary deity of Siva and also as the leader of the Ganes. In temple Musaka is chosen as his vehicle, he is figured with an elephant head, four arms, three eyes and one tusk. Only one bronze image of Ganesa has been discovered.

## SKANDA

The worship of Skanda occupies a prominent position in South India and Ceylon. Skanda is regarded as the son of Siva. The Puranas describe him as a child. He is often worshipped as a child and also as hero endowed with youth and exquisite beauty. In South India and Ceylon he is termed as Muruka. Among the Buddhists and Hindus he is the god par excellence.

In Tamil texts he is described as the Lord of Kurinci. Elaborate description of Murukan can be seen in Tirumurukarrupatai and Paripatal. The function of leading the army of gods has been assigned to him in the puranas.

The Puranas present him as the possessor of six heads and twelve arms. Sikhi or Mayura is often mentioned as his vehicle . Thus he is called Sikhivanaskanda (or Mayuresa). He was brought up the six Krttikas and thus received the name of Kartikeya. The six babies originally born separately were welded together into one (Skanna) thus the god received his name Skanda.

Skanda appeared to be a deity in whom were amalgamated many legends and traditions. Various Puranic accounts have been contributed to the origin of this god.

The opposite picture of this god has been given in the Puranas. One portrays him as a bachelor god while the other presents him as a young hero married with two wives. In Maharastra, Kartikeya is regarded as a bachelor god. But in South India and Ceylon he is shown with two wives Valli and Davasena.

The Agama and the Kurmaratantra have in confirmity with the Puranic portrayal of Skanda, prescribed the construction of the image of Skanda in various poses. Of these one portrays god with six faces and twelve arms. Provision is also made for images with one head and four arms.

Only one bronze of Sihlhivakanaskanda with one head four arms has been discovered.

## NANDIN

Among the ancilliary deities, Nandin occupies a prominent place. He is always represented with the features of a bull. The Puranas refer to him as a great devotee and an attendant of Siva. He is empowered to discharge the functions of guarding the entrance of the abode of Siva. Puranas give an elaborate description of Nandin's installation as the chief of the Ganas. He is also considered as the vehicle of Siva.

Only one bronze image of Nandin has been discovered.

## SAIVA SAINTS

The Puranas have made provision to set up image s for devotees. We have the earliest reference to the worship of Candesvara in the Sanskrit Puranas. Having this as the precedence, the image of well known sixty three saints have been constructed installed and worshipped in South India and Ceylon. Among them the image of six saints have been discovered at Polonnaruwa.

Certain characteristic features mark the particular saints. For instance, Tirugnanasambandar is at once recognized by symbols in his hands. Apparswamigal would be easily recognised by a staff with a triangular metallic piece at its end (ulavaram) which had been used for removing grass grown in temples. For, he had undertaken to do that service in all temples. Sundaramoorthy is portrayed in a bridegroom attire. Manikkavacakaswami is easily identified by a leaf manuscript in his hand, matted hair and a garland

made of rudraksa beads. The image of Karakkal Ammaiyar is recongnised by a demoness attire and that of Candesvara by folded arms

In the Saiva rituals , these saints too occupy a prominent place. But Candesvara is always worshipped at the end of rituals. Candesvara helps the worshipers to enjoy fruits of their religious performances. Siva himself is said to have declared that the worship offered to him would be ineffective if due obeisance was not paid to Candesvara. The remnants of all that has been offered to Siva are offered to Candesvara. It is believed that the god is always engaged in meditation on Siva. The Worshipers in order to draw his attention clap their hands . Usually this image is installed in close proximity to the central shrine of the temple.

## TEMPLE.

It was during the Polonnaruwa period the art of building temples had developed to a remarkable extent in South India. The Colossal temples of South India and the tall gopurams and pinnacles of the central shrines are distinctive representatives of the temple architecture in India.

The Colas constructed temples with granite stones. They repaired as well as extended their structures. The kings were not satisfied merely by building temples but also made adequate provisions for their proper maintenance .

The definite references to the temples are found only in the Puranas. One Purana gives a description of a temple built in favour of Siva by Visvakarma. It makes provisions for Vimanas, gopurams and prakaras. The various styles of temple structures such as Dravida, Nagara and Vesara have been mentioned . According a very high place in the next world.

The Colas following the Puranic footsteps made a ramarkable contribution to the art of building temples in South India. In Ceylon too their influence can be clearly seen in Siva Devala No.2. The Siva Devale No.2 is the only monument which proves the existence of temple worship in the Polonnaruwa period. The temple is of granite and lime-stone. It conforms to the orthodox design and it is a grabhagrha, antarala, and adardhamandapa. There are also provisions for the shrines of various images.

All these instances make us to a conclusion that the Puranic ideas have influenced a great deal especially in the image cult and temple cult. It is clear that these bear testimony to the above conclusion

பிள்ளையார் அச்சகம்